# சோழர் சரித்திரம்

## முதற் பாகம்.

(குறிப்புரையுடன்)

இது

திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் காலேஜ்

தலைமைத் தமிழாசிரியராகிய

நடுக்காவேரி

**மு. வேங்கடசாமி நாட்டார்**

எழுதியது.

திருச்சிராப்பள்ளி :

ஜெகம் அண்டு கோ., டாட்ஸன் பிரஸில்

அச்சிடப்பெற்றது.

---

1928

பதிவு செய்தது.]

[விலை : ரூபா 1.

# உள்ளுறை.


| எண். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| ... | முகவுரை | i |
| I | தமிழகத்தின் பழமை | 1 |
| II | சோழ நாட்டின் பழமை | 4 |
| III | சோழர் குடி | 6 |
| IV | மனு | 11 |
| V | முசுகுந்தன் | 16 |
| VI | சிபி | 26 |
| VII | காந்தன் | 32 |
| VIII | தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் | 34 |
| IX | கரிகாலன் | 35 |
| X | கிள்ளிவளவன் | 57 |
| XI | நலங்கிள்ளி | 68 |
| XII | தித்தன் | 72 |
| XIII | பெருங்கிள்ளி | 74 |
| XIV | நல்லுத்தரன் | 77 |
| XV | கோப்பெருஞ்சோழர் | 79 |
| XVI | கோச்செங்கட்சோழர் | 90 |
| XVII | அரசியல் | 97 |
| XVIII | கைத்தொழில் வாணிகம் | 102 |
| XIX | கல்வி | 103 |
| XX | சமயம் | 105 |
| ... | குறிப்புரை | 115 |

# முகவுரை.

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" எனப்பெற்ற தமிழகத்தின் வரலாறு மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்த தென்பதனைச் சரித்திர அறிஞர் நாளுக்குநாள் நன்குணர்ந்து வருகின்றனர். தமிழ் நாட்டின் சரித்திரம் தொன்று தொட்டு அதனை ஆண்டுவந்த சேர சோழ பாண்டிய வேந்தர்கள், இடைக்காலத்தே ஆட்சி புரிந்த பல்லவர்கள் என்போரின் வரலாறுகளில் பெரும்பாலும் அடங்கியிருக்கிறது. சரித்திர நோக்கில் ஏனை மன்னர்களின் வரலாற்றினும் சோழர் வரலாறு விரிவுடையதாகத் தோன்றுகிறது. ஆங்கிலத்தில் எழுதிப் பயிலப்பெற்று வருகின்ற இந்திய தேச சரித்திரப் புத்தகங்களில் தமிழ் நாட்டின் வரலாறு எங்கோ ஒரு மூலையில் சிறிதளவாகக் காணப்படுகின்றது. தமிழ் நாட்டின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்குரிய சாதனங்களும் சில பெரியார்களின் அரிய முயற்சியால் முப்பது நாற்பது ஆண்டுகளாகவே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் நாட்டின் பழைய வரலாறு, நாகரிகம் முதலியவற்றைத் தாய்மொழி வாயிலாக நம் இளைஞர்கட்கு நன்கு கற்பிக்க வேண்டுமென்னும் உணர்ச்சி இக்காலத்தில் இந்நாட்டுப் பெரியார் பலரிடை உண்டாகியிருப்பது வெளிப்படை. இந்நிலைமையில்,

"குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தான்
புரண்டிட் டோடித்
தரங்கநீர் அடைக்க லுற்ற"

அணில் போன்று, யானும், சோழர் சரித்திரத்தின் முதற் பகுதியாக இதனை எழுதலாயினேன்.

பத்து ஆண்டுகளின் முன் நாட்டுக்கோட்டை வணிகர்களின் ஊர் ஒன்றில் தமிழன்னையின் தவப்புதல்வராகிய மகா மகோபாத்தியாயர் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தலைமையின் கீழ் நடந்த பேரவையில் யான் சோழர் சரித்திரம் என்னும் பொருள் குறித்துப் பேச நேர்ந்தது. ஐயரவர்கள் முடிப்புரையில் அதனைச் சிறிது பாராட்டிப் பேசியதுடன், சென்னையிலிருந்து என் நண்பராகிய பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்கட்கு விடுத்த கடிதத்திலும் அதனைக் குறிப்பிட்டெழுதி யிருந்தார்கள். தலைமை சான்ற புலமையுடைய பெரியாரொருவரின் மதிப்பிற்கு அச் சிற்றுரை இலக்காயினமையின், பின்பு அதனை எழுத்துருவிற் கொணரும் ஊக்கம் எனக்கு உளதாயிற்று. சிற்சில பகுதிகளைச் சில தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியிட்டேன். அங்ஙனம் வெளியானவற்றைப் பின்பு செப்பஞ் செய்தும், முன் எழுதாதிருந்த பகுதிகளை எழுதிச்சேர்த்தும் இப்புத்தகத்தை வெளியிடலானேன்.

இதிற் கூறப்பெற்ற வேந்தர்களில் மனு, முசுகுந்தன், சிபி, காந்தன், தொடித்தோட் செம்பியன் என்போர் கால வரையறைக்கு உட்படாதோராவர். அவருள்ளும் முசுகுந்தனானவன் சரித்திரக் காரர்க்கு முற்றிலும் புறம்பான பழம்பிறப்பு, வானவர், அவுணர் என்னும் செய்திகளுடன் தொடர்புடையனாகின்றான். எனினும், அன்னோர் சோழகுல முன்னோராகக் கொள்ளப்பெற்று அவர் வரலாறுகள் நல்லிசைப்புலவரின் செய்யுட்களிற் பயின்றிருத்தலானும்,

பல நற்பொருளை அறிவுறுத்துவன ஆகலானும் இந் நூலிற் கூறப்படுதற்கு அவர்கள் முற்றிலும் உரிமையுடையராவர். அன்றியும்,

"கொற்ற வள்ளை யோரிடத் தான"

என்னும் தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரவுரையில், 'அவுணரான் முற்றப்பட்ட துறக்கத்தினை அகத்துழிஞையானாகி மனுவழித்தோன்றிய முசுகுந்தனோடு இந்திரன் காத்தாற்போல்வனவும் பிறவும் தேவர்க்குக் கூறுதலால்' என நச்சினார்க்கினியர் உரைப்பது போன்றவற்றின் பொருள் விளக்கத்திற்கும் அவர் வரலாறுகள் தமிழ் மக்களால் ஒருதலையாக அறியத்தகுவன வாகும். கரிகாலன் முதலிய ஏனை மன்னர்களின் வரலாறுகட்கு அவர்கள் காலத்தில் விளங்கிய புலனழுக்கற்ற சான்றோராகிய நல்லிசைப்புலவர்கள் நேரிற் கண்டு கூறியனவும், சிறிது பிற்காலத்திருந்த புலவர்கள் அறிந்து கூறியனவு மாகிய புறச்சான்றுகளும், ஒரோவழி அம்மன்னர்களே கூறியனவாகிய அகச்சான்றுகளும் உண்மையின் அவற்றை உறுதியுடைய சரித்திரமாகக்கொள்ளல் தகும். கல்வெட்டும், செப்புப் பட்டயமுமாகிய கருவிகள் கிடைக்கப் பெறாமையொன்றானே அறிவுடையோர் இவை சரித்திரமாகா என ஒருபொழுதும் கூறத்துணியார்.

கல்லூரி மாணவர்களுக்கேயன்றி உயர்திறப் பள்ளியிற் (ஹைஸ்கூலில்) படிப்போர்க்கும் நன்கு விளங்கவேண்டுமென்னும் எண்ணத்தினால் எளிய நடையில் கூடியவரையிற் சந்தி பிரித்தெழுதியும், மேற்கோள் பலவற்றுக்குப் பொருள் மாத்திரம் தந்தும், எடுத்துக் காட்டிய செய்யுட் பகுதிகட்குப் பொருள் விளக்கியும் இதனை எளிதாக்கியிருக்கின்றேன். இறுதியிற் குறிப்புரையும் எழுதிச்சேர்த்துளேன். கல்வி கேள்விகளில் மிகவும் குறைபாடுடைய

யான் எழுதிய இதன்கண் பல பிழைகள் இருத்தல்கூடும். அறிவுடையோர் அவற்றைப் பொறுத்து, இத்தகைய பணியில் சிறியேற்கு மேன்மேல் ஊக்கமுண்டாக்குவார்கள் என்றும் துணிபுடையேன்.

இதனை அச்சிடுதற்கு எழுதும் பொழுது சிழைச்செவற்பட்டி, மீனாட்சிசுந்தரேசர் கலாசாலைத் தலைமையாசிரியரும் என் நண்பரும் ஆகிய திருவாளர் அ. மு. சரவண முதலியாரவர்கள் புரிந்த உதவி பாராட்டற்குரியதாகும். வழக்கம்போல் ஊக்கமெடுத்து இதனை நன்கு அச்சிட்டுத்தந்த டாட்சன் அச்சுக்கூடத் தலைவர் திருவாளர் V. P. ஜெகநாத பிள்ளையவர்கட்கு நன்றியறிதலுடையேன்.

ந. மு. வேங்கடசாமி.

உ

# சோழர் சரித்திரம்.

## முதற் பாகம்.

## I

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்"

என்றாற்போல அறிஞர்களாற் புகழப்பெற்ற நம் தமிழகத்தி லிருந்து தொன்றுதொட்டு அரசுபுரிந்து வந்தோர் சேர, பாண்டிய, சோழர் என்னும் மூவேந்தராவர்.

**தமிழகத்தின் பழமை.** தமிழகம் என்பது ஒருகாலத்தே தெற்கில் கடல் கொள்ளப்பட்ட குமரி (லெமூரியா) கண்டத்தின் தென்கோடியிலிருந்து விந்தமலை வரையில் தொடர்புற்றுக்கிடந்த பெருநிலப் பரப்பாகும் என்று இப்பொழுதைய ஆராய்ச்சிவல்லார் துணிகின்றனர். குமரி கண்டமானது மிக்க பழமை வாய்ந்ததென்றும், அவ்விடத்திற்றான் முதன் முதல் மக்கள் தோன்றி யிருக்க வேண்டுமென்றும் நில நூல் வல்லாரும், வான நூல் வல்லாரும், தொல்லுயிர் நூல் வல்லாரும் ஆராய்ந்து கூறுகின்றனர். தென்னாடு கடல் கொண்ட செய்தி, பிறநாட்டு ஆராய்ச்சியாளராற் கூறப்படுவதேயன்றி, நம் பழைய தமிழ் நூல்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. கலித்தொகை, சிலப்பதிகாரம், இறையனாரகப்பொருளுரை, தொல்காப்பிய வுரை, சிலப்பதிகாரவுரை என்பன கடல் கோளைத் தெரிவிக்கின்றன. சுருங்கச் சொல்லின் தமிழகம் என்பது பல்லூழி காலமாக நன்மக்களின் பிறப்புக்கும், வாழ்க்கைக்

கும் நிலைக்களனாய் விளங்கிவருவதொரு நாடு என்று கூறுதல் அமையும். பரதகண்ட முழுவதுமே தமிழகம் என்பது ஒரு சாரார் கொள்கை. பிற்காலத்தில் (பிற்காலம் எனினும் இப்பொழுதைக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு) வடக்கில் வேங்கடமும், தெற்கில் குமரியாறும், கிழக்கிலும் மேற்கிலும் கடலும் எல்லையாகவுடைய நிலமே தமிழகம் எனப்படுவதாயிற்று. இவ்வெல்லையிலிருந்து ஆட்சிபுரிந்தோரே மூவேந்தராவர்.

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளின் முன்பே தமிழ் மன்னர் ஆட்சியில் தமிழகமானது செல்வத்திலும், நாகரிகத்திலும் சிறந்திருந்த தென்பதற்கும், எகிப்து, கிரீசு முதலான தேயங்களோடு வாணிகம் நடத்தி வந்த தென்பதற்கும் கிறிஸ்தவர்களுடைய பழைய மதநூலும், மேல் நாட்டு யாத்திரைக்காரர்களின் குறிப்புகளும் முதலானவையே சான்றாகவுள்ளன. பாரத காலத்திலே சேர, பாண்டிய, சோழ நாடுகள் மிக உயர்ந்த நிலையில் இருந்தன. பாண்டு மைந்தனை அருச்சுனன் பாண்டி நாட்டரசன் மகளை மணஞ்செய்து கொண்டான். பாரதப்போரிலே மூவேந்தரும் பாண்டவர்க்குத் துணையாய் நின்று போர் புரிந்த செய்தியைப் பாரதத்திலிருந்தே அறியலாகும். உதியன் சேரலாதன் என்னும் சேரமன்னன் பாண்டவர் சேனைக்குப் போர் முடியும்வரைப் பெருஞ்சோறு அளித்துக்காப்பாற்றி, சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என வழங்கப்பெற்றான் என்பதனை,

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என்னும் புறப்பாட்டு அறிவுறுத்தும். பாண்டியன் ஒருவன் பாண்டவர் வெற்றிக்குக் காரணமாயிருந்தான் என்பது,

"பாரதப்போர், செற்றானுங் கண்டாயிச் சேய்".

என்று நளவெண்பாவிற் குறிக்கப்பெற்றுள்ளது. சோழன் ஒருவன் பாண்டவ சேனைக்கு முழு உதவியும் புரிந்தனன் என்னும் செய்தியை,

"தாங்கள் பாரத முடிப்பளவு நின்று தருமன்
றன் கடற்படை தனக்குதவி செய்த வவனும்"

என்று கலிங்கத்துப்பரணி எடுத்துக்காட்டுகிறது. இவை களிலிருந்தே, நூற்றுவர், ஐவர் என்னும் இருதிறத்தாரில் யாவர் பக்கம் நீதியிருந்திருக்க வேண்டுமென்பதும், பாண்டவரது வெற்றியில் பெரும் பங்குக் குரியவர் யாவர் என்பதும் ஒருவாறு துணியலாகும்.

இராமாயணகாலத்திலும் மூவரசர் நாடுகள் மிகமேன்மை யுற்றிருந்தன என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. பாண்டிய ரது தலைநகரம் கபாடபுரம் எனப் பெயர் சிறக்குமாறு, அதன் கோட்டை வாயிற் கதவு பொன்னாற் செய்யப்பட்டு, முத்தாலும் மணியாலும் அலங்கரிக்கப்பெற்று விளங்கிய தனை வால்மீகி தம் இராமாயணத்துக் கூறுவரேல், அக் காலத்தில் தமிழகம் அடைந்திருந்த மேன்மைக்கு வே றென்ன சான்று வேண்டும்? அதற்கு முன்னும்எத்துணைத் தூரம் சென்று பார்க்கினும், மூவேந்தருடைய ஆட்சியின் தொடக்கம் கண்டுபிடிக்கக் கூடியதாயில்லை. அதனாலன்றே தமிழ்க்கடலும், வடசொற் கடலும் நிலைகண்டுணர்ந்த பெரும் புலவராகிய பரிமேலழகர்,

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று"

என்னுங் குறளுரையில், 'பழங்குடி' என்பதற்குச் 'சேர, சோழ, பாண்டியர் என்றாற்போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டுவருங்குடி' என்று பொருள் விரித்தார்.

## II

**சோழ நாட்டின் பழமை.**

இனி, சோழ நாட்டின் பழமையைத் தனியே விளக்கவுறும் சில மேற்கோளும் இங்கே காட்டுதும். கடைச்சங்கப் புலவருள் ஒருவரான கூல வாணிகன் சாத்தனாரால் இயற்றப் பட்ட மணிமேகலைக் காப்பியத்தின் பதிகத்தில், முதல் முப்பத்திரண்டு அடிகளில் புகார் நகரின் பழமை மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. சம்புத்தீவின் தெய்வமாகிய சம்பு என்பாள் சம்பாபதியில் (புகாரில்) தவஞ் செய்துகொண்டிருக்கும்பொழுது, அகத்திய முனிவர் தமது கமண்டலத்தினின்றும் கவிழ்த்து விடுத்த காவிரிப்பாவையானவள் நேர் கிழக்கே சென்று, சம்பாபதியின் பக்கத்தையடைந்து, அகத்தியரால் அறிவுறுத்தப் பட்டு, சம்புத்தெய்வத்தை வணங்கி நிற்ப, அவள் மிக மகிழ்ச்சியுற்று அருகணைத்து, 'தெய்வகண பிண்டங்களையும், பிரமகண பிண்டங்களையும் பிரமதேவர் படைத்த காலத்தில் என் பெயருடையதாகச் செய்த பெரும் புகழ்வாய்ந்த இம்மூதூரை இப்பொழுது நின் பெயருடையதாக்கினேன்; நீ வாழ்வாயாக' என, அன்று தொட்டுச் சம்பாபதி எனவும், காவிரிப்பூம்பட்டினம் எனவும் இருபெயருடையதாக விளங்குகின்ற பழைய பதி; என்பது அதன் சுருக்கம்.

"பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி
கோனிலை திரிந்து கோடை நீடினும்

தாணிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை
தொழுதனள் நிற்பவத் தொன்மூ தாட்டி
கழுமிய வுவகையிற் கவாற்கொண் டிருந்து
தெய்வக் கருவும் திசைமுகக் கருவும்
செம்மலர் முதியோன் செய்த வந்நாள்
என்பெயர்ப் படுத்தவிவ் விரும்பெயர் மூதூர்
நின்பெயர்ப் படுத்தேன் நீவாழிய வென
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்" (பதிகம் 22-32)

என்பது காண்க. பழமையும், பெருமையும் வாய்ந்த பரத கண்டத்திலே சோழர் தலை நகராகிய காவிரிப்பூம் பட்டினம், தனக்கு முந்திய தொன்றின்றித் தானே எவற்றினும் முந்திய பழமையுடையதென்னும் கருத்தன்றோ தண்டமிழ் ஆசானாகிய சாத்தனாரால் இவ்வளவு அழகாக வருணிக்கப்பெற்றுள்ளது.

இளங்கோவடிகளும், சிலப்பதிகார மங்கல வாழ்த்தின் கண்ணே,

"பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
ஒடுக்கங் கூறார் உயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"

என்று புகார் நகரைப் பொதியிலோடும், இமயத்தோடும், ஒப்புமைப்படுத்து, அதனைப் பொதுவறு சிறப்புடையது என்றும் கூறி வைத்தார். சோழ நாட்டின் கண்ணதாகிய திருவாரூர்த் திருப்பதியின் பழமையை, திருநாவுக்கரசு நாயனார் திருத்தாண்டகத்து ஓர் பதிகம் முழுவதிலும் வைத்துப் பாராட்டியிருப்பது சிந்திக்கற்பாலது.

"ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும்விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

என்பது காண்க. இங்ஙனமே இந்நாட்டின் பழமையைக் குறிப்பன மற்றும் பல வுள்ளன. இனி, சோழரது மரபு வரலாறு ஆராய்தற்பாலது.

## III

**சோழர் குடி.**

தமிழ் நாட்டின் பழங்குடிகளினின்றும் தோன்றி அரசு நிலையிட்டுத் தலைவராயினாரே மூவேந்தரும் எனல் வேண்டும். உலகிலே எவ்வகுப்பினரும் சிறிது நாகரிகமுற்ற காலையில், தம்மை ஏனையவரினும் மேம்பட்டவர் என்று காட்டிக்கொள்வதற்காக, சூரியன், சந்திரன், அக்கினி என்பவரில் ஒருவரிடத்திலிருந்தோ அல்லது வேறு யாதாவது ஒரு தெய்வத்தினிடமிருந்தோ தமது மரபு தோன்றியதாகக் கற்பித்துக்கொள்வது வழக்கமாக வுள்ளது. இத்தகைய எண்ணம் தமிழ் நாட்டாரையும் பற்றாமல் விடவில்லை. சூரிய, சந்திர குலக்கற்பனை வட நாட்டரசரிடமும், தமிழ் நாட்டரசரிடமும் ஒருபெற்றியே காணப்படுகிறது. இதுமுதலில் எங்கே தோன்றியதென்பது ஐயப்பாடே. வடமொழிப் புராண இதிகாசங்களிற் சில, வடவரசரையும், தமிழ்மன்னரையும் சேர்த்துப் பிணைப்பனவாக வுள்ளன.

பாரத அரிவமிசம் கூறுவது பின் வருமாறு காண்க; திருமால் உந்தியில் பிரமன் தோன்றினன்; பிரமன் மகன் அத்திரி; அவன் புதல்வன் சந்திரன்; சந்திரனுக்குப் புதனும், அவனுக்குப் புரூரவனும் தோன்றினர்; புரூரவன் மக்கள் ஆயு முதலானவர்கள்; ஆயுவின் மக்கள் நகுடன் முதலானோர்; நகுடன் மக்கள் யதி, யயாதி, சம்யாதி, ஆயாதி உத்தமன் என்ற ஐவருமாவர்; அவருள் யயாதியின் மக்கள் யது, துருவசு, துருகியன், அணு, பூரு என்னும் ஐவரும்; அவருள் துருவசு என்பான் மகன் வன்னி; அவன் மைந்தன் கோபாநு; அவன் புதல்வன் திரைசாநு; அவன் மகன் காந்தமன் என்பான்; அவனுக்கு மகன் மருத்தன்; அவனுக்குத் தத்துமைந்தன் பூருமரபில் உதித்த துட்டியந்தன்; அவன் மகன் கருத்தாமன்; அவன் மகன் ஆக்கிரீடன்; ஆக்கிரீடன் மக்கள் பாண்டியன், கேரளன், சேரன், சோழன் என்போர். இப்பெயர்களிற் சில, வெவ்வேறு புராணங்களிற் சிறிது திரிந்துங் காணப்படுகின்றன. வழி முறைகள் சில கூடக்குறையவும் உள்ளன. விட்டுணு புராணமானது துட்டியந்தன் வரையிற் கூறி, மேற்செல்லாது நின்று விட்டது. அதில், வன்னிக்கும் கோபாநுக்குமிடையே பார்க்கன் என்பான் ஒருவன் கூறப்படுகின்றான்.

அரிவமிசத்தில் கேரளன் வேறு, சேரன் வேறு கூறப்படுவதென்னையோ? இந்நூல் கூறுகின்றபடி தமிழரசர் யாவரும் சந்திரகுலத்தவராதல் வேண்டும். தமிழ் நூல் ஒன்றிலாவது சோழர் சந்திர குலத்தவராகக் கூறப்படவில்லை. கலிங்கத்துப்பரணி, விக்கிரம சோழனுலா முதலியவற்றிலெல்லாம் சோழர் சூரிய குலத்தவராகக்கூறப்படுகின்றனர்.

"செங்கதிர்ச் செல்வன் றிருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட"

என்று மணிமேகலையும் சோழரைச் சூரிய குலத்தவராகவே கூறுகின்றது. இங்ஙனமே பாண்டியர் சந்திர குலத்தவ ராகக் கூறப்படுகின்றனர்.

"திங்கட் செல்வன் றிருக்குலம் விளங்கச்
செங்கணு யிரத்தோன் றிறல்விளங் காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி"

என்று சிலப்பதிகாரம் கூறுவது காண்க. இவற்றிலிருந்து, தமிழரசர் யாவரையும் சந்திர குலத்தவர் என்று கூறும் அரிவமிசக்கதை பிற்காலத்தில் கற்பிக்கப்பட்டதென்று துணியவேண்டியிருக்கிறது. இனி, சோழர் சூரியகுலத் தவராதல் எப்படியென்று பார்ப்போம். கலிங்கத்துப்பரணி, அரசபாரம்பரியத்திற் கூறியிருக்கும் சோழ மன்னர் வழி முறை பின் வருவது:

திருமால், பிரமன், மரீசி, காசிபன், சூரியன், மனு, இக்குவாகு, புரந்தரனை வாகனமாகக்கொண்டு தானவரை வென்றவன் (ககுஸ்தன்), புலியும் மானும் ஒரு துறையில் நீருண்ண அரசுபுரிந்தவன், முசுகுந் தன், தேவர்களுக்கு அமுதமளித்தவன், புறவுக்காகத் துலைபுக்கவன் (சிபி), சோழ மண்டலம் அமைத்தவன் (சுராதிராசன் முதலாக வரு சோழன்), இராசகேசரி, பர கேசரி, காலனிடத்தே வழக்குரைத்தவன், காவிரிப்புனல் கொணர்ந்தவன் (காந்தன்), அகிலலோகமும் வென்று கொண்டவன், இந்திரனைப் புலியாகக் கொடியில் வைத்த வன், ஒரு கடலில் மற்றொரு கடலைப் புகவிட்டவன், தன் குருதியை உண்ணுமாறு அளித்தவன், வாதராசனை (காற்

றிணை) வலிந்து பணிகொண்டவன், தூங்கெயிலெறிந்தவன், வானத்தில் விமானங்களைச் செலுத்தினவன், பிலத்தின் வழியே சென்று நாக கன்னியை மணந்தவன், பொய்கை யார் பாடிய களவழிக்கவிதை கேட்டுச் சேரனைச் சிறையி னின்றும் விட்டவன் (செங்கணான்), பதினாறு நூறாயிரம் பொன் கொடுத்துப் பட்டினப்பாலை என்னும் பாட்டினைக் கொண்டவன் (கரிகாலன்), சேர மண்டலத்தை வென்று சதையநாள் விழாவை ஏற்படுத்தியவன், கங்கையும் கடார மூங் கொண்டவன், கல்யாணியை வென்றவன், கொப்பத் துப் போரிலே வென்று போர்க்களத்தில் முடி கவித்தவ வன், குந்தளரைக் கூடல் சங்கமத்து வென்றவன், அபயன்.

விக்கிரம சோழனுலாவும் இதுபோன்றே கூறிவந்துளது. எனினும், இரண்டிலும் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. காசிபன்மகன் மரீசி என உலாக்கூறுகிறது. உலாவில் கரிகாலன் முன்னும், பரணியில் செங்கணான் முன்னும் கூறப்படுகின்றனர். வேறு சில வேற்றுமைகளும் உள்ளன. இரண்டிலும் பல அரசர்கட்குப் பெயர் கூறாமல் அன்னோர் புரிந்த அருஞ் செயல்கள் மாத்திரமே கூறப்பட்டுள.

திருவாளர் டி. ஏ. கோபிநாத ராவ், எம். ஏ. அவர்கள் எழுதிய சோழ வமிச சரித்திரத்தில் பின் வருமாறு கூறப் பெற்றுளது:

"சோழர்கள் சூரிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வைவச்சுதமனுவினிடமிருந்து பரம்பரையாயிழிந்தவர்கள் என்று அடியில் வரும் பௌராணிகவழியைத் தமக்குக் கற்பித்துக்கொள்கின்றனர். வைவச்சுதமனு, சூரிய வமிசஸ்தாபகனான இக்ஷ்வாகு, முசுகுந்தன், (இவன் மகயெ) வல்லபன், சிபி. இச்சிபியின் பின்பு சோளன்,

இராசகேசரி, பரகேசரி, இராஜேந்திரமிருத்துஜித், வியாக்கிரகேது, அரிகாலன் முதலியவர்கள் ஆண்டதாகச் சொல்வது வழக்கம்.''

இவை எல்லாம் சோழர், சூரிய வமிசத்தவர் என்று தொடர்பு படுத்திக் காட்டுதல் காண்க. சூரிய வமிசத்தில் மாந்தாதா என்னும் சக்கரவர்த்திக்கு மக்கள் மூவரென்றும், அவருள் முசுகுந்தன் ஒருவனென்றும் பாகவதம் முதலிய புராணங்களிலிருந்து தெரிகிறது. மாந்தாதாவின் மகனாகிய புருகுச்சனுடைய வழியில் வந்தோரே அரிச்சந்திரன், சகரன், பகிரதன், ரகு, தசரதன், இராமன் முதலானவர்கள். மற்றொரு மகன் அம்பரீடன் என்பான். முசுகுந்தன் வழி எவ்வாறு பெருகிற்று என்பதை விட்டுணு, பாகவத, கூர்ம புராணங்கள் கூறவில்லை. சோழகுல முன்னோரில் முசுகுந்தனும் ஒருவனாகக் கூறப்பட்டதிலிருந்து முசுகுந்தன் வழியினர் சோழரென்று நாம் கருதலாம். முசுகுந்தனுக்கும் தென்னாட்டிற்கும் உள்ள தொடர்பு மிகுதியைப் பின்பு அன்னோன் வரலாறு கூறும் வழிக் காணலாகும். ஒருக்கால் சோழமன்னரைப் பிறப்பால் சூரிய குலத்திலே பிணைக்கக்கருதியோர், சோழர் முன்னோனுய முசுகுந்தனை மாந்தாதாவுக்கு மகனாக்கி விட்டனரோ என்று சிலர் கருதவும் கூடும். எனினும் புராணங்கள் கூறுகிறபடி முசுகுந்தன் சூரிய குலத்து மாந்தாதாவின் மகனே என்றும், அவன் வழியினரே சோழரென்றும் இப்பொழுது வைத்துக்கொண்டு பார்த்தலே சால்புடைத்தாம். பரணி, உலா முதலியவற்றிற் கூறப்படும் சோழகுல முன்னோரைப்பற்றிய செய்திகள் பல சரித்திர எல்லைக்கு அப்பாற்பட்டன. இப்பொழுது உண்மை யென்று நிலைநாட்டவும் காலத்தால் வரையறைப் படுத்துரைக்கவும்

அருமையாயிருப்பது கொண்டு அவற்றை யெல்லாம் பொய்ம்மை யென்று தள்ளுதலோ, ஆராய்ச்சி இன்றியே எல்லாவற்றையும் முழு உண்மைகளாகக் கொள்ளுதலோ நேரிதன்று. பழைய நூல்களில் புனைந்துரை வகையாற் கூறப்பட்டனவும், சிறிதைப் பெரிதாகவும், ஒன்றைப் பலவாகவும் கூறியுள்ளனவும் இவை இவை என நுண்ணறிவாளர்கட்கு ஒருவாறு புலனாகக்கூடும். அவ்வாறு கூறியனவும் சில நன்மையின் பொருட்டெனின் அவை இகழற்பாலவல்ல. இப்பொழுது உண்மைகாணும் நோக்கத்துடன் ஆராய்ந்து வெளிப்படுப்பன பழங்கொள்கையுடன் ஒரோ வழி மாறுபடின் இவையும் வெறுக்கத் தக்கனவல்ல.

இனி, பரணி முதலியவற்றால் அறியப்பட்ட பழைய மன்னருள் மனு, முசுகுந்தன், சிபி, காவிரி கொணர்ந்தவன், தூங்கெயிலெறிந்தவன், நாக கன்னிகையை மணந்தவன், கரிகாலன், செங்கணான் என்போர் புறநானூறு முதலிய பழைய தமிழ்ச்செய்யுட்களிற் குறிக்கப்படுதலின் இன்னோர் செய்திகளும், சங்கச்செய்யுட்களால் அறியப்படுகின்ற வேறு சில சோழ மன்னரைப்பற்றிய செய்திகளும் முதற் பகுதியில் முறையே கூறிவரலாகும்.

## IV

சோழர் குல முன்னவனாகிய இம் மன்னவன் திருவாரூரிலிருந்து அரசு புரிந்தவன்; தனது செங்கோன்மையினால், மனுவினால் உண்டாக்கப்பட்ட நீதியைத் தன் பெயராகச் செய்து கொண்டவன்; மண்ணில் வாழும் உயிர்கட்குக் கண்ணும் ஆவியும்போன்றவன். இக்காவலன் நெடுநாள் மகப்பே

மனு.

றின்றி யிருந்து அருந்தவமுழந்து ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றான். அவ்விறை மகன் நிறைமதி போல் வளர்ந்து பல கலைகளும் கற்றுணர்ந்து, படைக்கலப் பயிற்சியிலும், யானை யேற்றம், குதிரை யேற்றம் முதலியவற்றிலும் சிறந்து விளங்கினன். அன்னவன் ஓர் நாள் தேரூர்ந்து வீதியிற் செல்லும்பொழுது ஓர் ஆன் கன்று அவனறி யாதபடி துள்ளி யோடிவந்து தேர்க்காலிற்பட்டு உயிர் துறந்தது. உடனே கன்றை யிழந்த தாய்ப் பசு வானது விரைந்து வந்து கதறிப்பதறி வருந்தா நின்றது. அந்நிகழ்ச்சியைக் கண்ட அரசிளங்குமரன் எய்திய துயரம் அளவிடற்பாலதன்று. அறிவு கலங்கித் தேரினின்றும் வீழ்ந்தவனாய், அலறுகின்ற ஆவினை நோக்கி உயிர் பதைத்துச் சோர்வான்; நிலத்தில் உயிர் துறந்து கிடக்கும் கன்றை நோக்கிப் பெருமூச்செறிந்து இரங்குவான்; மலர்தலை யுலகம் காக்கும் மனுவெனும் எங் கோமானுக்கு இப்பழி வந்தெய்த யான் ஒருவன் பிறக்கலுற்றேனே என்று தன்னை வெறுப்பான்; இவ்வாறு வருந்தி, இதற்குச் செய்யலாவதோர் கழுவாய் உளதெனில் எந்தை இதனை அறிதற்கு முன்பே செய்வேன் என்றெண்ணி, மறைவல்ல அந்தணர் இருப்பிடம் அடைந்தான். கன்றை யிழந்த பசுவும் சும்மா இருந்திலது. அளவற்ற துயரத்துடன் அங்குமிங்கும் ஓடியது; அலறியது; அரசனுடைய கோயில் முற்றத்தை யடைந்து அங்கே தூங்கியதாகிய மணியினைக் கொம்பாற் புடைத்தலும் செய்தது. என்றும் அசையாத நாவினையுடைய அம் மணியின் ஓசை பழிப்பறை முழக்கெனவும், பாவத்தின் ஆர்ப்பெனவும், அரசன் செவிகளிற் சென்று புக்கது. உடனே நெஞ்சம் துணுக்குற்றோடி வந்தான்; நிகழ்ந்ததனை அறிந்துளோர்

கூறக் கேட்டான்; ஆவின் உறுதுயர் கண்டான்; தானும் துயரக் கடலில் மூழ்கிக் கரை காணுனாயினன். அத் தன்மையனான அரசன் பின்பு ஒருவாறு தெளிந்து அமைச்சர்களோடும் சூழ்வுற, அவர்கள் இவ்வழுவினை ஆய்ந்து கழுவாய் உஞற்றுதல் தகவெனக் கூறினர். அதனை உறுதியென்று கொண்டிலன்; அமைச்சர் என்ன கூறியும் மன்னன் கொள்கையை மாற்றக் கூடவில்லை. கன்றை யிழந்த பசுவினது துயரத்தைத் தானும் எய்துவதே கடனெனத் துணிந்தானாய், மகனைத் தேர்க்காலில் வைத்தூருமாறு ஓர் அமைச்சனுக்குக் கட்டளையிட்டான். அன்னவன் சென்று அது செய்யானாய்த் தன்னுயிர் துறக்கவே, அரசன் தானே சென்று தன் அருமருந்தனைய ஒரே மகனைத் தேர்க்காலிற்கிடத்தி ஊர்ந்தனன். அப்பொழுதே கருணையங்கடலாகிய சிவபெருமான் உமையம்மையாருடன் இடபவாகனத்திலே தோன்றி அரசனுக்குக் காட்சியளித்து அருள்புரிவாராயினர்; ஆன்கன்றுடன் அரசகுமாரனும் அமைச்சனும் உயிர் பெற்றெழுந்தனர்; தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர்; யாவர்களும் களிப்புற்றனர்.

இவ்வரலாறு தெய்வ மணக்குஞ் செய்யுள் பாடவல்ல சேக்கிழார் பெருமானால் பெரிய புராணத்தில் மிக அழகாகக் கூறப்பெற்றுளது; அதன் பெருமையை அறிதற்கு அரசனுடைய நீதியைப் புலப்படுத்தும் சில பாடல்களை இங்கே தருதும்:

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ."

"என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே
அன்னியனோ ருயிர்கொன்றா லவனைக்கொல் வேனானால்
தொன்மனுநூற் றொடைமனுவாற் றுடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான்."

"ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்."

இனி, கறவையின் பொருட்டு மகனை முறை செய்த இவ் வரலாற்றினைச் சயங்கொண்டாரும் ஒட்டக்கூத்தரும் முறையே,

"அவ்வ ருக்கன்மக னாகிமனு மேதினிபுரந்
தரிய காதலனை யாவினது கன்றுநிகரென்
றெவ்வ ருக்கமும் வியப்ப முறை செய்த கதையும்" எனவும்,

"சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரின்
மைந்தனை யூர்ந்த மனுவோனும்" எனவும்,

பரிதி மைந்தனாகிய வைவச்சுத மனுவுக்கே உரியதாக்கிக் கூறுகின்றனர். அவன் பொன்னி நாட்டிருந்து அரசு புரிந்த ஓர் சென்னியா மென்பதே சேக்கிழார் கருத்தும், இளங்கோவடிகள் முதலிய பண்டைச் சான்றோர் கருத்து மாகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய பழைய இலக்கியங்களில் மனு, மனுநீதி, மனுநூல் என்னும் பெயர்கள் யாண்டும் காணப் படவில்லை. அவைகள் வேதத்தைப்பற்றிக் கூறுகின்றன. அவற்றில் மறை யென்றும், கேள்வியென்றும் வேதம் கூறப்படுகின்றது. அதற்குப் பல நூற்றாண்டுகளின் பின்பெழுந்த தமிழ்த் திருமுறைகளில் நான்மறை, ஆறங்கம் என்பன பலவிடத்துக் கூறப்பட்டுள. திரு.

முறைகள் சிலவற்றில் ஆகமங்களும் கூறப்படுகின்றன. அவற்றுள், ஓரிடத்தும் வடமொழி மிருதிகளைப்பற்றிய குறிப்பு யாதொன்றுங் காணப்பட வில்லை. பிற்காலத் தனவாகிய பிங்கல முதலிய நிகண்டுகளில் மனு முதலிய பதினெட்டு நூல்கள் தரும நூலென்னும் பெயருடன் காணப்படுகின்றன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்த கலிங்கத்துப்பரணி, பெரிய புராணம் முதலியனவே மனுநீதி யென்னும் ஒன்றைக்குறித்துப் பேசுகின்றன. ஆகையால், அது வடமொழியில் எழுந்தது எக்காலத்தாயினும், ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளின் பின்பே தமிழ் மக்களுள்ளும் பயிலப்படுவதாயிற் றென்று கருதலாகும்.

இனி, சோழர்குல முதல்வன் புரிந்த மகனை முறை செய்ததாகிய இவ்வருஞ் செயலைப் பண்டைப் புலவர் பெருமக்கள் ஒரோவழி எடுத்துக் காட்டிச் சோழரது குலப்பெருமையை நிலைநாட்டிச் செல்கின்றனர்; அவற்றுள் சில காட்டுதும்:

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே"

—சிலப்பதிகாரம்.

"மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர்வினை யாளன் றோன்றின னென்பது
வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்னம்"

—மணிமேகலை.

இவற்றுள் முன்னது, கோவலனை யிழந்த நங்கை கண்ணகி நெடுஞ்செழியன் முன் சென்று அவனது தவற்றினைக்

கட்டுரைப்பான்புக்கவள் தனது ஊர் இன்னதெனக் கூறுங் கூற்றாக வுள்ளது. ஓர் மாது அரசன் முன் சென்று சிறிதும் அஞ்சாது அவனது தவற்றினை எடுத்துக்காட்டி இடித்துரைப்பான்புக்கதும், அதினும், தன் ஊர்ப்பெயர் கூறும் பொழுதே, 'என்னூர் நின்போலும் நீதியற்ற மன்னரால் ஆளப்படுவதன்று' என்பது போதர 'ஓர் பசு வுற்ற துயரினையும் சகிக்கலாற்றாது தன் அருமந்த மகனைத் தேர்க்காலில் வைத்தூர்ந்து நீதி செலுத்திய மன்னனால் ஆளப்படுவது காண் என்பதி' என்றுரைத்ததும் எவ்வளவு பெருமித உணர்ச்சியை விளைவிப்பன பாருங்கள்!

பின்னது, புகார் நகரிலிருந்த கிள்ளிவளவன், தன் மகனாகிய உதய குமரனென்பான் மணிமேகலை என்னும் தவமகளைக் காதலித்து ஓர் விஞ்சையனால் வெட்டுண்டிறந்தான் என்பது தெரிந்து அவனை உடனே புறங்காடடைவிக்குமாறு கூறியது. தன் மகன் புரிந்த தீமை பிறவேந்தர் செவியையடையுமுன் அவனை ஈமத்தேற்றுக என்கிறான்! மகனை முறை செய்த மன்னவன் வழியில் வந்து, தன் குலத்திற்கு ஓர் சிறுமறுவும் உளதாகாது காத்தல் கருதிய இம் மன்னனது மாட்சியை என்னென்றுரைப்பது!

## V

**முசுகுந்தன்**

*மாந்தாதாவின் மக்கள் மூவரிலொருவனாகப் பாகவத முதலிய புராணங்களிற் கூறப்பெற்றுள்ள இம்மன்னனைக் குறித்துக்* **கந்தபுராணத்தால்** *அறியலாகும் செய்திகள் பின்வருவன :*

பண்டொரு காலத்தில் வெள்ளியங்கிரியில் வானளாவிய பூங்காவிலே ஓர் வில்வ மரத்தடியில் சிவபெருமான் உமா தேவியாரோடும் எழுந்தருளியிருந்தனர். அப்பொழுது

மரங்களில் வாழும் இயல்புடைய ஓர் முசுக்கலையானது அவ் வில்வ மரத்தின் இலைகளைப் பறித்து அம்மையப்பர் திருமேனி மறையுமாறு போட்டுக்கொண்டிருந்தது. அது கண்டவளவில் அம்மைக்குக் குரங்கின்மீது சீற்றமுண்டாயிற்று. பரங்கருணைத் தடங்கடலாய பெருமான் அம்மையாரின் சீற்றத்தை மாற்றி யருளி, அம்முசுவிற்கு நல்லுணர் வளித்து, ‘நீ புரிந்த பூசனையுவந்தனம்; வில்வத்தழை கொண்டு இங்ஙனம் எம்மைக் குற்றமறப் பூசித்தமையால், நீ, பகலவன் குலத்திற் றோன்றிப் பார் முழுதும் அரசாளுவை’ என்று அருள் புரிந்தார். அங்ஙனம் அருள் பெற்ற முசுவும் பெருமானது திருவருளை என்றும் மறவாமைப் பொருட்டு, தான் அரசனாய காலத்தும் முசுமுகத்துடன் இருக்க வரம்பெற்றுக் கருவூரின் கண்ணே அரசர் குலத்திலே தோற்றஞ் செய்தது. பெற்றோர்கள் முசுமுகத்துடன் தோன்றிய தம் குழந்தைக்கு முசுகுந்தன் எனப் பெயரிட்டுச் சிறப்பியற்றி, இளம் பருவத்திலேயே சகல கலைகளையும் கற்குமாறு செய்து, அரச வுரிமையை அவனிடம் ஒப்புவித்துவிட்டுத் தவமியற்றச் சென்றனர். முசுகுந்த மன்னனும் சிவபெருமான் திருவருளைக் கணப் பொழுதும் மறத்தல் இலனாய், அளியும் ஆற்றலும் மிக்கு, மன்னுயிர்களைத் தன்னுயிர்போல் ஓம்பி முறை வழுவாது ஆட்சி நடாத்தி வருவானாயினன்.

இப்படி இருக்கும் நாளில், முருகப்பெருமானவர் சூரபன்மனைச் சங்கரித்துவிட்டுத் திருப்பரங்குன்றமெய்தித் தெய்வயானையாரைத் திருமணம் புரியும் செய்தியைத் தேவேந்திரனுடைய ஒற்றரால் அறிந்து, அவண் சென்று திருமணத்தினைத் தரிசித்துக் குமாரக் கடவுளின் திருவருள் பெற்றுத் திரும்பினன்.

பின்னும், கந்தபிரானுக்குரியவாகும் வெள்ளிக்கிழமை, கார்த்திகை, கந்த சஷ்டி என்னும் விரதங்களின் மேன்மையும், பெரியோர் பலர் அவற்றை அநுட்டித்துப் பேறு பெற்ற வரலாறுகளும் விசிட்ட மிக்க வசிட்ட முனிவரால் அறிந்து தானும் அவ்வாறே அவற்றை அநுட்டித்துச் சிறப்பெய்தினன். மற்றும் இம்மன்னர் பெருந்தகை, பொன்னுலகாளும் புரந்தரனானவன் வலன் முதலிய அவுணர்களுக்கு ஆற்றானாகித் தன்னைத் துணைவேண்டிய காலத்தில் வானுலகடைந்து அவுணர்களை வென்று வாகை மிலைந்தனன். அப்பொழுது, இந்திரன், தனக்குச் செய்த உதவிக்குக் கைம்மாறளிக்க விரும்பி, கற்பகத்தரு முதலிய சிலவற்றைத் தவிர்த்து யாது வேண்டினும் தருவதாகக் கூறினன். கூறலும், இம்மன்னன், முன்பு திருமாலால் பூசிக்கப் பெற்றதும், பின் திருமாலிடமிருந்து பெற்று இந்திரன் பூசித்து வருவதுமான தியாகேசர் திருவுருவைத் தருமாறு பரமசிவனுடைய திருக்குறிப்பின்படி வேண்டினன். இந்திரனோ ஆன்மலாபப்பேறு கருதித் தான் வழிபட்டு வரும் அவ்வருட் குறியினைத் தருதற்கு மனமிலனாய், அதுபோலும் வேறு ஆறு திருவுருவங்களைத் தேவதச்சனைக்கொண்டு இயற்றி வைத்து, 'இவற்றுள் யாது வேண்டினும் பெறுக' என மொழிந்தனன். முசுகுந்தன் இவ்வேழினுள் எதனைப் பெறுவதென்று தடுமாற்றமெய்தி, பின்பு, திருமாலும் இந்திரனும் வழிபாடு செய்த அவ்வுருவையே திருவருட்பாங்கால் உணர்ந்து வேண்ட, புரந்தரன் வேறு செய்வதற்குரிய வழியிலனாய் அவ்வேழு படிவங்களையும் பெறுமாறு அளித்தனன். முசுகுந்த வேந்தனும் அவைகளைப் புவியின்கட்கொணர்ந்து, திருவாரூர், திருநாகைக்காரோணம், திருக்காறாயல், திருக்கோ

ளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் என்னும் ஏழு திருப்பதிகளிலும் முறையே ஓரோ வொன்றாகப் பிரதிட்டை செய்தனன்.

இங்ஙனம் ஏழு தியாகராச மூர்த்திகளும் எழுந்தருளப் பெற்ற இவ்வேழு திருப்பதிகளும் சத்த விடங்கத்தலம் என்று கூறப்படும். இதனை,

"சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயல்—பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்"

என்னும் வெண்பாவானறிக.*

---

* இங்கே கூறிய வரலாறுகளைப் பின்வரும் பாடல்கள் சுருக்கமாக உணர்த்துவன:

"மிக்க வின்னது நின்றிட முன்னம்
வெள்ளி விண்டுவில் விண்டொடு காவில்
இக்கு வேளை யெரித்த நுதற்கண்
எம்பி ரானுமை யோடு மிருப்ப
அக்க ணத்தின் முசுக்கலை யொன்றங்
காதி மீதினும் ஆரியை மீதும்
தக்க வில்லுவ நல்லிலை சிந்தத்
தையல் சீறலும் ஐயன் விலக்கி."

"கூவி ளத்தழை கொண்டெமை யிங்ஙன்
கோதில் பூசை குயிற்றிய பண்பால்
நீவி ளைந்திட வேலை சுலாவும்
நீள்பு விக்கர சாகுதி யென்றே
மாவ ளைக்கை யிடக்க ணிசைப்ப
வைய கத்திடை வந்து பிறந்தே
காவ ளைத்த வயற்கரு வூர்வாழ்
காமர் சேர்முசு குந்த னிடத்தின்."

இனி, முசுகுந்தனைப்பற்றி விண்டு புராணத்தில் ஓர் கதை கூறப்பெற்றுள்ளது. அது,

“யவன தேசத்ததிபனான காலயவனன் என்பான் ஒருவன் பல்கோடி மிலேச்சர்களுடனும், நால்வகைப்படையுடனும், புறப்பட்டுவந்து கண்ணபிரான் இருந்த மதுராபுரியை முற்றுகையிட்டனன். அவன் படையெடுத்து

---

‘‘மேக வாகனன் ஒற்றர் படர்ந்தே
        வென்றி வேலவன் மன்றல் விளம்ப
ஓகை யெய்தி யெழுந்தனி கந்தோ
        டும்பா நாத னுறைகிரி யுற்றான்
சீக ரம்செறி சாகர மண்ணிற்
        சேரு மன்னவர் யாரு மடைந்தார்
மாக நேரிடை மாநர்கண் மைந்தர்
        வாவி காவி லுலாவி மகிழ்ந்தார்.”

“கூறிது நின்றிட வேறொரு நாள்முசு
        குந்த னெனுந்தலைவன்
மாறுத லற்ற வசிட்ட மடைந்த
        வசிட்டனை வந்துபணிந்
தாறு முடித்த வருட்கட னல்கிய
        ஆறு முடிப்பெருமான்
வீறு புகழ்ப்பெற விரத முரைத்தரு
        ளென்று விளம்புதலும்.”

“வெள்ளி யெனுந்தினம் ஆரல தன்றியும்
        வென்றி யுறுந்தலையாம்
ஒள்ளிய திங்களி லிந்து வளர்ந்திட
        வோங்குமுன் வைகல்முனு
என்னரி தாமறு நாளு மெழிற்பர
        சேந்திய வேந்தல்தரும்
வள்ளல் மகிழ்ந்தருள் விரத மெனப்புகழ்
        மாதவ னோதியரோ.”

வருதலை முன்னமே யறிந்த கண்ணன், துவாரகையை உண்டாக்கி, மதுரையிலுள்ளாரனைவரையும் அவன் வருதற்குமுன்பே அங்கே அனுப்பிவிட்டு, தான் மாத்திரம் மதுரையில் தனித்திருந்து, யவனன் மதுரையை முற்றிய பொழுது அஞ்சியோடுவான் போன்று கையிற் படைக்கலமின்றியே ஓடி ஓர் மலைமுழைஞ்சினுள் நுழைந்தனன். காலயவனனும் கண்ணனைப் பின்றொடர்ந்து சென்று குகையினுட்புக்கு, அங்கே துயின்று கொண்டிருந்த முசுகுந்தனைக்கண்டு, 'இவன்றான் கண்ணன்; பொய்த்துயில் புரிகின்றான்' என்று எண்ணிக் காலால் உதைத்தான்; உடனே முசுகுந்தன் தூக்கத்தினின்றெழுந்து அவனை நோக்கினான்.

---

"அன்ன தியற்றலும் அன்னது தன்னி
லருத்தி பொருத்திமுடித்
துன்னரு மேன்மை யடைந்தவர் தம்மையு
மோதினன் ஓதுதலும்
இன்னலில் மன்னவ னப்படி பற்பக
லிப்புவி யிற்புரியா
ஒன்னலர் வந்து பணிந்திட வைய
முவந்து புரந்தனனே."

"மேவொரு நாள்தனின் மண்ணுல கத்தினும்
விண்ணுல கத்தணுகித்
தேவர் வணக்குறு கோவை வருத்து
திருக்கவு ணப்படைவென்
றேவில் பெரும்புகழ் எழுவிடங்கரை
யொண்புவி மீதுகொணர்ந்
தேவரு மன்பொடு காண விருத்தி
யிருங்கதி யுற்றனனே"

(கந்தபுராணச் சுருக்கம், தேவகாண்டம் ௧௨, ௧௩, ௧௪; தக்ஷகாண்டம் ௧௭௮, ௧௭௯, ௧௮௰, ௧௮௧.)

அவ்வளவில் யவனன் விளிந்து சாம்பராயினன். அவ்வாறு அவன் விளிந்தமைக்குக் காரணம் யாதெனில், முசுகுந்தச் சக்கரவர்த்தியானவன் தேவாசுர யுத்தத்தில் தான் வானவர்க்குத் துணையாய் நின்று அவுணர்களை மடித்த காலையில், அமரர்கள் மகிழ்வுற்று 'நினக்கு என்ன வரம் வேண்டும்?' என்று வினவ, அவன், தான் போர்த்தொழிலால் நெடுநாள் உறக்கமின்றியிருந்தமையால் களைப்புற்று, 'யான் நெடுங்காலம் துயிலும்படி வரங்கொடுமின்' எனக் கேட்டனன். அன்னவரும் அப்படியே வரங்கொடுத்து 'நின்னைத் துயிலினின் றெழுப்புவோன் யாவனாயினும் அவன் சாம்பராவன்' என்று கூறிவிடுத்தனர். இதுவே காலயவனன் மாண்டமைக்குக் காரணம் என்க. பின்பு, முசுகுந்தனானவன் கண்ணனைப்பார்த்து 'நீ யார்?' என்று வினவி, 'யான் யதுகுலத்து வசுதேவர் மைந்தன்' என்று அவன் கூறக்கேட்டு, 'இருபத்தெட்டாம் சதுர்யுகத்தில் துவாபரத்தின் முடிவில் யதுகுலத்திலே திருமால் அவதரித்தருளுவன்' என்று முன்பு விருத்த கார்க்கிய முனிவர் தனக்குச் சொல்லியிருப்பதை நினைவு கூர்ந்து, அவன் பகவானாகிய திருமாலே என்று துணிந்து துதித்தனன் அப்பொழுது கண்ணபிரான் முசுகுந்த மன்னனை நோக்கி 'நீ விரும்பிய உத்தம லோகங்களையடைந்து, திப்பிய போகமெல்லாம் நுகர்ந்து, முடிவில் ஓர் பெருமை வாய்ந்த குலத்திலே பழம்பிறப்புணர்ச்சி யுடையவனாய்த் தோன்றி முத்தியடைவாய்' என்று அருளிச்செய்தனன். அங்ஙனம் அருள்பெற்ற முசுகுந்தனும் குகையினின்றும் வெளிப்போந்து, குறிய வடிவுடன் திரிகிற மனிதரைப் பார்த்து, கலியுகம் வந்துவிட்டதென்று தெரிந்துகொண்டு தவம் புரிதற் பொருட்டுக் கந்தமாதனம் என்னும் குன்றத்தை அடைந்தனன் என்பது.

முசுகுந்தன் என்பவன் பேராற்றலும் பெரும் புகழும் வாய்ந்த தென்னாட்டு மன்னர்களில் ஒருவன் என்பதும், அவன் பூர்வ புண்ணியத்தால் அளவுகடந்த சிவ பத்தியும், தவயோகசித்தியும் கைவரப் பெற்றவன் என்பதும் மேற் காட்டிய கதைகளினின்றும் வடித்தெடுக்கற்பாலவாய உண்மைகளாம்.

இனி, இம்மன்னன் தேவர்கள் பொருட்டாக அவுணர்களோடு போர் புரிந்த செய்தி சில வேறுபாட்டுடன் சிலப்பதிகாரம் முதலியவற்றினின்றும் அறியக் கிடக்கின்றது.

ஒரு காலத்தில் கலுழனென்பவன் விண்ணுலகத்தையடைந்து அங்கே சேமத்தில் வைக்கப்பட்டிருந்த அமிழ்தத்தை எடுத்துச் சென்றானாக, அதனை மீட்கக் கருதிய இந்திரன், யான் சென்று வருங்காறும் இந்நகரைக் காப்போர் யார் என நினைத்தலும், முசுகுந்த மன்னன் எழுந்து 'யான் பாதுகாத்தல் கடன்' என மொழிந்தான். புரந்தரன் அதுகேட்டு மகிழ்ந்து 'இது நின்வழி நிற்பதாக' என ஓர் பூதத்தை நிறுத்திச் சென்றனன். அக்காலை அவுணர்கள் பெருந்திரளாகக் கூடிவந்து பொருது, போரில் ஆற்றாது நிலை கெட்டோடியவர்கள் பின்பு ஒருங்கு கூடிச் சூழ்ச்சி செய்து, இவனை வஞ்சத்தாலன்றி வெல்லுதல் அரிதெனத் துணிந்து, பேரிருட்கணை யொன்றை விடுத்தார்கள். அதனால் எங்கணும் இருள் சூழலும், முசுகுந்தன் செய்வதறியாது நெஞ்சம் திகைத்து நிற்புழி அப்பூதமானது ஓர் மந்திரத்தை யருள, அவன் அதுபெற்று வஞ்சனையைக் கடிந்து அவுணர் படையைக் கொன்று குவித்து நின்றனன். மீண்டு வந்த இந்திரன் நிகழ்ந்தவற்றையறிந்து, உற்றவிடத்து உதவி புரிந்த அப்பூதத்தினை அம்மன்னனுக்கே மெய்க்காவலாகுமாறு பணிக்க அஃது ஆங்கு நின்

றும் போந்து காவிரிப்பூம்பட்டினத்தில் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும் இரு பகுதிகளுக்கும் இடையோ யுள்ள நாளங்காடியில் (காலைக் கடைத் தெரு) இருந்து பலியுண்டு வருவதாயிற்று. இதனை,

“கடுவிசை யவுணர் கணங்கொண் டெண்டிக்
கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த
தொடுகழன் மன்னர்க்குத் தொலைந்தன ராகி
நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்
திருந்துவே லண்ணற்குத் தேவ னேவ
இருந்துபலி யுண்ணு மிடனுங் காண்கும்.”

என்னும் சிலப்பதிகாரக் கடலாடு காதைப் பகுதியானும், அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை, மேற்கோள்க ளானும் அறிக. மேற்கோளில்,

“காவ லழித்துச் சேவல்கொண் டெழுந்த
வேட்கை யமுதம் மீட்க வெழுவோன்”

என்று இந்திரன் பொன்னகரை விடுத்துச் சென்றதன் காரணம் குறிப்பிடப்பட்டுளது. சேவல் என்பது பறவை யின் ஆணுக்கெல்லாம் பொதுப் பெயராயினும், தன் தாயின் அடிமைத் தனத்தைப் போக்குதற்குக் கருடனானவன் தேவலோகம் புக்கு அமுதினை எடுத்துச் சென்றனன் என்று மகாபாரதம் முதலியவற்றிற் கூறப்படுதலால் சேவல் என் பதனைக் கலுழனென்றே கொள்ளல் வேண்டும். தன் தாய் மாற்றாளுக்கு அடிமையாயினாள் என்பதை அறிந்த வளவில் ஆண் மகனாய கலுழன் சிறிதும் பொறுக்கலாற்றானாய், உடனே எவ்வாற்றானும் தாயின் அடிமையைப் போக்குவ தென்று உறுதி செய்துகொண்டு, அதன் பொருட்டு நில வுலகில் எவராலும் அடைய வொண்ணாத தேவாமிர்த

மாகிய மருந்தினைக் கொணர்ந்து தாயை மீட்டனன்; தாயின் அடிமையைப் போக்கியவனே என்ஞான்றும் கடவுளுடனிருந்து பணி செய்யும் பேற்றையும், அதனால் 'பெரிய திருவடி' என்னும் பெயரையும் எய்துதற்குரியனாயினன்.

இனி, புகார் நகரில் முற் கூறிய நாளங்காடிப் பூதமன்றி மற்றொரு பூதமும் உள்ளது. அது நான்கு தெருக்கள் கூடுமிடத்தில் உள்ளதாகலின் சதுக்கப்பூதம் எனப்படும். புகாரில் உள்ள ஐவகை மன்றங்களில் பூத சதுக்கமும் ஒன்று. அம் மன்றங்களைப் பற்றிய அரிய செய்திகளை இந்திரவிழவூரெடுத்த காதையா னறியலாகும். இனி, முசுகுந்தன் துயரைப் போக்கியதான நாளங்காடிப் பூதமானது காவிரிப் பூம் பட்டினத்தில் இந்திரவிழாச் செய்யப்படாதொழியின் வெகுண்டு துன்பம் விளைக்கும் என்று கூறப்படுகின்றது. இதனை,

> "வான்பதி தன்னுள்
> கொடித்தேர்த் தானைக் கொற்றவன் றுயரம்
> விடுத்த பூதம் விழாக்கோள் மறப்பின்
> மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க
> இடிக்குரல் முழக்கத் திடும்பை செய்திடும்"

என்னும் மணிமேகலை விழாவறை காதையான் அறிக. முசுகுந்தன் தேவருலகத்தைப் பாதுகாத்த செய்தி,

> "பொருது றைத்தலை புகுந்துமுசு குந்த னிமையோர்
> புரம டங்கலும் அரண்செய்து புரந்த புகழும்"

என்று கலிங்கத்துப் பரணியிற் குறிக்கப்பெற்றுள்ளது. திருவாரூரில் தியாகேசப்பெருமான் முசுகுந்தனால் கொண்டு வரப்பட்ட செய்தியை,

"பூவசம் செய்துவிண் ணாடு புணர்பகை போக்கியவோர்
கோவசம் செய்வள ராரூர்த் தியாகர்"

என்று திருவாரூர் ஒருதுறைக்கோவை கூறுகின்றது.

## VI

சந்திரகுலத்திலே சிபி எனப் பெயரிய மன்னன் ஒருவன் உளனென்பது புராண இதிகாசங்களால் அறியப்படுகிறது. அவன் யயாதியின் மக்களுள் ஒருவனாகிய அனுவின் வழியில் வந்த உசீநரன் புதல்வனாவான்.

**சிபி.** சிபி, சூரிய குலத்தவனென்றும், சோழர்களின் முன்னோனென்றும் சங்கத்துச் சான்றோராய நல்லிசைப் புலவர்களாலும்; இடைக்காலத்தே தோன்றிய சயங்கொண்டார், சேக்கிழார், கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர் பெருமக்களாலும் பலவிடங்களிலே கூறப்பட்டிருக்கின்றது. ஆகலின், சூரியகுலத்துச் சிபியும் வேறு சந்திரகுலத்துச் சிபியும் வேறென்றே கொள்ளுதல் வேண்டும். பல அரசர்கள் ஒரே பெயர் தரித்திருப்பதைப் புராணங்களிற் காணலாகும்.

சங்க இலக்கியங்களில் சோழர் குல முன்னோரின் மாட்சியை விளக்க நேர்ந்துழி யெல்லாம் சிபி எனப் பெயரிய மன்னன் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றான். இவ்வேந்தர் பெருமானைக் குறித்து மகாபாரதத்திற் கூறப்பட்டிருக்கும் வரலாற்றின் சுருக்கம் பின் வருவது :

தரும புத்திரர் பேரறிவாளரான பாட்டனாரைப் (வீடுமர்) பார்த்து அடைக்கலம் புகுந்த உயிரைப் பாதுகாத்தலினால் உளதாம் பயனை வினவா நிற்புழி வீடுமர் கூறுகின்றார் : தரும நந்தன! சரணாகத தருமத்தின் மேன்மையைக் குறித்து முன்பு நிகழ்ந்ததொரு சரித்திரத்தை நினக்குக்

கூறுவேன் கேட்பாயாக; காண்டற்கினிய வனப்புவாய்ந்த ஓர் புறாவானது ஓர் பருந்தினால் எற்றப்படுமெல்லையில் சிபி எனப்படும் மன்னர் பெருமானைச் சரண் புகுந்தது. அம் மன்னன் தன் மடியிலே அச்சத்துடன் வந்து வீழ்ந்த அப் புறாவினைக்கண்டு தேற்றி, 'நீ சிறிதும் அஞ்சற்க; உலகினைப் பாதுகாத்தற்கென்றே அமைந்துள்ள என்பால் அணுகிய நின்னைப் பற்றுதற்பொருட்டு எவனும் மனதில் நினைத்தற்கும் வல்லனாகான்; நின்னைக் காப்பது பொருட்டாக இத்தேச ஆட்சியையும் என் உயிரையும் விட்டுவிட வேண்டு மென்றாலும் அங்ஙனமே செய்வேன்; நீ கவலையுறல் வேண்டா' என்று கூறினான். அவ்வளவில் அப்புறாவினைத் துரத்துவந்த பருந்தானது அவ்வேந்தனைப் பார்த்து 'அரசே! இப்புறாவானது எனக்கு உணவாகத் தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்டது; இதனைப் பிடிப்பதற்காக யான் விடாது தொடர்ந்து பெரிதும் வருந்திப் பற்றுவான் ஆயினேன்; இப்பொழுது நீ இதனைக் காப்ப தென்பது சிறிதும் தக்கதன்று; இதன் இறைச்சி குருதி கொழுப்பு முதலிய அனைத்தும் என் உணவிற்கு அமைந் தவை; நானோ இப்போது கொடிய பசியாலும், நீர் வேட்கையாலும் வருந்துகின்றேன்; இனிச் சிறிதும் ஆற்றியிருக்க வொண்ணாது; ஆகலின் இதனை விட்டுவிடுக; மேலும், நின் நாட்டில் வாழும் மக்களைப் புரப்பதே நின் கடமையாகும்; வானிலே பறக்கும் பறவைக்கு நீ தலை வன் அல்லை; வானத்திலும் நின் ஆற்றலைச் செலுத்துவ தென்பது விரும்பத்தக்கதன்று; நினக்குரிய பொருளைக் கவர்வோர் திறத்திலே நின் ஆண்மையைக் காண்பிப்பதே முறையாகும்; அன்றியும், இப்புறாவின் திறத்தில் அறத் தினைக்கருதுகின்ற நீ பசியால் வருந்துகின்ற என்னைமட்டும்

புறக்கணித்திடுதல் பொருந்துமோ?' என்று இங்ஙனம் கூறி முறையிட்டது. அதனைக்கேட்டு வியப்புற்ற வேந்து முனியாகிய சிபி, பருந்தை நோக்கி, 'அடைக்கலம் புகுந்த இதனை யான் ஒரு பொழுதும் கைவிடுதல் செய்யேன்; நீ நின்பசி யடங்கவேண்டில் காட்டெருமை, பன்றி முதலியவற்றின் இறைச்சியில் எதையேனும் ஏற்றுக்கொள்வாயாக" என்றனன். என்னலும் பருந்து 'யான் வேறு எதனையும் தின்பதில்லை; எனக்கு நெடுங்காலமாகக் கடவுளரால் ஏற்படுத்தப் பெற்றிருக்கும் உணவு இதுதான்; பருந்துகள் புறுக்களை உண்ணுவதே எக்காலத்தும் உள்ள இயற்கை என்பதனையறியாயோ? ஒருக்கால் நினக்குப் புறுவின்பால் அத்துணை அன்பிருக்குமாயின் நின் தசையினை அப்புறுவின் அளவு நிறுத்து இப்பொழுதே கொடுப்பாயாக' என்று கூறிற்று. அது கேட்டலும் மன்னன் பெருமகிழ்ச்சியுற்று 'நீ இங்ஙனம் கூறியதே எனக்குப்புரிந்த பேருதவியாகும்; நீ விரும்பியவாறு இப்பொழுதே செய்வேன்' என்று சொல்லித் தன் தசைகளை அரிந்து துலையில் வைத்து நிறுக்கலானான். அப்பொழுது அந்தப்புர மகளிர், அமைச்சர், பணியாளர் முதலிய யாவரும் ஓடிவந்து கதறுவாராயினர். அரசனோ எதற்கும் சலியாதவனாய்த் தன்னுடைய கைகளிலும், தொடைகளிலும், விலாப்புறங்களிலும் உள்ள தசைகளையெல்லாம் அரிந்தரிந்து தராசில் நிரப்பினன்; நிரப்பியும் அவை புறுவின் நிறைக்கு ஒத்திருக்கவில்லை. அது கண்ட, அருளின் பிறந்தகமாயுள்ள அம்மன்னன் தானே துலையில் ஏறுவானாயினன். அப்பொழுது இந்திரன் முதலிய இமையவர் யாவரும் அங்கு வந்து சூழ்ந்துகொண்டு பாராட்டினார்கள்; தேவ துந்துபிகள் முழங்கின; கற்பகமலர் மழை பொழிந்தன. அரச விருடி

யாகிய சிபி இத்தகைய சிறந்த புண்ணியத்தால் அப்பொழுதே வானவூர்தியில் ஏறி, என்றும் அழிவில்லாத தான துறக்கத்தை யடைந்தனன். தரும நந்தன! நீயும் இப்பெற்றியவான சிறந்த அறங்களைச் செய்யக்கடவை; அன்புள்ளோரையும் அடுத்தோரையும் காப்பாற்றி, எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் வைத்திருப்பவன் வீட்டுலக இன்பத்தைப்பெற்று விளங்குவன்; பெரியோர்களால் ஆசரிக்கப்பட்டு வந்த நல்லொழுக்கத்தையுடையவன் எதைத்தான் அடையமாட்டான்? சிபி என்னும் வேந்தன் தன் செய்கையால் மூவுலகத்தாரும் கொண்டாடும் புகழையும், உயர் கதியையும் எய்தினன்; என்று கூறி, அவன் போல் சரண்புகுந்த உயிரைப் பாதுகாக்கும் எவனும் அத்தகைய பேற்றினை நிச்சயமாகப் பெறுவன் என்று திருவாய் மலர்ந்தருளினர்.*

இம் மன்னனைச் சோதித்தற்பொருட்டு இந்திரன் பருந்தாகவும், அக்கினி புறவாகவும் இங்ஙனம் வந்தனர் என்னும் கதைகள் வழங்கா நிற்கும். இவ்வரசனது வரலாற்றிலிருந்து இவன் பேரருள் வாய்ந்தவனென்பதும், அடைக்கலங் காத்தலாகிய சீரிய அறத்தைக் கடைப்பிடித்தவனென்பதும் வெளியாகின்றன. இராம சரித்திரம் முழுதும் இவ்வறத்தினையே எவற்றினும் சிறப்பாக விளக்கலுறுகின்றது. விபீடணன் அடைக்கலத்தைக் கூறும் பகுதியில் இதனை நன்கு காணலாகும். அவ்விடத்தில் இராமபிரான் இச் சிபி வேந்தனை எடுத்துக் காட்டாகக் கொண்டு இவ்வறத்தினை வற்புறுத்துரைப்பதாகக் கம்பர் கூறும் பாட்டு இது:

---

* ஸ்ரீமத் M. V. இராமாநுஜாச்சாரியார் அவர்கள் பதிப்பித்த வியாசபாரத மொழிபெயர்ப்புக் காண்க.

"பிறந்தநாட் டொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன்
மறந்தநா ளுண்டோ வென்னைச் சரணென [பெற்றி
[வாழ்கின் றனைத்
துறந்தநாட் கின்று வந்து தன்னினுன் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றோ வென்று மிருந்தநா ளாவ தென்றான்"

இனி, சோழர் சிபியின் வழியில் வந்தமையால் செம்பியர் எனப்பட்டனரென்று சிலர் கூறுவர்; சிபி என்பதிலிருந்து சைப்பியர் என்னும் சொல் உண்டாகி, அது செம்பியர் எனத் திரிந்தது என்பது அன்னோர் கருத்து. இங்ஙனம் தாம் வேண்டியவாறு திரிபிலக்கணம் கூறுவது நன்றன்று; சிபியே செம்பியன் என்று கூறப்படுகிறான்;

"புள்ளுறு புன்கண் டீர்த்த வெள்வேற்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக" (புறம்)

என்பது காண்க.

இனி, பண்டைத் தண்டமிழ்ப் புலவர் பலரும் இவ்வரலாற்றினை யெடுத்துப் பாராட்டுதலைப்பின்வரும் மேற்கோள்களான் அறிக:

ஒரு புலவர், ஓர் சோழனை விளிக்கு மிடத்து 'புவியில் வாழ்வோருடைய வருத்தம் தீரும்படி ஞாயிற்றின் வெம்மையைத் தாங்கிக்கொண்டு காற்றையுண்டு வானிலே திரியும் முனிவரும் வியக்குமாறு புறாவின் வருத்தத்திற்கு அஞ்சித் துலாம் புகுந்தோனது வழியில் வந்தோனே' என்கின்றனர். அது,

"நிலமிசை வாழ்ந ரலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் மருளக் கொடுஞ்சிறைக்

கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக" (புறம்)

என்பது.

"புறவு நிறைபுக்குப் பொன்னுலகை மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்"

என்று சிலப்பதிகாரத்திலும்,

"உடல் கலக்கற வரிந்து தசை யிட்டு மொருவன்
ஒருதுலைப் புறவொ டொக்கநிறை புக்க புகழும்"

என்று கலிங்கத்துப் பரணியிலும்,

"உலகறியக், காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும்"

என்று விக்கிரம சோழனுலாவிலும், இங்ஙனமே ஏனை யுலாக்களிலும் இவன் தான் புரிந்த செயற்கருஞ் செயல் பற்றிப் பாராட்டப்படுகின்றான்.

"துலையிற் புறவி னிறையளித்த சோழ ருரிமைச் சோணுடு" என்று சேக்கிழார் கூறுகின்றார். இராமபிரான் குல மேன்மையைக் கௌசிக முனிவர் வாக்கினில் வைத்துக் கம்பர் கூறும் அழகிய பாட்டு இங்கு நோக்கற்பாலது. அது,

"இன்னுயிர்க்கு மின்னுயிரா யிருநிலங்காத் தாரென்று
பொன்னுயிர்க்குங் கழலவரை யாம்போலும் புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்கு நெடுவேலா யிவர்குலத்தோன் மேற்பறவை
மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினனால்"

என்பது.

## VII

**காந்தன்.**

இவன் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த ஓர் சோழ மன்னன்; அகத்திய முனிவர்பால் மிக்க பத்தி மையுடையோன். இவன் வேண்டுகோளுக்கிரங் கியே அகத்தியர் தமது கமண்டலத்திலிருந்த காவிரியை நதிவடிவாக நிலத்திற் பெருகச்செய்து சோழ நாட்டை வளமுறச் செய்தனர் என்ப. இதனை,

"செங்கதிர்ச் செல்வன் றிருக் குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை"

என்னும் மணிமேகலைப் பதிகத்தான் அறிக. அகத்தியா மேருவிலிருந்து தென்னாட்டிற்கு வரும்பொழுது, கங்கையா ருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு வந்தா ரென்று தொல்காப்பியப்பாயிர வுரையில் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். அவர் இமயத்தினின்றும் தெற்கில் வருங் கால், திருக்கைலையில் இருந்த காவிரியைச் சிவபெருமான் பாற் பெற்றுக் கமண்டலத்திலே தரித்துக்கொண்டு வந்து கொங்கு நாட்டிற் றங்கியிருக்கும்பொழுது, சீகாழிப்பதி யிலே தவமியற்றிய தேவேந்திரன் வேண்டுகோட்கிரங்கி விநாயகப் பெருமானவர் காக்கை யுருவெடுத்து அகத்திய ரது கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைப் பெருகச் செய்தனரென்று கந்த புராணம் கூறுகின்றது. இங்ஙனம் சில வேறுபாடுகள் காணப்படினும் காவிரி அகத்தியர் கமண்டலத்தினின்றும் போந்ததென்பது பொதுவாக ஒத் துக்கொள்ளப்படுகின்றது.

இனி, காந்தன் எனப் பெயரிய இம்மன்னன், அரசர் குலத்தை வேரறுத்தலையே தனக்கு விரதமாகக் கொண்ட

பரசுராமன் தன்மீது போர் குறித்து வருதலைத் துர்க்காதேவியால் அறிந்து, அவ்வம்மையின் கட்டளைப்படி, தனக்குக் கணிகை வயிற்றுப் பிறந்தவனாகிய ககந்தன் என்பானை யழைத்து 'நினக்கு அரசாளும் உரிமையின்மையால் பரசுராமன் நின்பால் அணுகான்; நான் அகத்திய முனிவன் அருள்பெற்று மீண்டு வருமளவும், நீ இப்பட்டினத்தை நின் பெயராற் காகந்தி என்று பெயரிட்டுப் பாதுகாத்திருப்பாயாக' என்று சொல்லி, அங்கு நின்றும் வேற்றுருக் கொண்டு சென்று சிலநாள் வேறிடத்திருந்தனன்; என்று மணிமேகலை 22-வது காதையால் அறியப்படுகின்றது.*

"காவிரிப் புனல் கொணர்ந்த வவனும்"

எனக் கலிங்கத்துப் பரணியிலும்,

"மேக்குயரக், கொள்ளுங் குடகக் குவடூடறுத்திழியத்
தள்ளும் திரைப்பொன்னி தந்தோனும்"

என விக்கிரமசோழனுலாவிலும் குறிக்கப் பெற்றவன் இம் மன்னனே யாதல் வேண்டும்.

---

* "மன் மருங் கறுத்த மழுவா ணெடியோன்
தன்முன் றோன்றல் தகாதொழி நீயெனக்
கன்னியேவலிற் காந்த மன்னவன்
இந்நகர் காப்போர் யாரென நினைஇ
நாவலந் தண்பொழில் நண்ணார் நடுக்குறக்
காவற் கணிகை தனக்காங் காதலன்
இகழ்ந்தோர் சாயினு மெஞ்சுத லில்லோன்
ககந்த னாமெனக் காதலிற் கூஉய்
அரசா ளுரிமை நின்பா லின்மையின்
பரசு ராமன்நின் பால்வந் தணுகான்
அமர முனிவ னகத்தியன் றனாது
துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவும்
ககந்தன் காத்தல் காகந்தி யென்றே
இயைந்த நாமம் இப்பதிக்கிட் டீங்கு
உள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாள்"

# VIII

**தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்.**

இம் மன்னனது பெயரின் பொருள் வானத்தில் அசைந்துகொண்டிருந்த பகைவரது மதிலை யழித்த வீரவளையணிந்த தோளையுடைய சோழன் என்பதாகும். இவனால் அழிக்கப் பெற்ற அரண் மூன்றென்பது சிலப்பதிகாரத்தால் வெளியாகின்றது. சோழர் குலத்தாரது வீரத்திற்கு இவ்வேந்தன் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றான். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடுகின்ற ஓர் புலவர்,

"சார்தல், ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர் நினைப்பின்
அடுதல் நின்புகழு மன்றே" (புறம்)

என்று கூறுதல் காண்க. இவன் அகத்திய முனிவருடைய கட்டளையால் காவிரிப்பூம் பட்டினத்தில் முதன் முதல் இந்திரனுக்கு விழாச் செய்தனன் என்பது,

"உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினும் நன்கினி துறைகென
அமரர் தலைவன் ஆங்கது நேர்ந்தது"

என்னும் மணிமேகலை விழாவறை காதையால் விளங்குகிறது. இம்மன்னன் வானத்தில் அசைந்துகொண்டிருந்த மதிலை அழித்த செய்தியானது,

"ஒன்னார், ஓங்கெயிற் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்"

எனச் சிறுபாணாற்றுப்படையும்,

"வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பிற்
றூங்கு மெயிலுந் தொலைத்தலால்"

எனப் பழமொழியிலும்,

"தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை"

எனச் சிலப்பதிகாரத்தும்,

"தேங்கு தூங்கெயி லெறிந்த வவனும்"

எனப் பரணியிலும்,

"கூடார்தம், தூங்கு மெயிலெறிந்த சோழனும்"

என உலாவிலும் குறிக்கப்பட்டுளது. இங்ஙனம் சோழர் குலத்து முன்னோன் புரிந்த செய்தி பின்னோர் பலர்க்கும் ஏற்றிக் கூறப்படுவதிலிருந்து இச்செயல் எவ்வளவு அருமையுடைத்தாகக் கருதப்பட்டதென்பது விளங்கும்.

## IX

இம் மன்னனுடைய வரலாற்றை அறிதற்குக் கருவியாக இருப்பன பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பழமொழி முதலியனவாகும். அவற்றானறியப்படும் இவன் வரலாற்றின் சுருக்கம்: இவ்வேந்தன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன்; நாங்கூர் வேளிடை மகட்

(margin note: * கரிகாலன்.)

* இவ்வரசனைப்பற்றி, திருவையாற்று வடமொழிக் கல்லூரித் தமிழ் ஆசிரியர் திருவாளர் L உலகநாதப் பிள்ளையவர்களால் **சோழன் கரிகாற் பெருவளத்தான்** என்னும் பெயருடன் ஓர் நூல் எழுதப் பெற்றுளது.

கொண்டோன்; இரும்பிடர்த்தலையாரை அம்மானாக வுடையவன்; இவன் மகள் ஆதிமந்தி என்பாள்; இவன் இளமைப்பருவத்துப் பிறராற் சுடப்பட்டு உயிருய்ந்தனன்; அப்பொழுது கால் கரிந்தமையால் கரிகாலன் எனப் பெயரெய்தினான்; கருவூரிலிருக்கையில் கழுமலம் என்னும் ஊரிலிருந்த யானையாற் கொண்டு வரப்பட்டு அரசாட்சிக்குரியனாய், பின் பகைவராற் சிறைப்படுத்தப்பெற்று மதிலைக் கடந்து பகைவர் சேனையைவென்று மீண்டு முறையாலே அரசுரிமை யெய்தி, உறையூரிற் கோயிலும் மதிலும் முதலியன அமைத்து அதனை அரசிருக்கையாகக் கொண்டனன்; காவிரிப்பூம் பட்டினத்தையும் தலை நகராக்கி வீற்றிருந்தனன்; தன்னிடம் வழக்குக்கொணர்ந்த முதியோர்கள் தன்னை நோக்கி 'இளைஞனாகிய இவன் உரைமுடிவுகாணான்' எனக்கருதியதனைக் குறிப்பாலுணர்ந்து, தான் நரைமுடித்து முதுமைக்கோலந் தாங்கிவந்து அம்முதியோர் உவக்கும்படி அவர்கள் சொற்கொண்டே முறை செய்தனன்; வெண்ணிப்பறந்தலையில் பதினொரு வேளிரொடு இருபெரு வேந்தர் அழியப் பொருதனன்; வாகைப்பறந்தலையில் ஒன்பது மன்னரை ஒரு பகலில் வென்றனன்; ஒரு கால் இமயமலை வரையிற் சென்று வடநாட்டரசர் பலரை வென்று திறைபெற்று, மேலும் வடக்கே செல்லாவாறு அம்மலை குறுக்கிட்டுத் தடுத்தமையின் அதனைச் செண்டாலடித்துத்திரித்து அதன் தலையிலே தனது புலிக்கொடியை நிறுத்தி மீண்டனன்; காடு கெடுத்து நாடாக்கி நீர்நிலைகளைப் பெருக்கி நாட்டை வளம்படுத்தினன்; வாணிகத் துறையை மேம்படுத்தினன்; கைத்தொழில்களைப் பேணி வளர்த்தனன்; பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில் அளித்து அப்பாட்டினைப் பெற்றனன்; என்பது.

இனி, இவனது பிறப்பினைக்குறித்து ஓர் கதை கூறுவர்; அது, இவன் தாய் கருவுயிர்த்தற்கு வருந்துகையில் ஓர் அறிவர் வந்து 'இன்னம் ஒரு நாழிகை கழித்துக் குழந்தை பிறப்பின் பெரு நலம் உண்டாகும்' என்று கூறக்கேட்டு, அவளும் அந் நற்பொழுது வருங்காறும் கால்கள் மேலாக நின்று பின் குழவியை ஈன்றனள் என்பது. இவன் மீது முடத்தாமக்கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படையில் "தாய்வயிற் றிருந்து தாய மெய்திப்பிறந்து" என்பதற்கு 'தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலேயிருந்து பிறக்கையி னாலே அரச வுரிமையைப் பெற்றுப் பிறந்தென்றார்' என உரையாளர் கூறுவது காண்க. கோச்செங்கட் சோழர் இங்ஙனம் பிறந்தனரென்பது திருத்தொண்டர் புராணத் தால் அறியலாவது. செவ்வந்திப் புராணம் பராந்தகன் மகனாகிய (ஒரு) கரிகாலனுக்கு இச்செய்தியை உரிமையாக்கு கின்றது. இவ்வாறாய கதைகளில் ஒன்றை யுட்கொண்டே நச்சினார்க்கினியரும் இங்ஙனம் பொருள் கூறினாராவர். ஆனால், தாய்வயிற்றிலிருந்து பிறக்கு முன்னரே தந்தை விண்ணுல கெய்தினன் ஆகலின் அப்பொழுதே அரசுரிமை யெய்திப் பிறந்தனன் என்று கூறுவது ஏற்புடைத்தாகத் தோன்றுகிறது.

> "கழுமலத் தியாத்த களிறுங் கருவூர்
> விழுமியோன் மேற்சென் றதனால்—விழுமிய
> வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
> தீண்டா விடுத லரிது"

என்னும் பழமொழி வெண்பாவானும், 'கழுமலமென்னும் ஊரின்கண்ணே பிணித்து நின்ற களிறும், கருவூரின் கண்ணே யிருந்த கரிகால் வளவன் கடிது இளையனாயினும்

அவன் சிறப்புடையனாதலால் அவன் மேற் சென்று தன் பிணை பெடுத்துக்கொண்டு அரசிற் குரிமை செய்தது' என்னும் அதன் உரைப் பகுதியாலும், இவன் இளைஞனா யிருந்தபொழுது தனது நாட்டிலன்றி வேறிடத்திற் கரந்து வதிந்து வந்தனனென்பதும், அப்பொழுது சோணாட்டிலே அரசுரிமைபற்றிக் குழப்பம் ஏற்பட அமைச்சர் முதலாயி னோர் அக்கால வழக்கப்படி யானையை விடுத்து அரசனைத் தேடுமாறு துணிந்து கழுமலம் என்னும் ஊரிலிருந்த பட்டத்து யானையைக் கட்டவிழ்த்துவிட்டனரென்பதும், அக்களிறு கருவூரை யடைந்து ஆங்கிருந்த கரிகாலனைத் தன் முதுகின்மேல் எடுத்து வைத்துக்கொண்டு வந்து அவனை அரசிற்குரியனாக்கிற்று என்பதும் பெறப்படு கின்றன. உறையூர் மண்மாரி பெய்து அழிந்தகாலை பராந்தகன் மகனாகிய கரிகாலனை அமைச்சர்கள் இங்ஙனமே யானையை விடுத்துக் கொணர்ந்தனரென்று செவ்வந்திப் புராணம் கூறுகின்றது. ஒருவனுடையவுடைய வரலாறு பெயரொற்றுமையால் உண்மை யுணரமாட்டாது மற் றொருவனுக் குரியதாக்கிக் கூறப்பட்டிருக்கலாம் என்று கருதுவது இழுக்காகாது. யானை சென்று அரசுக்குரி யானை எடுத்து வருவதென்பது சிறிது தெய்வத்தன்மை கலந்த செய்திபோற் றோன்றுகிறது.

இனி, இவன் அரசாளத் தொடங்கியபொழுது முன்பே இந்நாட்டினைத்தாம் கைப்பற்றி ஆளக்கருதியிருந்த பிறர் சிலர் இவனுடன் பகைமை கொண்டு கரவால் இவனைப் பற்றிச் சிறைப்படுத்திவிட்டனர் என்பதும், மிக்க இளம் பருவத்தினனாகிய இவன் அச்சிறையகத்தே சில காலம் இருந்து வளர்ந்து செவ்வி நோக்கிச் சிறைக்கோட்ட மதிலை யிடித்து வெளிப்போந்து எதிர்ந்த பகைவரைக் கொன்று

சென்று அரசுகட்டிலேறினன் என்பதும் பட்டினப்பாலை முதலியவற்றாற் பெறப்படுகின்றது.

"கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர் பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்து
உருகெழு தாயம் ஊழி னெய்தி"

என்று பட்டினப்பாலை கூறுகின்றது. புலிக்குட்டி கூட்டிலே அடையுண்டிருந்து வளர்ந்தாற் போலப் பகைவரது காவலிடத்தேயிருந்து வலியும் பெருமையும் முற்றி, தனது கூரிய அறிவாலே இதுவே செயற்பாலது என ஆராய்ந்து, ஓர் மதவேழமானது தன்னை அகப்படச் செய்த குழியினைக் கோட்டினாற் கரைகள் இடியும்படி தூர்த்துவிட்டுப் பெண்யானையின் பக்கல் சென்றாற்போல அப்பகைவருடைய மதிலைக்கடந்து, வாளாற் பகைவரைக் கொன்று, உட்குப் பொருந்திய தன் அரசுரிமையை முறையாலே பெற்றனன்; என்பது இதன் பொருள்.

இவ்வாண்டகை சிறையைக் கடந்து வெளியேறுவனென்ப துணர்ந்த வன்கண்மையுடைய பகைவர் இவனைக் கோறல் கருதிச் சிறையின்கண் தீக்கொளுவினர் எனவும், இவன் அத்தீயினை அஞ்சாது மிதித்து வெளிப்போந்தனன் எனவும், அதனால் இவனது கால் கரிந்தமையின் இவனது வீரத்தைப் பாராட்டி யாவரும் **கரிகால்** எனவே இவனுக்குப் பெயர் கூறிவந்தனரெனவும் கருதப்படுகிறது. பொருநராற்றுப் படையின் கூற்றிலே காணப்படும்,

52720

"முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால்—செய்ச்செய்
அரிகால்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் காலனெருப் புற்று"

என்னும் வெண்பாவிலே காலில் நெருப்புற்றமை இளங் தோதப்பெற்றது. நச்சினார்க்கினியரும் 'கண்ணார் கண்ணிக் கரிகால்வளவன்' என்னும் பொருநராற்றுப்படை யடிக்குப் பொருள் கூறுமிடத்தே "முச்சக்கரமும் என்னுங் கவியானே கரிகாலாதல் உணர்க" என்றனர்.

"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினன் இல்லை
உயிருடையா ரெய்தா வினை"

என்னும் பழமொழி வெண்பாவாலும், அதன் உரையாலும் இவன் தீயாற் சுடப்பட்டு உய்ந்தமையும், இரும்பிடர்த் தலையார் என்பவர் இவனுக்கு அம்மானுதலும், இவன் செங்கோலோச்சுதற்கு அவர் துணையாயிருந்தமையும் பெறப்படுகின்றன. இவ்வரலாற்றுண்மை யுணராத சிலர் கரிகாலன் என்பதனை வடசொற்றொடராகக் கொண்டு 'யானைப் படைக்குக் காலன் போன்றவன்' என்று தாம் வேண்டிய வாறு பொருளுரைத்தனர். கரிகால்வளவன் முதலிய தொடர்களில் கால் என்றே இருத்தலையும் அவர் நோக்கிற்றிலர். அகநானூற்றிலே பல பாட்டுக்களில் 'கரி கால்' என்றே இவன் கூறப்படுகின்றான். இவன் தன் நாட்டை வளம்படுத்திய பெருமை நோக்கி, கரிகால்வளவன், கரிகாற் பெருவளத்தான், திருமாவளவன் எனப் பின்பு வழங்கப்பெற்றானுதல் வேண்டும். பெருவீரனுகிய இவ் வேந்தன் பெயரை இவன் வழியிலே பின் வந்தார் சிலர்

தரித்துக்கொள்ளுதல் இயல்பாகலின் அன்னுரை நோக்கி இப்பெயர்க்கு வேறு காரணங் கூறவேண்டுவதும் இன்று. பராந்தகன் மகனுகிய கரிகாலனை யானை எடுத்துச் செல்லும் பொழுது அவன் தாய் அவனது உள்ளங்காலிலே கரிக் கோடு கீறினள் எனச் செவ்வந்திப் புராணம் கூறுவது கரிகாலன் என்னும் பெயரை வைத்துக் கற்பித்ததென்றே தோன்றுகிறது.

இனி,

> "உரைமுடிவு காணு னிளமையோ னென்ற
> நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
> சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
> கல்லாமற் பாகம் படும்"

என்னும் பழமொழிச் செய்யுளாலும், 'தம்முள் மறுதலை யாயினர் இருவர் தமக்கு முறைமை செய்யவேண்டி வந்து சில சொன்னல் அச்சொல்லின் முடிவுகண்டே ஆராய்ந்து முறை செய்ய அறிவு நிரம்பாத இளமைப் பருவத்தா னென்றிகழ்ந்த நரைமுது மக்கள் உவக்கும் வகை நரை முடித்து வந்து, முறைவேண்டி வந்த இருதிறத்தாரும் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறை செய் தான் கரிகாற் பெருவளத்தானென்னுஞ் சோழன்; ஆத லால் தத்தம் குலத்துக்குத் தக்க விச்சைகள் கற்பதற்கு முன்னே செம்பாகமுளவாம்' என்னும் அதன் பழைய உரையாலும் இம் மன்னன் இளமையில் முதுமைக்கோலம் பூண்டு முறை செய்தமை பெறப்படுகின்றது. இச்செய்தி மணிமேகலையுள்ளும்,

> "இளமை நாணி முதுமை யெய்தி
> உரைமுடிவு காட்டிய வுரவோன்"

எனத் தண்டமிழாசானாகிய சாத்தனாரால் சோழர் குலத்தாரின் நீதியை அறிவுறுத்தற்கு எடுத்துக் காட்டப்பெற்றது. இவைதாம், முன் குறித்துப் போந்த சிறையைக் கடந்த செய்தியும் இவ்வரசன் மிக இளையனாயிருந்தபொழுதே யாவரும் வியக்கும்படியான உயர் நீதியும் பெருவீரமும் உடையனாயிருந்தமையைத் தெரிவிக்கும் சிறந்த சான்றுகளாம்.

இவன் நாங்கூர் வேளிடை மகட் கொண்டான் என்பதும், இவன் தந்தையாகிய உருவப்பஃறேர் இளஞ் சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட் கொண்டான் என்பதும்,

"மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப"

என்னும் தொல்காப்பியச் சூத்திர வுரைக்கண் நச்சினார்க்கினியர் உரைத்தலாற் பெறப்படுகின்றன. அங்கு அது செவியாறற் செய்தியாகவே அவராற் குறிப்பிடப்படுகின்றது. இளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேளிடை மகட் கொண்டான் என்பதிலிருந்து அவள் வயிற்றுப் பிறந்தோனே கரிகாலன் எனத் துணிதல் இயலாது; என்னை? அரசர்க்கு மனைவியர் பலருளராகலின் என்க.

இனி, இவ்வேந்தனது வீரத்தைச் சிறப்பித்து, பொருநராற்றுப்படையானது, இவன், 'முருகன் போலும் சீற்றமும் உட்கும் பொருந்தியவனென்றும், கூற்றுவனைக் காட்டிலும் மிக்க வலியுடையனென்றும், தன் வலியறியாத பகைவர் பின்பு வலியறிந்து ஏவல் கேட்பவும் ஏவல் செய்யாத பகைவர் தேயம் கவற்சி பெருகவும் இளஞாயிறு கடலின் மேலே கதிர்களைப் பரப்பி விசும்பிடைச் சென்றாற் போலப் பிறந்து தவழ்தல் கற்ற நாள் தொடங்கித் தோள்

வலியாலே பகைவென்று நாடுகாத்தவன் என்றும், சிங்கக் குட்டியானது பாலுண்டல் கைவிடாத இளம்பருவத்தே முதல் வேட்டையிற் களிற்றினைக் கொன்றாற்போலச் சேரனும் பாண்டியனும் ஒரு களத்தே படும்படி வெண்ணி என்னும் ஊரிலே தாக்கியவன் என்றும் கூறுகின்றது. இதிலிருந்து இவனது கன்னிப்போர் வெண்ணிப் போர் என்பது பெறப்படுகின்றது. இவன் மலையை அகழ்க்குவன், கடலைத் தூர்க்குவன், வானை வீழ்க்குவன், வளியை மாற்றுவன் என உலகம் மீக்கூறும்படித் தான் கருதிய போர்த்துறைகளை யெல்லாம் பொருது முடித்தானென்று பட்டினப்பாலை கூறுகின்றது.

இவன் வெண்ணிப்பறந்தலையில் சேரமான் பெருஞ் சேரலாதனோடு பொருது அவனை வென்றான் என்பதும், சேரலாதன் அப்போரிலே தனக்குண்டாகிய புறப்புண்ணிற்கு நாணி வடக்கிருந்தான் என்பதும், 55-ம் அகப்பாட்டு 65, 66-ம் புறப்பாட்டுக்கள் ஆகியவற்றாலும், அப்போரின்கண் சேரனோடு பாண்டியனொருவனும் தோல்வியுற்றான் என்பது,

"இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"

என்னும் பொருநாற்று அடிகளாலும், அவ்வேந்தர்களோடு வேளிர் பதினொருவர் தோற்றனர் என்பது, 246-ம் அகப்பாட்டில்,

"காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய

மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா வழுந்தூ ரார்ப்பினும் பெரிதே"
என்று கூறப்படுதலாலும் பெறப்படுகின்றன.

வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் இவனுடன் போர் குறித்து வந்த ஒன்பது மன்னர்கள் இவனெதிரிற் செல்லவும் அஞ்சினராய் ஒரு பகலிலே தங்கள் குடைகளைப் போகட்டு ஓடினர் என்பது, 125-ம் அகப்பாட்டில்,

"பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
ஒன்பது குடையும் நன்பக லொழித்த
பீடின் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடை நீ யெமக்கே"
என்று கூறப்படுதலாற் போதருகின்றது. தென்னவனும் ஒளியர், அருவாளர், வடவர், குடவர், பொதுவர், இருங்கோவேள் என்பாரும் இவனால் வெல்லப்பட்டு ஒடுங்கினர் என்று பட்டினப்பாலை கூறுகின்றது. இங்ஙனம் தமிழ் நாட்டிலும் தமிழ்நாட்டையடுத்த இடங்களிலுமிருந்த அரசர்களையும் குறுநில மன்னர்களையும் வென்று அடிப்படுத்திய கரிகாலன் போர் விருப்பங்கொண்டு வட நாட்டிற்குச் சென்றான். தமிழகத்திலே தன்னுடன் பொருவாரைப் பெறாத திருமாவளவன் போரிலே பெருவிருப்புடையனாகலின் வடதிசையிற் பகைவரைப் பெறலாமெனக் கருதி, வாளும் குடையும் வீரமுரசும் நாட்கொண்டு, இத்திசையிலாயினும் நான் பகைவரைப் பெறவேண்டுமெனத் தெய்வத்தை வணங்கி அத்திசை நோக்கிச் சென்றான் என்றும், அங்ஙனம் செல்லுகையில் இமயமலை குறுக்கிட்டுத் தடுத்தமையின் 'என் நசை யொழிய இது தடுத்தது' என முனிந்து அதன் பிடரிடத்தே தனது புலியைப் பொறித்து

மீண்டான் என்றும், மீளுகையில், பகை நண்பு இலனாகிய வச்சிர நாட்டரசன் ஓர் முத்துப் பந்தரைத் திறையாகத் தந்தனன், பகைவனாகிய மகதநாட்டரசன் பொருது தோற்றுப் பட்டிமண்டபமொன்றைத் தந்தனன், நட்பாளனாகிய அவந்தி வேந்தன் ஓர் வாயிற்றோரணத்தை உவந்தளித்தனன் என்றும், அவ்வேந்தர்களின் முன்னோர் புரிந்த உதவிக்குக் கைம்மாறாக மயனால் நிருமித்துக் கொடுக்கப்பட்ட அப்பந்தர் முதலியன வளவர் பெருமானாற் புகார் நகரின்கண் கொணர்ந்து வைக்கப்பட்டன என்றும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இமயமலையிற் புலிபொறித்ததாகிய செய்தி "இலங்குவேற் கரிகாற் பெருவளத்தோன், வன்றிறற்புலி யிமயமால் வரைமேல் வைக்கவேகுவோன்" எனப் பெரிய புராணத்திலும் கூறப்பெற்றுளது. கரிகாலன் இமயமலையைச் செண்டால் அடித்துத் திரித்தனன் என்றும், அச் செண்டு கச்சிப்பதியிலே காமகோட்டம் காவல் பூண்டிருந்த சாத்தனார் என்னும் தெய்வத்தால் அளிக்கப்பட்டதென்றும்

"செண்டு கொண்டுகரி காலனொரு காலி லிமயச்
சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய் புலிப்பொறி குறித்தது மறித்த பொழுதே".
(கலிங்கத்துப்பரணி)

"கச்சி வளைக்கைச்சி காமகோட் டங்காவன்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு"

என்னும் செய்யுட்களாற் பெறப்படுகின்றது. அடியார்க்கு நல்லாரும் இவ்விரு செய்யுட்களையும் மேற்கோளாகக்

காட்டி, 'சாத்தனருளால் தான் பெற்ற செண்டினாலே அதனை அடித்துத் திரித்தனன்' என உரை கூறினர். இமயமலையைச் செண்டால் அடித்ததென்னும் செய்தி இத்தகையதென நம்மால் அறியக்கூடவில்லை. இதுபோல் வதொரு செய்தி திருவிளையாடற் புராணத்திலும் கேட்கப் படுகின்றது. அஃது உக்கிர குமார பாண்டியர் மேருவைச் செண்டால் அடித்தார் என்பது. கரிகாலன் இலங்கை மீதும் படையெடுத்துச் சென்று அந்நாட்டு மன்னனை வென்று சிங்களக் குடிகள் பலவற்றைச் சிறைப்படுத்து மீண்டனன் என்று மகா வமிசம் என்னும் இலங்கைச் சரித்திரத்தால் அறியப்படுகின்றது.

இனி, இவ்வேந்தர் பெருமானது வள்ளன்மையை, இவன், பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பைம்பொன் பரிந்தளித்தமையே புலப்படுத்தா நிற்கும். இவன் இன்ன பரிசில் அளித்ததனை,

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என்று கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. இங்ஙனம் நீதியினும் வீரத்தினும் வண்மையினும் மேன்மையுற்று விளங்கிய மன்னர் பெருமானாகிய கரிகாலன் தனது நாட்டை வளம்படுத்துவதிற் கண்ணுங் கருத்துமாய் இருந்தானவன். நாட்டை வளம்படுத்துதலாவது வேளாண்மை வாணிகம் கைத்தொழில் என்பவற்றால் நாட்டின் செல்வத்தைப் பெருக்குதலாகும். இவற்றுள்ளும் வேளாண்மையே முதலாகக் கருதப்படற் பாலது.

"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

என்று தெய்வப் புலவர் நாட்டிலக்கணம் கூறினமையும் நோக்குக. வேளாண்மை செழிப்புறவேண்டுமேல் காடு கரம்புகளைத் திருத்தி விளைநிலங்களாக்குதலும், ஆறு குளம் ஏரிகளை அமைத்தலும், உழு தொழில் செய்வாரைப் போதிய வளவு குடியமைத்துப் பாதுகாத்தலும் செயற்பாலனவாம். கரிகாலனால் இவை செய்யப்பட்டனவென்பது,

"காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கி
... ... ... ...
கோயிலொடு குடிநிறீஇ"

என்னும் பட்டினப்பாலை யடிகளாற் பெறப்படுகின்றது. மற்று, இவன் தன்னாட்டில் வெள்ளப்பாழ் உண்டாகாமலும் நாட்டின் எம்மருங்கும் நீர்ப்பாய்ச்சல் உளதாகவும் காவிரியின் கரையை உயர்த்திக் கட்டினன் எனவும் தெரிகின்றது. காவிரிக்குக் கரைகட்டிய இச்செய்தி,

"சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்"

என விக்கிரமசோழன் உலாவிற் கூறப்பெற்றுளது. தத்தம் ஆட்களுடன் போந்து காவிரிக்குக் கரைகட்டவேண்டித் தன் கீழடங்கிய அரசர் பலர்க்குக் கரிகாலன் கட்டளையிட்டனன் என்றும், அப்பொழுது தெலுங்கு நாட்டையாண்ட மூன்று கண்களையுடைய அரசனொருவன் அவன் பணியை மதித்துக் கரைகட்ட வாராது செருக்குற்றிருக்க, கரிகாலன் அவனது உருவைப் படத்தில் எழுதிவரச்செய்து படத்திலுள்ள அவனது நெற்றிக்கண்ணையழிக்க உடனே அவன் தனது நெற்றிவிழியை இழந்து தருக்கடங்கினன் என்றும்

" மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாற்
கண்கொண்ட சென்னி கரிகாலன் "

என்னும் குலோத்துங்கன் உலாவாலும்,

" தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்
றொடர வந்திலா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிதுமி கைக்கணென்
றிங்க ழிக்கவே யங்க ழிந்ததும் "

என்னும் கலிங்கத்துப் பரணியாலும் விளங்குகின்றது.

காவிரியின் கிளை நதிகளாகிய வெட்டாறு, அரிசிலாறு முதலியன இவனால் வெட்டப்பட்டன என்றும் சிலர் கருதுகின்றனர். இங்ஙனமாகக் காவிரியின் நீர் எஞ்ஞான்றும் வற்றாது பாய்ந்து வளஞ்செய்தலின், சோணாட்டிலே, நெல்லையறுத்துச் சூட்டை மலையாக அடுக்கி நாடோறும் கடாவிட்டு மேரு வென்னும்படி திரட்டின நெற்பொலி நெருங்கத் தெற்றின சேர் (நெற்கூடு) களிலே இடமின்றிக் கிடக்கும்படி வேலி நிலம் ஆயிரக்கலமாகிய செந்நெல் விளைவுடையதாயிற்று.

" கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடு கோடாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே " (பொருநாறு)

" ஏரியும் ஏற்றத்தி னாலும் பிறநாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம்—தேரின்
அரிகாலின் கீழ்கூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு" (ஷ இறுதிவெண்பா)

என்பன காண்க.

இனி, இவ்வேந்தனால் வாணிகம் எவ்வளவு மேன்மை யடைந்திருந்திருந்த தென்பது காவிரிப்பூம் பட்டினத்தின் ஏற்றுமதி இறக்குமதி முதலியன குறித்துப் பட்டினப் பாலையும் சிலப்பதிகாரமும் கூறுவனவற்றால் அறியலாகும். புகார் நகரின் மருவூர்ப்பாக்கத்து நடுவிடத்தும், கடலோரத்திலும்

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்"

சீனம் முதலிய இடங்களினின்றும் வந்த கருப்பூரம் பனி நீர் குங்குமம் முதலிய அரிய பொருள்களும், மற்றும் பெருமையுடைய பல பொருள்களும் நிலத்தின் முதுகு நெளியும்படி திரண்டு பொருந்தியிருக்கும் என்றும்; கடலோரத்தில் பண்டசாலையினின்றும் கடலில் ஏற்றுதற்காகவும் கடலினின்றும் பண்டசாலையில் இறக்குதற்காகவும் சரக்குகளின் பொதிகள் சோழனுடைய புலி முத்திரை யிடப்பட்டு வரம்பின்றி மலைபோலத் திரண்டு கிடக்கும் என்றும்; அப்பொதிகளின் அளவு முதலியவற்றிற்கு ஏற்றபடி ஆயக்கணக்கர்கள் இரவு பகல் ஓயாது சுங்கம் கொள்வார்கள் என்றும்; பட்டினப்பாலை கூறுகின்றது. கூலம் விற்கும் மறுகுகளில் இன்ன சரக்கு ஈண்டு உளதென்று அறிவிக்கும் அடையாளமாகக் கொடியெடுத்திருத்தலும், கப்பல்கள் திசைமயங்கிச் செல்லாது அழைக்கும் கலங்கரை விளக்கம் கடலோரத்தில் நிறுவப்பட்டிருத்தலும் போல்வன சிலப்பதிகாரத்திலும், புகார் நகரின் வணிகர்

களும், வேறு பல தேயங்களினின்றும் அங்குவந்த பல மொழி பேசும் வணிகர்களும் கலந்து இனிதுறைதலும், அங்கே வாணிகஞ் செய்வோர் பிறர் பொருளையும் தம் பொருளையும் ஒப்ப நாடித் தாம் கொள்ளுஞ் சரக்கைக் கொடுக்கும் பொருட்கு மிகையாகக் கொள்ளாமலும், கொடுக்குஞ் சரக்கை வாங்கும் பொருட்குக் குறையக் கொடாமலும் இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லிக் கொடுத்து நல்ல வாணிகம் நடாத்துதலும் பட்டினப்பாலையி லும் கூறியிருத்தலினின்று அற்றை நாள் அங்கு நடை பெற்ற வாணிகத்தின் நாகரிக முறையும், அறந்திறம்பாமை யும் புலனாகின்றன.

இனி, காவிரிப்பூம்பட்டினத்தில்,

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக (மாக்களும்)
கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
துன்ன காரரும் தோலின் றுன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்"

முதலாயினோர் மறுவின்றி விளங்கினர் எனச் சிலப்பதி காரம் கூறுதலினின்று பல்வகையான கைத்தொழில்களின் பெருக்கம் புலனாகின்றது.

இனி, திருமாவளவனாற் பல நகரங்கள் சிறந்த முறை யில் நிருமிக்கப்பட்டனவாகும் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

"பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ

வாயிலொடு புழையமைத்து
ஞாயில்தொறும் புதைநிறீஇ"

என அவன் உறையூரைப் புதுப்பித்த செய்தி பட்டினப் பாலையிற் சுருங்கக் கூறப்பெற்றுளது. காவிரிப்பூம் பட்டினமும் கரிகாலனால் நன்கு திருத்தியமைக்கப்பட்டிருக்கவே வேண்டும்.

காவிரியின் வடகரையில், கடலையடுத்திருந்த இப்பட்டினம் மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என இருகூறாயிருந்தது. இவற்றுள், கடலோரத்திலிருந்த மருவூர்ப் பாக்கத்திலே கலங்கரை விளக்கமும், பண்டசாலைகளும், சுங்கச்சாவடிகளும், கண்ணைக் கவரும் அழகுடைய யவனர் இருக்கைகளும், மற்றும் வேறு பல தேயங்களினின்றும் வாணிகப் பொருட்டால் வந்தவர்களின் இருப்பிடங்களும், வண்ணம் சுண்ணம் சாந்தம் பூ புகை விரை என்பன விற்போர் இடங்களும், சந்தனம் அகில் பட்டு பவளம் முத்து பொன் என்பனவும் பொற்பணிகளும் விற்கும் மறுகுகளும், பட்டுச்சாலியர், வெண்கலக்கன்னார், செம்புகொட்டிகள், தச்சர், கொல்லர், சித்திரகாரிகள், சிற்பாசாரிகள், உருக்குத்தட்டார், இரத்தினப்பணித்தட்டார், தையற்காரர், கிழியானும் கிடையானும் பூ வாடாமாலை பொய்க் கொண்டை முதலியன செய்வோர், குழலினும் யாழினும் இசைபாடும் பாணர் முதலாயினோர் இருப்பிடங்களும் இருந்தன; பட்டினப்பாக்கத்திலே அரசவீதியும், தேரோடும் வீதியும், ஆவணவீதியும்,வணிகர் மறையோர் காணியாளர், மருத்துவர், சோதிடர் என்பாரின் தனித்தனி மறுகுகளும், சூதர், மாகதர், நாழிகைக் கணக்கர், கூத்தர், குயிலுவர், கணிகையர் முதலாயினாரின் வேற்றுமை தெரிந்த இருப்பிடங்களும் இருந்தன; மகத வினைஞரும் மராட்டக் கம்மரும் அவந்திக்கொல்லரும் யவனத்தச்சரும் தண்டமிழ் வினைஞர் தம்மொடுங் கூடி இயற்றிய மண்டபம் முதலிய

வற்றையுடைய அரசன் கோயில் நடுவண்இருக்க, அதனைச் சூழ்ந்து கடும்பரிகடவுநர், களிற்றின் பாகர், நெடுந்தேர் ஊருநர், கடுங்கண்மறவர் என்பார் பரவியிருக்கும் இருப்பிடங்கள் இருந்தன ; தேவ கோட்டங்களும், அம்பலங்களும், பொதியில்களும், கலைக்கழகங்களும், வெள்ளிடை மன்றம், இலஞ்சிமன்றம், நெடுங்கல்மன்றம், பூதசதுக்கம், பாவைமன்றம் என்னும் மன்றங்களும், இலவந்திகை, உய்யானம், சம்பாதிவனம், கவேரவனம், உவவனம் என்னும் பூஞ்சோலைகளும் அங்கே விளங்கின ; அரசன் அரண்மனையை யடுத்த எந்திரவாவியையுடைய இலவந்திகை என்னும் சோலையின் மதிற்புறத்தினின்றும் காவிரிக்குப் புதுப்புனலாடப்போம் பெருவழி இருமருங்கும் நிழன் மரச்சோலை சூழ்ந்திருந்தது ; மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப்பாக்கத்திற்கும் இடையே நிரைபடச் செறிந்த சோலை மரங்களின் கால்களே தூணாகக் கட்டப்பட்ட கடைகளையுடைய நாளங்காடி (காலைக் கடைத்தெரு) ஒன்று இருந்தது ; என, சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலைகளால் அறியப்படுதலினின்று புகார்நகரின் அமைப்பும் சிறப்பும் ஒருவாறு புலனாகும்.

இனி, காஞ்சிமா நகரமும் கரிகால் வேந்தனால் நன்கு திருத்தியமைக்கப்பட்டதென்று,

“ என்று முள்ளவிந் நகர்கலி யுகத்தி லிலங்கு வேற்கரி
காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி யிமையமால் வரைமேல் வைக்க வேகுவோன்
றனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத் திருந்து காதநான்
குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக் குடியிருத்தின
கொள்கையின் விளங்கும் ”

என்னும் பெரியபுராணச் செய்யுளால் அறியப்படுகின்றது. கச்சி நாற்காதம் அளவினதென்பதும், மலைபோல் உயர்ந்த மதில் சூழ்ந்ததென்பதும் இச்செய்யுளால் விளங்குகின்றன. அஃது அகழியாலும் மதிலாலும் சூழப்பட்டிருந்ததென மணிமேகலையும் கூறுகின்றது. மற்றும், காவிரிப்பூம்பட்டினத்தின் பல்வேறு வீதிகளும், பற்பல தொழில் செய்வார் இருப்பிடங்களும் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டிருத்தல் போன்றே காஞ்சியின் வீதிகளும், குடியிருப்புக்களும் மணிமேகலையிற் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விரு காப்பிய ஆசிரியர்களும் இத் தலைநகரங்களை நேரிற் பார்த்திருத்தல் ஒருதலையாகலின் இவைகளைப்பற்றி அவர்கள் கூறுவதிற் சிறிதும் பிறழ்ச்சி யிருக்கக் காரணமில்லை. இரண்டிலும் காணப்படும் இவ்வொற்றுமையானது இவ்விரு நகரங்களையும் கரிகாலன் திருத்தியமைத்தனன் என்பதனையே வலியுறுத்துகின்றது. இன்னும், கரிகாலனே தொண்டை மண்டலத்தை இருபத்து நான்கு கோட்டங்களாகப் பகுத்தனன் என்றும், பலவிடங்களிலுள்ள உழுதொழில் புரியும் வேளாளரை அங்கே குடியேற்றினன் என்றும், கச்சியிற் காமக்கோட்டத் திருப்பணி செய்தனன் என்றும் கூறுகின்றனர். இக்கூற்றுகட்கும் சிற்சில ஆதரவுகள் உள்ளன. "நாடெங்குஞ் சோழன்முனந் தெரிந்தேயேற்று நற்குடி நாற்பத்தெண்ணுயிரம்" எனச் சேக்கிழார் புராணத்துக் கூறியிருப்பது கரிகாலன் வேளாளரைக் குடியேற்றியதையே குறிப்பதாகல் வேண்டும். இங்ஙனம் தொண்டை நாட்டைச் சீர்ப்படுத்திய சோழன் கரிகாலன் அந்நாட்டினைத் தொண்டைமான் இளந்திரையன் தனக்குப் பிரதிநிதியாக இருந்து ஆண்டு வரும்படி செய்தனன் என்று கருதுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

இனி, சோணாட்டிலுள்ள அழுந்தூர், இடையாறு, கழார் என்னும் பதிகளை இவனோடு இயைபு படுத்தி அகநானூற்றிலே பரணர், நக்கீரர் முதலிய நல்லிசைப்புலவர்கள் பாராட்டி யிருத்தலின் இவனால் அப்பதிகள் சிறப்பெய்தி யிருக்கவேண்டுமென்று கருதலாகும். இங்ஙனமாக உறையூர், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சி என்னும் நகரங்களையும், பல ஊர்களையும் திருத்தமுறப் புதுக்கிய வளவர் பெருமான் பல கோயில்கள் எடுப்பித்தும், திருவிழாக்கள் செய்வித்தும், கல்விக்கழகங்கள் நிறுவியும், நீதிமன்றங்கள் ஏற்படுத்தியும், கிராம சபை (பஞ்சாயத்து)கள் தோற்றுவித்தும் பலவாற்றானும் நாட்டிற்கு நலஞ் செய்தனன் என்று கருத ஏதுக்கள் உண்டு. இவை, பின் கூறப்படும் வேறு சில சோழர்க்கும் பொதுவாவன ஆகலின், இந் நூலின் இறுதியிற் கூறப்படும். இவனது ஆட்சிக் காலத்திலே ஒவ்வோராண்டிலும் இளவேனிற் பருவத்தில் இருபத்தெட்டு நாள் நடைபெற்ற பெரிய திருவிழா இந்திரவிழாவாகும் என்றும், புதுப்புனல் விழவு இவனால் மிக்க சிறப்புடன் கொண்டாடப்பெற்றதென்றும் இங்கே கூறுதல் அமையும். இவன் புனல்விழாக் கொண்டாடிய சிறப்பு,

> "விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
> தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல"

எனச் சிலப்பதிகாரத்துக் கடலாடு காதையில் உவமையாகக் கூறப்பட்டிருப்பதனால் வெளியாகும்.

இனி, புதுப்புனல் விழவோடும் இவனோடும் இயைபுடைய மற்றொரு வரலாறும் ஈண்டே அறியற்பாலது. அது, கரிகால்வளவனுக்கு ஆதிமந்தி எனப் பெயரிய புதல்வி யொருத்தி இருந்தனள்; இவள் நல்லிசைப் புலமை வாய்ந்தவள்; கற்பிற் சிறந்தவள்; இவள் கணவன் சேர

மன்னனாகிய ஆட்டனத்தி என்பான். இவ்விருவரும் சோணாட்டிலுள்ள கழார் முன்றுறையில், புதுப்புனல் விழாவிற்குச்சென்று கரிகாலன் காண நீரில் விளையாடுகை யில், காவிரியானது அத்தியை வவ்விச்சென்றது. ஆதி மந்தி தன் காதலனைக் காணப்பெறாது வருந்தி, காவிரி வழியே ஓடிக் கடல் மருங்கெய்திக் கூவி அரற்றி, பின்பு மருதி யென்பாளால் அவனைக் கண்டு தழுவிக்கொண்டு போந்தனள்; என்பது. இச்செய்தி, சோணாட்டிற் பிறந்த பத்தினிப் பெண்டிர் சிலருடைய பெருமைகளை எடுத்துக் காட்டி, அங்கே பிறந்த யானும் ஓர் பத்தினியாயின் இவ் வரசோடு இந்நகரையும் ஒழிப்பேன் என்று கண்ணகி வஞ்சினங்கூறுமிடத்தில் இளங்கோவடிகளால் உரைக்கப் பட்டுளது.

"மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
றன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவி றோளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட வவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்"

(சிலப்பதிகாரம், வஞ்சினமாலை)

என்பது காண்க. ஆதிமந்தியின் கணவன் பெயர் ஆட்ட னத்தி என்றும் அத்தி என்றும் அகப்பாட்டுகளிற் கூறப் பெற்றுளது.*

'ஆட்ட னத்தி நலனயந் துரைஇத்
தாழிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர்"

(அகம், உஉஉ.)

இனி, இவ்வேந்தர் பெருமான் வேதங்கூறும் வேள்வி பலவுஞ் செய்துமுடித்தவனென்பது 224-ம் புறப்பாட்டால் விளங்குகிறது. இவன் தமிழ்ப்புலமை சான்று தமிழைப் பொன்னேபோற் போற்றி வளர்த்தவனென்பது நல்லிசைப் புலவருள் கருங்குழலாதனார், வெண்ணிக்குயத்தியார் என்போர் புறத்திலும், பரணர், நக்கீரர், மாமூலர் என்போர் அகத்திலும் இவ்வரசனைப் புகழ்ந்து பாடியதுடன், முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப்படையும், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையும் இவன்மீது பாடியிருத்தலானும், உருத்திரங்கண்ணனார்க்கு இவன் பதினாறு நூறாயிரம் பொன் பரிந்தளித்தமையானும் பெறப்படும். இவனைப் பாடியவருள் வெண்ணிக்குயத்தியார் பெண்பாலராயிருத்தலும், இவன் மகள் ஆதிமந்தி நல்லிசைப் புலமை வாய்ந்திருத்தலும் மகளிர் கல்வியிற் சிறந்து விளங்குவதில் இம் மன்னனுக்கிருந்த ஆர்வத்தைப் புலப்படுத்தும். கற்பிற் சிறந்த மனைவியர் பலர் இவனுக்கிருந்திருக்க வேண்டுமென்பது,

"தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
வேத வேள்வித் தொழின்முடித் ததூஉம்
அறிந்தோன் மன்ற அறிவுடை யாளன்"

என்று புறப்பாட்டிற் கூறியிருத்தலான் அறியலாகும். இவனுக்கு ஆதிமந்தி என்னும் புதல்வியையன்றி, கிள்ளிவளவன், நலங்கிள்ளி, மாவளத்தான் என்னும் புதல்வர்

---

"மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காண
... ... ...
புனையந் தாடும் அத்தி யணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு"

(அகம், ௩௭௬.

மூவர் இருந்தனர். இவனுக்கு அம்மானாகிய இரும்பிடர்த்தலையாரும் நல்லிசைப் புலவர்; புதல்வரும் புதல்வியும் புலமை சான்றவர்; எனவே, இவன் குடும்பமும் சுற்றமுமெல்லாம் தெண்டிரை யமிழ்து மொவ்வாத் தீஞ்சுவை கெழீஇய செவ்வித் தண்டமிழ் இன்பமாருந்தகையன என்பது போதரும். வீரம், வண்மை, நீதி, சூழ்ச்சித் திறன் ஆட்சிவன்மை முதலியவற்றுக்கெல்லாம் எடுத்துக் காட்டாகும் பெருமையுடைய கரிகாற் பெருவளத்தான் என்னும் இவ்வேந்தர் பெருமான் புவியிலே தன் பருவுடலோடு விளங்கிய காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதி யென்பது பலவாற்றானும் வலியுறுகின்றது.

## X

**கிள்ளிவளவன்**

இவன் கரிகாலனை யடுத்துக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தானாகத் தெரிதலானும், இவன் தம்பியாகிய நலங்கிள்ளிக்கு வழங்கும் சேட் சென்னி என்னும் பெயர் பாட்டன் பெயராக இருத்தல் கூடுமாகலானும் இவ்வரசன் கரிகால் வளவன் மகனென்று கருதப்படுகின்றான். நலங்கிள்ளி, மாவளத்தான் என்னும் இருவரும் இவன் தம்பியர் என்பது பின் காட்டப்பெறும். புகாரில் இருந்தவனாக மணிமேகலையிற் கூறப்படுகின்ற சோழ மன்னன் இவனே. அக்காப்பியத்திலிருந்து இவனுக்கு நெடுமுடிக்கிள்ளி, மாவண்கிள்ளி, வடிவேற்கிள்ளி என்னும் பெயர்களும் வழங்கினவென்பதும், இவனது தேவியாகிய சீர்த்தி என்பாள் மாவலி வமிசத்திற் பிறந்தவள் என்பதும், இவள் வயிற்றுப் பிறந்தோன் உதயகுமரன் என்பதும் அறியப்படுகின்றன. இவன் நாகநாட்டரசனாகிய வளைவணன் என்பானது மகளாகிய பீலிவளையை மணந்து ஓர் மகனைப்பெற்ற செய்தியும் அதிலிருந்து தெரிகிறது.

பல புலவர்கள் இவனைப்பாடிய புறப்பாட்டுக்களிலிருந்து இவன் மிக்க வீரமும், வண்மையும் உடையவனென்றும், புலவர்கள் தன்னை நெருங்கிக்கூறும் அறிவுறாஉக்களைச் செவிமடுத்து அந்நெறி பொழுகுதலால் தன் குறைகளைப் போக்கிவந்தனன் என்றும் தெரிகிறது.

ஆலத்தூர்கிழார் என்னும் புலவர் இவன்பாற் பரிசில் பெற்றுச் செல்லும்பொழுது, ‘எம்மை நினைத்து வருவீரோ’ என இவன் வினவா நிற்புழி, அவர், ‘பாணர்க்குக் கரவில்லாத உள்ளத்துடன் இனிய மொழி கூறி அமலைக் கொழுஞ்சோறு அளித்து அகலாச் செல்வம் முழுதுஞ் செய்தருளிய எம் வேந்தனாகிய வளவன் வாழ்வானாக என்று காலையந்தியும் மாலையந்தியும் நினது பெருமை பொருந்திய தாளைப்பாடேனாயின் ஆதித்தன் தோன்றுதலறியான்; யானோ எளியேன்; இவ்வுலகின்கண் சான்றோர் செய்த நல்வினையுண்டாயின், இமயமலையிலே திரண்டு கொண்டல்கள் சொரிந்த மழைத்துளியினும் பலகாலம் வாழ்வாயாக’ என்று கூறினர். இவ்வரசன் சேரனது கருவூரை ஒருகால் முற்றுகையிட்டிருந்தான். சேரனோ இவனோடு எதிர்த்து மலையும் ஆற்றலின்றி மதிலையடைத்துக் கொண்டு உள்ளிருந்தனன். அடை மதிற்பட்டிருக்கும் நகரத்து மக்கள் எய்தும் இன்னல் அளவிடற்கரியதன்றே? அதனை யறிந்தார் அருண்மிக்க புலவராகிய இவ் வாலத்தூர் கிழார்; உடனே வளவனிடத்துச்சென்று, அவனை நோக்கி, ‘அரசே, காக்கள்தோறும் காவன் மரங்களை வெட்டும் ஓசை தன் ஊரிலே தனது கோயிற்கண் சென்று ஒலிக்கவும் அவ்விடத்து மானமின்றி இனிதாக விருந்த வேந்தனுடன் இவ்விடத்து நின் முரசு ஒலிக்க நீ பொருதாயென்பது கேட்டார் நாணுந் தன்மையுடையது; நீ அவனைக் கொல்வாயாயினும் கொல்லாது ஒழிவாயாயினும் அவற்றால் நினக்குண்

டாகும் உயர்ச்சியை யாம் கூறவேண்டுவதின்று; நீயே எண்ணியறிவாய்' என்னுங் கருத்துள்ள ஓர் பாட்டினைக் கூறினர். அதனைக் கேட்டு வளவனும் போரொழிந்து மீண்டனன்.

வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் இவ்வரசனைப் பாடிய செவியறிவுறூஉ உயர்ந்த கருத்துக்கள் பலவுடையது. 'பெரும, தமிழ் நாட்டிற்குரிய முரசுமுழங்கு தானையையுடைய மூவேந்தருள்ளும் அரசென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது நின்னுடைய அரசே; ஞாயிறு நான்கு திக்கினும் தோன்றினும், வெள்ளிமீன் தென்றிசைக்கட் செல்லினும் அழகிய காவிரி இடையறாது நீர் பெருகிவந்து பல கால்களால் ஊட்டுதலின் தொகுதி கொண்ட வேற்படையின் தோற்றம்போலக் கரும்பின் வெளிய பூக்கள் அசையும் நாடென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது நின்னுடைய நாடே; அத்தகைய நாடு கெழு செல்வத்தையுடைய பீடுகெழு வேந்தே, நினக்குரியன சில சொல்வேன்; என் வார்த்தைகளைக் கேட்பாயாக; அறக்கடவுளே ஆட்சி புரிவது போல் செங்கோலால் ஆராயும் ஆராய்ச்சியையும், முறை கேட்க வேண்டுங் காலத்து எளிய செவ்வியையும் உடையோர் மழை வேண்டுங் காலத்து அதனைப் பெற்றோராவர்; வானை முட்டிய நினது பரந்த வெண்கொற்றக் குடையானது வெயிலை மறைத்தற்குக் கொண்டதோ எனின், அன்று; அது, வருத்தமுற்ற குடியை நிழல் செய்தல் காரணத்தாற் கொள்ளப்பட்டது; போர்க்களத்திலே வருகின்ற மாற்றார் படையை எதிர் நின்று பொறுத்து அது சரிந்தும் மீளும் புறக்கொடைகண்டு ஆரவாரித்து நின் படைவீரர் தரும் வெற்றியும் கலப்பை நிலத்தின்கண் உழுத சாலிடத்து விளைந்த நெல்லினது பயனே; மாரி பொய்ப்பினும் வாரி

குன்றினும் இயற்கையல்லன செயற்கையிற் றோன்றினும் இவ்வுலகம் காவலரைப் பழித்துரைக்கும்; அதனை அறிந்தாயாயின், நீயும் நொதுமலாளரது உறுதியில்லாத மொழியைக்கொள்ளாது உழுவார் குடியைப் பாதுகாத்து அதனால் ஏனைக்குடிகளையும் புரப்பாயாயின் நின் பகைவர் நின் அடியைப் போற்றுவாராவர்' என்னும் பொருள்கள் அதிற் கூறப்பட்டுள்ளன. இப்பாட்டினைக்கேட்ட கிள்ளிவளவன் அப்புலவரால் இறுக்கப்படாதிருந்த அவருடைய நிலவரி முழுதையும் விடுவித்துவிட்டான்.

ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர்,

> " நீ, உடன்று நோக்கும் வாயெரி தவழ
> நீ, நயந்து நோக்கும் வாய்பொன் பூப்ப
> செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
> வெண்டிங்களுள் வெயில் வேண்டினும்
> வேண்டியது விளைக்கும் ஆற்றலை "

என்று பாடுவாராயினர்.

மாறோகத்து நப்பசலையார் என்னும் புலவர், 'நீ, தன்னையடைந்த புறவின் பொருட்டுத் துலைபுக்க செம்பியன் மரபினுள்ளாயாதலால் இரந்தோர்க்கீதல் நினக்கு இயல்பாவதன்றிப் புகழ் அன்று; வானத்திலே தூங்கெயிலையழித்த நின் முன்னோரை நினைப்பின் ஈண்டுள்ள பகைவரைக் கொல்லுதலும் நினக்குப் புகழ் அன்று; சோழரது உறந்தை அவையத்து அறம் நின்று நிலைபெற்றதாதலால் முறைமை செய்தலும் நினக்குப் புகழ் அன்று' என்று கூறினர்.

மணிமேகலையிலுள்ள ஓர் வரலாறு முறை செய்தலில் இவனுக்கிருந்த உயர்ந்த கருத்தைப் புலப்படுத்துகிறது. இவன் மைந்தனாகிய உதயகுமரன் பௌத்த சமயத்தைச் சார்ந்து துறவு பூண்டிருந்த மணிமேகலை என்னும் தவ

மகளைக் காதலித்து அவளைக் கைப்பற்றுவான் இரவு சென்றபொழுது ஓர் விஞ்சையனால் வெட்டுண்டிறந்தனன். இச்செய்தி அந்நகரத்திருந்த முனிவர்களால் இவனுக்கு அறிவிக்கப்பட்டது. இதனைக் கேட்டதும், இவ்வளவன், தன் அமைச்சனும் படைத்தலைவனுமாகிய சோழிய வேனாதியை நோக்கி, 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனில் இன்றாகும்; தன் மகனைப் புவியிலே கிடத்தி அவன்மீது தேர்க்காலைச் செலுத்தி முறை செய்த அரசர் பிரான் வழியில் ஒரு தீவினையாளன் பிறந்தானென்பதை மற்றை அரசர்கள் கேட்குமுன்னம் அவனைப் புறங்காடடைவிக்க' என்று கூறினன். தன் மகன் இறந்ததற்குச் சிறிதும் துயருறாது இவன் கூறிய இம்மொழிகள் முறையினை முட்டாமற் செலுத்தும் பண்பு இம் மரபினர்க்கு இயல்பாதலைக் காட்டுகின்றன. எனினும், குற்றமற்றவளாகிய மணிமேகலையை இவன் சிறைப்படுத்தியதும், இவனது தேவி வஞ்சத்தால் அவளைத் துன்புறுத்தத் தொடங்கியதும் இவர்கட்கு இழுக்கே. கதாநாயகியான மணிமேகலை இராசமாதேவிக்குப் பௌத்த சமய உண்மைகளை அறிவுறுத்தனளாகக் கூறக்கருதிய சாத்தனார் அதற்கொரு வாயிலாகக் கதையை இங்ஙனம் அமைத்துக் கொண்டனர் எனலுமாம்.

புறப்பாட்டிற் காணலாவதொரு செய்தி இம் மன்னற்குப் பெரிய மறுவினையுண்டாக்குவதென்பதில் ஐயமில்லை. அச்செய்தியாவது, வரையாத வள்ளன்மையால் உலகமுள்ளளவும் அழியாத புகழினைப் படைத்த கடையெழு வள்ளல்களில் ஒருவனும், திருக்கோவலூரை அரசிருக்கையாக வுடையவனுமாகிய மலையமான் திருமுடிக்காரியின் மிக்க இளமையுடைய மக்களைப் பற்றிக் கொணர்ந்து யானைக்காலில் இடறுவிக்கத் துணிந்தமையே யாகும்.

இவன் அங்ஙனம் செற்றங் கொண்டமைக்குக் காரணம் இதுவாகுமென்று கருதப்படுகிறது; கிள்ளிவளவன் புகாரிலிருந்து அரசாண்டபொழுது நெடுங்கிள்ளி என்னும் சோழமன்னன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனன், கிள்ளிவளவனுக்கும் நெடுங்கிள்ளிக்கும் பகைமை மூண்டது. கிள்ளிவளவன் தம்பியும் இளவரசனுமாகிய நலங்கிள்ளி நெடுங்கிள்ளியுடன் பல இடங்களிற் பொருது, முடிவில், காரியாறு என்னுமிடத்தில் நடந்த போரிலே அவனைக் கொன்றனன். அப்பொழுது நெடுங்கிள்ளிக்குத் துணையாக அங்கு வந்தெதிர்த்த சேர பாண்டிய மன்னர்களும் நலங்கிள்ளியால் முறியடிக்கப் பட்டனர். காரியாற்றில் இவைநிகழ்ந்தமை, நெடுங்கிள்ளியானவன் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி என வழங்கப்படுதலானும்,

"வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி

... ... ...

தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத் தலைவந்தோர்
சிலைக்கயல் நெடுங்கொடி செருவேற் றடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் றன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி"

எனக் கிள்ளிவளவன் மணிமேகலையிற் கூறப்படுதலானும் புலனாகின்றது. இங்ஙனம் நெடுங்கிள்ளியை வென்றபின்பு உறையூரும் கிள்ளிவளவற்கும் நலங்கிள்ளிக்கும் உரியதாயிற்று. அதனாற்றான்,

"பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே"

எனக் கிள்ளிவளவனும்,

"உறந்தை யோனே குரிசில்"

என நலங்கிள்ளியும் புறப்பாட்டுக்களிற் கூறப்படுகின்றனர்.

இது நிற்க.—திருமுடிக்காரியானவன் பெருவள்ளலாக விளங்கியதன்றி, ஒப்பற்ற வீரனாகவும் திகழ்ந்தான். அதனாலே, மூவேந்தர்கள் தமக்குள்ளே போர் நேர்ந்த காலையில் காரிக்குப் பெரும்பொருள் கொடுத்து அவனைத் தமக்குப் படைத்துணையாகும்படி தனித்தனி வேண்டுவர். காரியும் தளர்ந்தவர் பக்கல் துணையாகச் சென்று பொருது, தான்பெற்ற பொருளனைத்தையும் பரிசிலர்க்கு வழங்கி விடுவான். இதனை,

"வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் றுப்பா கியரென
வேத்தினர் தரூஉங் கூழே நும்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவல ரதுவே"

(புறம், 122)

என்பதனால் அறியலாகும். இச்செயல் காரிக்கே யன்றி அவன் குடியிற் பிறந்தார் பிறர்க்கும் இயல்பாயிருந்தது. காரியானவன் நெடுங்கிள்ளிக்குத் துணைபுரிந்தமையாலோ, அவன் மக்களுளொருவன் நெடுங்கிள்ளியின் மகனுக்கு அரசுநிலையிட முனைந்தமையாலோ கிள்ளிவளவனுக்கு மலையமான் மக்களிடத்துத் தகுதியில்லாத சீற்றமுண்டாயது. இக்கொடுஞ் செயல் நிகழ்வுழி அங்குவந்திருந்த கோவூர்கிழார் என்னும் புலவர் கண்டு பதைபதைத்து இரங்கி, அரசனை நோக்கி 'நீதான், ஓர் புறவின் அல்லலன்றியும் பிறவுயிர்களுக்குற்ற துன்பத்தையும் தீர்த்தற்கு உயிர்க்கொடை பூண்ட சோழன் மரபினுள்ளாய்; இவர் தாம், அறிவால் உழுதுண்ணும் கற்றோரது வறுமைத் துன்பத்திற்கு அஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் தண்ணிய அருளையுடையாரது மரபினுள்ளார்; இவர், இப்பொழுது களிற்றைக்கண்ட வியப்பால், முன்பு வெருவியழுத அழுகையை மறந்திருக்கின்ற சிறு பிள்ளை

கள்; இம்மன்றினை வெருண்டு நோக்கி முன்பு அறியாத புதியதோர் வருத்தத்தையும் உடையர்; இதனைக் கேட்டனையாயின் நீ விரும்பியதைச் செய்க' என்னும் பொருளமைந்த ஓர் பாட்டினைக் கூறினர். இதனைக் கேட்டகிள்ளிவளவன் தன் குற்றத்திற்கு நாணி, அப்பிள்ளைகளைக் கொல்லாது விடுத்தனன். வளவன் முதலிற் செய்யத் துணிந்த காரியம்பற்றி அவனை எத்துணையும் எள்ளுதல் பொருந்துமேனும், பின்பு சான்றோர் சொற்கேட்டு அதனைச் செய்யாதொழிந்தமை கருதி அவனைப் பாராட்டவே வேண்டும்.

இனி, கிள்ளிவளவன் தான் கருவூரை முற்றுகையிட்டுச் சேரனை வென்றதும், தன் தம்பியால் நெடுங்கிள்ளியையும், சேர பாண்டியர்களையும் வென்றதுமன்றி, தான் மதுரையிற் சென்று பழையன் மாறன் என்பானை வென்றனென்று ஓர் அகப்பாட்டினால் தெரிகிறது. இவன் கூடல் மறுகிலே பழையன் மாறனை வென்றபொழுது கோதை மார்பன் என்பான் பேருவகையுற்றனன் என்றும் அப்பாட்டுக் கூறுகிறது.

இனி, இவனுக்குச் சிறுகுடி கிழான் பண்ணன் என்பான் சிறந்த நட்பாளனாயிருந்தான். பண்ணன் மீது இவ்வரசர் பெருந்தகை பாடிய செய்யுளொன்று புறநானூற்றில் உள்ளது. அச் செய்யுளிலிருந்து பண்ணனுடைய ஈகைத் தன்மையும், அவன்பால் வளவன் பூண்ட நட்பின் பான்மையும், வளவனது கவிபாடுந்திறலும் நனகு விளங்கும். அச்செய்யுள்,

“யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிர்ந் தன்ன
ஊணொலி யரவந் தானுங் கேட்கும்

பொய்யா வெழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீற்றுவீற் றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டும்
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே"

என்பது. பண்ணனிடத்திற் பரிசில் பெற்று மீண்டு வருகின்ற பாணனொருவன் அவன்பாற் பரிசில் பெறுதற்குச் சுற்றத்துடன் வந்துகொண்டிருக்கிற பாணனை வழியிற்கண்டு, அவன் வினவியதனைக் கேட்டு, தன் பக்கப்பாணரை நோக்கிக் கூறியதாகப் பண்ணனது ஒப்பற்ற ஈகை புலப்படப் பாடப் பெற்றது இப்பாட்டு. இதன் பொருள்: 'பழுத்த மரத்தின் கண்ணே புள்ளினம் ஒலித்தாற்போன்ற ஊணொலியுண்டாகிய ஆரவாரந்தானுங் கேட்கும்; மழை பெய்யுங் காலத்தை நோக்கித் தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தை யடையும் சிற்றெறும்பின் ஒழுக்குப்போலச் சோற்றுத்திரளைக் கையிலுடையராய் வெவ்வேறு வரிசையாகச் செல்கின்ற பெரிய சுற்றத்தோடுங்கூடிய பிள்ளைகளையும் காண்கின்றேம்; அங்ஙனம் கேட்டும் கண்டும், எம் பசி வருத்தத்தால், பசி நோய் தீர்க்கும் மருத்துவனது மனை அணிமையிலுள்ளதோ சேய்மையிலுள்ளதோ கூறுங்கள் எனப் பின்னும் பின்னும் விரைந்து வினவுகின்றேம்; என்று இப்பாணன் கூறுகின்றான்; பாணரே, இப்பரிசிலனது சுற்றத்தின் வறுமையைக் காண்பீராக; இங்ஙனம் என் வறுமையும் தீர்த்து இவன் வறுமையும் தீர்க்கவிருக்கின்ற பண்ணன் யான் உயிர் வாழு நாளையும் பெற்று

வாழ்வாளுக' என்பது. இதிலுள்ள உவமை நயம் முதலிய அழகுகள் கற்றோர் நெஞ்சைப் பிணிக்குந் தன்மையன.

இனி, காவிரிப்பூம் பட்டினம் இவன் காலத்திலேயே கடலாற் கொள்ளப்பட்டதென்றும், இவன் வேறிடத்தை யடைந்தா னென்றும் மணிமேகலை கூறுகிறது. இவன் அடைந்த வேறிடம் உறையூரோ காஞ்சிநகரோ தெரியவில்லை. புகார் கடல்கோட்பட்டபின் மாதவி மகளாகிய மணிமேகலை காஞ்சிப்பதியை அடைந்தபொழுது அந்நகரத்தில் தொடுகழற்கிள்ளி யென்னும் சோழனொருவனும் அவனுக்குத் தம்பியாகத் துணையிளங்கிள்ளி யென்பானும் இருந்தாராக அக்காப்பியம் கூறுகிறது. அன்னார் கிள்ளிவளவனும் அவன் றம்பியுமாயின் அவர்கள் காஞ்சியை அடைந்தாராவர்.

இவ்வேந்தன் முடிவில், சேர நாட்டிலுள்ளதாகிய குளமுற்றம் என்னும் இடத்தில் நடந்த போரில் உயிர்துறந்தாறவன். அதனால், இவன் பெயர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் எனப் பின்பு வழங்குவதாயிற்று. இவனைப் பாடிய புலவர்கள், புறத்தில், ஆலத்தூர்கிழார், வெள்ளைக்குடி நாகனார், மாறோகத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், கோவூர்கிழார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்போரும், அகத்தில், நக்கீரரும் ஆவர். இவருள் நப்பசலையார் பெண்பாலராயிருத்தல் வேண்டும். இவர்களில், இவ்வரசன் துஞ்சியபின்னரும் இருந்து பிரிவாற்றுது வருந்திப் பாடியவர்கள் மாறோகத்து நப்பசலையாரும், ஆடுதுறை மாசாத்தனாரும், ஐயூர் முடவனாரும் ஆவர். இன்னோர் இரங்கிக் கூறியவை நெஞ்சை உருக்குந் தன்மையன. நப்பசலையார், 'பொன்னணியன்ற மாலையினையும், நெருங்கிய போரின்கண் எதிர் நின்று வெல்

லும் படையினையும், திண்ணிய தேரினையுமுடைய வளவனைக் கொண்ட கூற்று, தன் மனத்துளே கறுவுகொண்டதாயினும், எய்தி நின்று கையோடு மெய் தீண்டி வருத்திற்றாயினும் அதற்குப் பிழைத்தல் இல்லை; அது, பாடுவார் போலத் தோன்றி நின்று கைபாற்றொழுது வாழ்த்தி இரந்து உயிர்கொண்டதாகல் வேண்டும்' என்றும்; மாசாத்தனார், 'ஈரமில்லாத கூற்றமே, நீ மிகவும் அறிவிலியாகின்றாய்; வாட் போரில் வல்ல வீரரும் யானையும் குதிரையும் போர்க்களத்தில் மாய எதிர்நின்று கொன்று நாடோறும் நினது பசியைத் தீர்த்தற்கு ஊட்டிய வசையற்ற வலியையுடைய வளவனை நீ கொண்டாயாயின், இனி நின் பசியைப் போக்குவோர் யார் சொல்வாயாக; விரகு இல்லாமையால் மேல் விளைந்து பயன்படும் விதையைக் குத்தியுண்டாய்; நினக்கு யான் கூறிய இவ்வார்த்தை பிறழாத மெய்யாதலை இன்னமும் காண்பை' என்றும்; கையறு நிலையாகக் கூறினர்.

மூடவனாரோ, சுற்றத்தார் இரங்கிக் கூறும் ஆனந்தப் பையுள் என்னும் துறையில் வைத்து, 'கலம் வனையும் வேட்கோவே, கலம் வனையும் வேட்கோவே, இருள் ஓரிடத்தே செறிந்து நின்றாற்போலத் திரண்ட புகை வானின்கட் சென்று பொருந்தும் சூளையையுடைய மூதூரிற் கலம் வனையும் வேட்கோவே, நிலமுழுதும் பரப்பிய பெரிய தானையினையும், புலவர் புகழ்ந்த பொய்யாத நல்ல புகழினையும் உடைய செம்பியர் மருகனாகிய வளவன் தேவருலகத்தை அடைந்தானாகலான், அத்தன்மையுடையோனைக் கவிக்கும் இடமகன்ற தாழியை† நீ வனைய விரும்பினையாயின் பெரிய நிலவட்டம் திகிரியாக மேருமலை

† பழைய காலத்தில் இறந்தவர் உடலைத் தாழியாற் கவித்து அடக்கஞ்செய்தல் வழக்கம்; இது முதுமக்கட்டாழி எனப்படும்.

மண்ணாக நினக்கு வளைய இயலுமோ; இயலாமையின் எத்தன்மையை யாகுவை; நீ இரங்கத்தக்காய்' என்று கூறினர். இங்ஙனம், கிள்ளிவளவன் துஞ்சியபின் பாடிய இச்செய்யுட்களிலிருந்து, நல்லிசைப் புலவர்கட்கு அவன் மேல் எத்துணை அன்பிருந்ததென்பது நன்கு புலனாகின்றது.

## XI

**நலங்கிள்ளி**

இவன் கிள்ளிவளவனுக்குத் தம்பி யென்பது 'சிலைக் கயல் நெடுங்கொடி ஆர்புனைதெரியல் இளங்கோன் றன்னால் காரியாற்றுக்கொண்ட மாவண் கிள்ளி' எனக் கிள்ளிவளவன் மணிமேகலையிற் கூறப்படுவதால் அறியலாவது. இவன் தம்பி மாவளத்தான் என்பது 43-ம் புறப்பாட்டின் கீழுள்ள பாடினோர் பாடப்பட்டோரைக் குறிக்கும் தொடரில், 'சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும்' என்றிருப்பதாற் பெறப்படுகின்றது. இவன் (நலங்கிள்ளி) சேட் சென்னி, புட்பகை, தேர்வண்கிள்ளி என்னும் பெயர்களானும் கூறப்படுவன். இவன் ஆவூரிலும் உறையூரிலும் முற்றுகையிட்டு நெடுங்கிள்ளியை வென்றதனோடு, அவனைக் காரியாறு என்னுமிடத்திற் பொருது கொன்றான். அவ்விடத்திற்றானே சேர பாண்டியர்களையும் வென்று அவர்கள் கொடியைக் கைப்பற்றினான். இவன் பாண்டி நாட்டிலுள்ள ஏழு அரண்களை வென்று கைப்பற்றி, அவற்றின்கண் தனது புலிக்கொடியை நாட்டினான் என்று 33-ம் புறப்பாட்டினால் தெரிகிறது. இவன் அளவிடற்கரிய தனது தானையுடன் வலமாகப் புறப்பட்டு முன் பாண்டியனையும், பின் சேரனையும் வென்று அவ்வளவில் அமையானாய் வடநாட்டரசர்களையும் வென்று வலியழித்து மீள்வன் எனப் புலவர்கள்
ரப் பாராட்டியுள்ளார்கள்.

"தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்
கடையோர், விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்கு நுகர
நிலமலர் வையத்து வலமுறை வளைஇ
வேந்துபீ டழித்த ஏந்துவேற் றானையொடு"

என ஆலத்தூர்கிழார் இவனது படைப்பெருமையையும், வெற்றித் திறத்தையும் அழகாகப் புனைந்துரைத்தனர். 'முன் செல்லும் தூசிப்படையோர் பனையின் நுங்கினை உண்ண, இடையே செல்வோர் அதன் பழத்தினை நுகர, பின் செல்வோர் பனையின் சுட்ட கிழங்கினை உண்ண இங்ஙனம் உலகத்து வலமுறையாகச் சூழ்ந்து மாற்றரசரை வலிகெடுத்த சேனையோடு' என்பது இதன் பொருள். இக்கருத்தே கோவூர்கிழாரால் வேறு வகையாகக் கூறப் பெற்றுளது. அவர், 'கீழ்கடல் பின்னதாக மேல்கடலின் வெள்ளிய அலை நின் குதிரையின் குளம்பை யலைப்ப வலமாக முறையே வருதலுமுண்டாமென்று வடநாட்டுள்ள அரசுகள் கலங்கி நெஞ்சிலே அவலம் மிகத் துயிலாத கண்களையுடையவாயின' என்றனர்.

இங்ஙனம் ஒப்பற்ற வீரனாகிய இம்மன்னன் புலவர்களை நன்கு மதித்து, அவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு அவ்வாறொழுகி வந்தனன் என்று தெரிகிறது. இவன் உறையூரை முற்றுகை யிட்டிருந்தபொழுது, கோவூர் கிழார் என்னுஞ் சான்றோர் ஓர் பாட்டியற்றிக் கூறி, இவனையும் இவன் பகைவனாகிய நெடுங்கிள்ளியையும் சந்து செய்வித்தார். அவ்வரிய செய்யுள்,

"இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே

ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனால்
குடிப்பொரு ளன்று நுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே"

என்பது. 'பெரிய பனையின் தோட்டினைச் சூடினோனல்லன்; கரிய கொம்பினையுடைய வேம்பினது மாலையை உடையோ னல்லன்; நினது கண்ணியும் ஆத்தியாற் கட்டப்பட்டது; நின்னுடன் போர் செய்வானது கண்ணியும் ஆத்தியாற் கட்டப்பட்டது; ஆதலால், நும்முள் ஒருவீர் தோற்பினும் தோற்பது நும் குடியன்றோ? இருவீரும் வெல்லுதல் இயல்பு மன்று; ஆதலால், நுமது செய்கை நும் குடிக்குத் தக்கதன்று; இம்மாறுபாடு நும்மைப்போலும் தேர்வேந்தர்க்கு உடம்பு பூரிக்கும் உவகையைச் செய்யும்; இது தவிர்தலே நுமக்குத் தக்கது.' என்பது அதன் பொரு ளாகும்.

இவ்வரசனை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய முதுமொழிக்காஞ்சி என்னும் துறையமைந்த செய்யுட்கள் படித்தறிந் தின்புறற்பாலன. 'நூறு இதழ்களையுடைய தாமரை மலரின் நிரைபோல் ஏற்றத்தாழ்வில்லாத சிறந்த குடியிற்பிறந்து வீற்றிருந்தோர்களை எண்ணுமிடத்துப் புகழும் பாட்டும் உடையோர் சிலர்; தாமரையின் இலையை யொப்பப் பயன்படாது மாய்ந்தோர் பலர்; புலவராற் பாடப்படும் புகழுடையோர் தாம் செய்யும் நல்வினையை முடித்து, விசும்பிலே பாகனாற் செலுத்தப்படாத விமா னத்தைப் பொருந்துவர் என்று அறிவுடையோர் கூறுவர்; எந்தையே, நலங்கிள்ளி, தேய்தலுண்மையும் பெருக லுண்மையும் மாய்தலுண்மையும் பிறத்தலுண்மையும் கல்வி முகத்தால் அறியாதவரும் அறியும்படி காட்டித் திங்க

ளாகிய தெய்வம் இயங்குகின்ற உலகத்தில் ஒன்றில் வல்ல ராயினும் அல்லராயினும் வறுமையால் வருந்திவந்தோர்க்கு அருள் புரிவாயாக' என்றும்; 'தீயோரை ஒறுத்தலும் நல்லோர்க்கு அருள்பண்ணுதலுமாகிய முறைமையின் மடிந்திராது, நல்லதன் நலனும் தீயதன் றீமையும் இல்லையென்போர்க்கு இனமாகா தொழிக; விழவின்கண் ஆடும் கூத்தரது வேறுபட்ட கோலம்போல முறைமுறையே தோன்றி இயங்கி இறந்து போகின்ற இவ்வுலகத்தில் நின்சுற்றம் மகிழ்ச்சியிடத்ததாக; நீ பாதுகாத்த பொருள் புகழிடத்ததாக' என்றும்; பிறவாறும் அவற்றிற் கூறப்பட்டுள்ளன. முன்பு போர் செய்து வெற்றி கொள்ளுதலையே பொருளாகக் கொண்டிருந்த இம்மன்னன் முதுகண்ணன் சாத்தனால் அறிவுறுத்தப் பெற்று அறஞ் செய்தலை மேற்கொண்டானவன்.

இனி, இவ்வேந்தன் கவிதை யியற்றும் வளமுடைய சிறந்த புலவனாகவும் விளங்கினனென்ன இவன் பாடிய இரண்டு அழகிய செய்யுட்கள் புறநானூற்றில் உள்ளமையால் அறியப்படுகிறது. அவ்விரண்டு செய்யுட்களில் ஒன்று மாற்றரை நோக்கி வஞ்சினங் கூறுவதாகவுள்ளது. அதிலே, 'மெல்ல வந்து என் நல்லடி பொருந்தி ஈயவேண்டுமென்று இரப்பாராயின் அவர்க்கு என் அரசாட்சி கொடுத்தலோ எளிது; இனிய உயிரேயாயினும் கொடுப்பேன்; ஆற்றலுடையோரது வலியைப்போற்றாது என் உள்ளத்தை யிகழ்ந்த அறிவில்லாதோன் துயில்கின்ற புலியை யிடறிய குருடன் போல உய்ந்து போதலோ அரிது; மூங்கிலைத் தின்னும் யானையின் காலில் அகப்பட்ட நீண்ட மூங்கின் முளையை யொப்ப அவ்விடத்து வருந்தும்படி மேற்சென்று பொருதிலேனாயின், குற்றமற்ற நெஞ்சத்தாற் காதல்கொள்ளாத பொது மகளிரது பொருந்தாத முயக்கத்தால் என்

மாலை துவள்வதாக' என்றுகூறியிருப்பது கிள்ளியின் பெருமித வுணர்ச்சியையும், உளத்தூய்மையையும் நன்கு புலப்படுத்துகின்றன. மற்றொரு செய்யுள் 'தம் குடியின் முதியோர்களைக் கூற்றம் கொண்டுபோக, ஊழினாலே தம்பால் வந்த, முன்னோரின் வெற்றியாலுண்டாகிய அரசுரிமையைப் பெற்றேமாயின் இத்தலைமையைப் பெற்றேமெனக் கொண்டு தம் குடிமக்களை இறைவேண்டியிரக்கும் ஆண்மையில்லாத உள்ளஞ்சிறியோன் பெறின், அவ்வரசுரிமை அவனுக்குத் தாங்க வொண்ணுதாம்படி மிகவும் கனத்தது; மனவெழுச்சியும் முயற்சியுமுடைய சீரியோன் பெறுவனாயின், வெண்குடையும் முரசுமுடைய அரசாட்சியைப் பொருந்திய செல்வம் தாழ்ந்த நீரையுடைய வற்றிய குளத்திடத்துச் சிறிய நெட்டியின் உலர்ந்த சுள்ளிபோலப் பெரிதும் நொய்தாகும்' என்னும் பொருளுடையது. இதிலிருந்து அவனுடைய உள்ளமிகுதியும், குடிகளைப்புரக்குங் கொள்கையும் நன்கு வெளிப்படுகின்றன.

இவ்வரசனைப் பாடிய புலவர்கள் உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார் என்போர். இவருள், இவன் துஞ்சியபின் இருந்து இரங்கிப்பாடியவர் ஆலத்தூர் கிழார். கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் என்னும் புலவராற் பாடப்பட்ட இலவந்திப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளிசேட்சென்னி யென்பான் இம்மன்னனேயாயின் இவன் இலவந்திப்பள்ளி என்னுமிடத்தில் உயிர்துறந்தானவன். மதுரைக் குமரனாரும் இவனைப் பாடினாராவர்.

## XII

இவ்வரசன் உறையூரிலிருந்தவன். இவன் மகன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி என்பான்.

**தித்தன்.** "இழையணி பணைத்தோள் ஐயை தந்தை
மழைவளந் தரூஉ மாவண் டித்தன்"

என அகத்திலே பரணரால் இவன் பாராட்டப்படுவதி லிருந்து இம்மன்னன் பெருங் கொடையாளி என்பதும், கற்பிற் சிறந்த ஐயை என்பாள் இவனுக்குப் புதல்வி என் பதும் வெளியாகின்றன.

"தித்தன் பிண்ட நெல்லின் உறந்தை"
"நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன"

என அகநானூற்றிலும்,

"பலநல்ல புலனணியும்
சீர்சான்ற விழுச்சிறப்பிற்
சிறுகண் யானைப் பெறலருந்தித்தன்
உறந்தை"

எனப் புறநானூற்றிலும் முறையே பரணரும் நக்கீரரும் உறந்தையை இவனுக்குரிமைப்படுத்துரைப்பது முதலிய வற்றால் இவன் உறையூரைச் சிறந்த மதிலரணும் காட்டர ணும் உடையதாகச் செய்து பகைவென்று குடிகளை நன்கு புறந்தந்து புகழ்சிறந்து விளங்கினன் எனப் புலனாகின்றது. வடுக அரசனாகிய கட்டி என்பவன் ஒருகால் இத் தித்தனு டன் போர்செய்யக் கருதி வடநாட்டில் அரசுபுரிந்த பாணன் என்னும் வீரனுடன் சேர்ந்து உறையூரையடைந்து ஓர் புறத்தில் இருக்கையில் அவனது நாளவைக்கண் ஒலிக் கப்பெறும் கிணையோசை கேட்டு அச்சமுற்றுப் பொராது ஓடினன். இது,

"வலிமிகு முன்பிற் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் றெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய வார்ப்பினும் பெரிதே"

என் அகப்பாட்டிற் கூறப்படுகின்றது. இத்தகு சிறப்பு வாய்ந்த இவ்வேந்தன் தன் மைந்தனாகிய போர்வைக்கோப் பெருநற்கிள்ளியுடன் எக்காரணத்தாலோபகைமை கொண் டிருந்தான். அவன் தன்போலும் தாளாண்மையும் வீரமும் இலனாய் மடிந்திருந்தமையால் வெறுப்புற்று அவனைத் தனது நாட்டினின்றும் ஓட்டிவிட்டனன் போலும்? எனி னும், தந்தையால் நாடிழந்தோடி வறுமையாற் புல்லரிசிக் கூழ் உண்டிருந்த பெருநற்கிள்ளி பின்பு மிக்க வலிமையும் போர்த்திறலும் வாய்ந்தவனாயினான்; முக்காவனாட்டு ஆமூர் மல்லன் என்பானொடு மற்போர் பொருது அவனைக் கொன்று புகழ்பெற்றான். இச்செய்திகள் சாத்தந்தையாரும் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையாரும் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியின்மீது அருமையாகப் பாடியுள்ள புறப்பாட்டுக்களால் வெளிப்படுகின்றன.

இனி, தித்தன் என்னும் இச்செம்பியர் குரிசில் சிறந்த புலவனாகவும் திகழ்ந்தனன் என்பது இவன் பாடிய பாட் டொன்று அகநானூற்றில் இருப்பதனால் அறியப்படும். இவன் தித்தன்வெளியன் எனவும் வீரைவெளியன் தித்தன் எனவும் கூறப்படுவன். இவனது காலம் காரியாற் றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியின் காலத்திற்கு முற்பட்டதாகு மென்று கருதப்படுகிறது. இவனைப் புகழ்ந்து பாடினோர் பரணரும், நக்கீரரு மாவர்.

## XIII

இவ்வரசன் உறையூரில் இருந்தவன்; செங்குட்டுவன் என்னும் சேரர் பெருமானுக்கு அம்மான் மகன். இவன், சோழன் கிள்ளிவளவனுக்கும் நலங்கிள்ளிக்கும் பகைவ னாயிருந்த நெடுங்கிள்ளியின் மைந்தன் பெருங்கிள்ளி. என்றும், இவனே இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனப் பின்பு வழங்கப்

பெற்றானவன் என்றும் கருதுவர் திருவாளர் மு. இராகவையங்கார் அவர்கள்.* 125, 174-ம் புறப்பாட்டுகளை நெடுங்கிள்ளியின் வரலாற்றோடு இயைய வைத்து நோக்குமிடத்து அங்ஙனம் கருதுவது பொருத்தமாகவே தோன்றுகிறது. இவன் பெயர் பெருநற்கிள்ளி யெனவும் வழங்கும். இவன் ஆண்டில் இளையனாய்ப் பட்டமெய்திய பொழுது சோணாட்டிலிருந்த இவனுடைய ஞாதியரசர் பலர் கூடி இவனுக்கு மாறாகக் கலகம் விளைப்பாராயினர். அதனால், இவன், தனக்குத் துணைவனாகவிருந்த மலையமானது முள்ளூர்மலையில் ஓடி ஒளிக்கும்படி நேர்ந்தது. அப்பொழுது மலையமான் திருமுடிக்காரியின் மகனும், சோழற்குப் படைத்தலைவனாகவிருந்து சிறப்புப் பெற்றவனுமாகிய சோழியவேனாதி திருக்கண்ணன் என்பான் இவனைப் பாதுகாத்து இவன் குடை நிலைபெறும்படி செய்தான். இச்செய்தி, திருக்கண்ணனை மாறோகத்து நப்பசலையார் பாடிய புறப்பாட்டால் இனிது விளங்குகிறது அதில்,

"அரசிழந் திருந்த வல்லற் காலை
முரசெழுந் திரங்கு முற்றமொடு கரைபொரு
திரங்குபுன லொரிதரு மிகுபெருங் காவிரி
மல்லல் நன்னாட் டல்லல் தீர

... ... ...

எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி யிருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி அக்குடை
புதுமையின் நிறுத்த புகழ்மேம் படுந"

என்று திருக்கண்ணன் பாராட்டப்படுகின்றான்.

இங்ஙனம் இளையனாகிய பெருங்கிள்ளிக்கு நேர்ந்த இடுக்கணைக் கேள்வியுற்றான் வீரருள் வீரனாகிய சேரன் செங்

---

* சேரன் செங்குட்டுவன் பக்கம் 102, 103.

குட்டுவன்; உடனே சோணாட்டின்மீது படையெடுத்துச் சென்று, தன் மைத்துனற்குப் பகைவராயிருந்த சோழர் ஒன்பதின்மரை ஒரு பகற்பொழுதில் உறையூரின் தெற்கு வாயிற் புறத்ததாகிய நேரிவாயில் என்னும் இடத்திற் பொருது வீழ்த்தி, அவனது ஆணை இனிது நடக்குமாறு செய்தனன். இச்செய்தி,

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கு மாண்பின ராதலின்
ஒன்பது குடையும் ஒருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்"

எனச் சிலப்பதிகார நீர்ப்படைக்காதையிலும்,

"ஆர்புனை தெரிய லொன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று"

என நடுகற்காதையிலும் செங்குட்டுவனை நோக்கி மாடலன் கூறுங் கூற்றாக இளங்கோவடிகள் உரைத்தலால் நன்கு புலனாகின்றது. பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்துப் பதிகத்திலும்,

"ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து"

என இது குறிக்கப்பெற்றுளது. இவன் உறையூரின் கண்ணே கண்ணகிக்குக் கோயில் எடுத்து விழாச் செய்தனன் என்பது "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தருமிவளோர் பத்தினிக் கடவுளாகுமெனெ நங்கைக்குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே" என்னும் சிலப்பதிகார உரைபெறு கட்டுரையாற் பெறப்

இனி, இவன் மலையனைத் துணையாகக்கொண்டு சேரமான் மாந்தரஞ்சேர லிரும்பொறையுடன் பொருதுவென்றான் என்பது "பருத்திப் பெண்டின் பனுவலன்ன" என்னும் புறப்பாட்டினாலும், சேரமான் மாவெண்கோவும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியும் இவனுக்கு நட்பாளர் என்பது ஔவையார் பாடிய "நாகத்தன்ன பாகார் மண்டிலம்" என்னும் புறப்பாட்டினாலும் பெறப்படுகின்றன. இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என இவனுக்கு வழங்கும் பெயரானே இவன் அவ்வேள்வி புரிந்தனன் என்பதும் பெற்றாம். இவனைப்பாடிய புலவர்கள் பாண்டரங்கண்ணனார், ஔவையார், உலோச்சனார் என்போர்.

## XIV

**நல்லுத்தரன்.**

இவனது வரலாறொன்றும் தெரிந்திலதேனும், இவன் பாடிய ஓர் அழகிய புறப்பாட்டிலிருந்து இவன் விரிந்த உள்ளமுடையாருடன் நட்புச் செய்தலில் மிக்க விருப்பமுடையன் என்பதும், செய்யுளியற்றுவதில் வல்லன் என்பதும் புலனாகின்றன. அச்செய்யுள்,

"விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி உடையதம்
வளன்வலி யுறுக்கும் உளமி லாளரொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ
கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவண் உண்ணா தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்பவேட் டெழுந்து
இருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்

புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
ஊரனுடை யாளர் கேண்மையோடு
இயைந்த வைகல் உளவா கியரோ”

என்பது. ‘விளைந்த செவ்வியை யுடைய சிறிய இடத்தை நோக்கி வளைந்த கதிராகிய உணவைக்கொண்டு போய் வளையில் வைக்கும் எலிபோலும் சிறுமுயற்சியின ராகித் தம் செல்வத்தை இறுகப்பிடிக்கும் உள்ள மிகுதி யில்லாருடன் பொருந்திய நட்பு எனக்கு இல்லையாகுக; தறுகண்மையுடைய பன்றியேறு இடப்பக்கத்தே வீழ்ந்த தாகலின் அதனை உண்ணுதல் புல்லிதென்று கருதி அன்று அதனை யுண்ணாதிருந்து அடுத்தநாள் மலைமுழையினின்றும் புறப்பட்டுச் சென்று பெரிய ஆண்யானையை வலப்பக்கத்தே வீழச்செய்து உண்ணும் புலி பசித்தாற் போலும் மெலிவில் லாத உள்ளமுடைய உரவோர் நட்புடன் பொருந்திய நாட்கள் உளவாகுக’ என்பது அதன் பொழிப்பு. கற்ற றிந்தா ரேத்தும் கலித்தொகையில் முல்லைக்கலி பாடினான் இவனென்றால் இவ்வரசனது புலமையின் பெருமையை யாரால் அளவிட்டுரைக்கலாகும்?

இனி, குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன், குராப் பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன், செருப்பாழி யெறி ந்த இளஞ்சேட் சென்னி, நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி, வேற்பஃற டக்கைப் பெருவிறற்கிள்ளி முதலிய சோழ மன்னர்கள் சங்க இலக்கியங்களிற் கூறப்பட்டிருக்கின்றனரேனும் அவர் களைப்பற்றி மிகுதியாக அறியலாவன இல்லை. சிறப்புடைய இரு சோழ வேந்தரின் வரலாறுகளே இனி இப்பகுதியில் வெளியிடற் குரியவாகும்.

# XV

**கோப்பெருஞ் சோழர்.**

இவர், பண்டொருகாலத்தில் ஒரு கோழியானது யானையொன்றைப் போரில்வென்ற இடமாதலின் 'கோழி' எனப் பெயர்பெற்றதும், தொன்றுதொட்டுச் சோழமன்னர்கள் வீற்றிருந்து அரசாளப்பெற்ற தலைநகரங்களுள்ளே மிக்க பழமைபொருந்தியதும், அறங்கள் நிலைபெற்ற அவைக்களத்தைத் தன்னகத்தே கொண்டிருந்ததும், 'ஊரெனப்படுவதுறையூர்' என ஆன்றோர் பலராலும் சிறப்பித் தோதப் பெறுவதும் ஆகிய உறந்தையம்பதியில் இருந்தவர்; கல்விக்கடலின் எல்லைகண்டவர்; தீஞ்சுவை கெழுமிய செந்தமிழ்ப்பாக்கள் பாடுவதிற் சிறப்புமிக்கவர்; அறத்தின் நுட்பங்களையெல்லாம் அறிந்து தாம் அவ்வாறொழுகுவதோடு, யாவரும் அறம்புரிந்து மேன்மையுறவேண்டு மென்னும் பெருவிருப்பினர்; புலவர் பெருமக்களிடத்துத் தாம் வைத்துள்ள அன்பாலும் மதிப்பாலும் அவர்களுடைய அன்பையெல்லாம் கொள்ளைகொண்டவர்; அவ்வாற்றால் தோலா நல்லிசை மேலோராகிய பிசிராந்தையார், பொத்தியார் என்னும் தண்டமிழ்ப்புலவர்கள் தமக்கு ஆருயிர் நண்பர்களாக அமையப்பெற்றவர்.

பிசிராந்தையார் என்பவர் பாண்டிநாட்டில் பிசிர் என்னும் ஊரிலிருந்த ஒரு புலவர். அவரது பெயரிலிருந்து அவரை ஆதன்என்பானுக்குத் தந்தையார் என்றாவது, ஒரு ஆதன் றந்தையின் வழியில் வந்து அப்பெயரிடப் பெற்றவர் என்றாவது கொள்ளுதல் தகும். ஆதன்றந்தை ஆந்தையென மருவுமாறு தொல்காப்பியத்திற் கூறப்பட்டுளது. பிசிராந்தையார் தமது வாழ்நாளி னிறுதிக்கூற்றில் தமக்கு நரையில்லாததன் காரணத்தை வினவிய சான்றோர்க்குத்

தாம் விடையிறுத்தலாகப் பாடியுள்ள பாட்டிலிருந்து அவரது களங்கமற்ற உயரிய வாழ்க்கை நிலை புலப்படும். அது,

“யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே”

என்பது. தம் மனைவி மக்கள் அறிவிலும் குணத்திலும் மாட்சியுடையராதலும், ஏவலாளர் தாம் கருதியதைக் கருதியவாறே செய்து முடித்தலும், தம் நாட்டரசன் முறை வழுவாது குடிகளைப் பாதுகாத்தலும், தம்மூரின்கண் சான்றோர் பலரிருத்தலும் தமக்கு ஆண்டுகள் பல சென்றும் நரையில்லாதிருத்தற்குக் காரணம் எனக் கூறிய அவரது உயரிய மனநிலை நமது புகழ்ச்சிக்கண் எங்ஙனம் அடங்குவதாகும்? இப்பெற்றியராய பாண்டி நாட்டுப் பிசிராந்தையார்க்கும் சோழநாட்டுக் கோப்பெருஞ்சோழர்க்கும் செப்புதற்கரிய நட்பொன்றுளதாகி வளர்ந்து வருவதாயிற்று. ஆனால் அவர்கள் ஒருபொழுதும் ஒருவரை யொருவர் நேரிற்கண்டவரல்லர். ஒருவர் ஒருவருடைய குணங்களைக் கேள்வியுற்ற மாத்திரை யானே அவர்கள் பால் அடங்கியிருந்த உழுவலன்பு வெளிப்பட்டு அவ்விருவரையும் ஒத்த வுணர்ச்சியுடைய நட்பினராக்கி விட்டது. அவர்கள் ஒருவரொருவரைப்பற்றிப் பேசாத நாளும், நினையாத நாழிகையும் இருந்திருத்தல் சாலாது. பிசிராந்தையார் ஒருநாள் மாலைப்பொழுதில் தமதாருயிர் நண்பனை நினைந்து காதல் கைமிக்கு அன்னச்சேவல் ஒன்றை

விளித்துப் பாடுகின்ற பாட்டு அந்நட்பினையும் பெட்பினை யும் திட்பமுறக்காட்டும். அது,

“அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடுகொள் வென்றி யடுபோ ரண்ணல்
நாடுதலை யளிக்கு மொண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையன் மாலையாம் கையறு பினையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின் இடையது
சோழநன் னாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க இரும்பிசி
ராந்தை யடியுறை யெனினே மாண்டநின்
இன்புறு பேடை யணியத்தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே”

என்பது. ‘அன்னச் சேவலே! அன்னச் சேவலே!! எம் அண்ணல் தன் நாட்டினைத் தலையளி செய்யும் முகம்போல மதியம் விளங்கும் மாலைப்பொழுதின்கண் யாம் செயலற்று வருந்தா நிற்கின்றேம்; நீ தான் குமரியாற்றின் பெருந் துறையில் அயிரையை மேய்ந்து வடதிசைக் கண்ணதா கிய இமயமலைக்குச் செல்குதியாயின், இரண்டிற்கும் இடையிலுள்ளதாகிய சோழநாட்டை அடைந்தவிடத்து, உறையூரின்கண் உயர்ந்து தோன்றும் மாடத்திடத்தே நின் பெடையொடு தங்கி, வாயில் காவலர்க்கு உணர்த்தி விடாதே தடையின்றிக் கோயிலிற் புகுந்து, எம் பெருங் கோவாகிய கிள்ளி கேட்க ‘யான் பிசிராந்தையின் அடி யுறை’ என்று சொல்வையாயின் நின் இன்புறும் பேடை அணியத் தன் விருப்பமுள்ள அணிகலத்தை நினக்குத் தருவன்’ என்பது இதன் பொழிப்பு.

இவ்வாருகிய உத்தமநட்பினுல் விளையும் இன்பத்தைப் பார்க்கிலும் இவ்வுலகத்துச் சிறந்த வின்பம் யாதுளது? தலையாயார் தம்முட்செய்த நட்புக் கரும்பை நுனியிலிருந்து தின்ருற் போலவும், பேரறிவாளர்களியற்றிய நூல்களின் நயம் அவற்றிற் பயிலுந்தோறும் வெளிப்பட்டு இன்பம் விளைத்தல் போலவும் மேன்மேல் வளர்ந்து இன்பம் பயப்பதாமெனக் கூறுவர் ஆன்ருேர். துறக்க வின்பமும் இதற்கு நிகராகாதெனில் இதன் பெருமையை வேறு கூறுதல் என்? கோப்பெருஞ்சோழரும் பிசிராந்தையாரும் காண்டலின்றியும் இங்ஙனமாக உண்டிய நட்பின் பயன் துய்த்து வருங்காலத்தில் நிகழ்வதொரு செய்தி நெஞ்சினையுருக்குந் தன்மையது.

இவ்வரசர் பெருந்தகைக்கு இரண்டு மக்கள் உளராயினர்.

"மகனறிவு தந்தை யறிவு"

என்றும்,

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்றும் ஆன்ருேர் கூறும் பொதுநீதிக்கு விலக்காக ஒரோவழித் தகவிலார்க்கு நன் மக்களும், தகவுடையார்க்குத் தீயமக்களும் உண்டாகின்றனர். கோப்பெருஞ்சோழரின் மக்களும் பாற்கடலிற்ருேன்றிய ஆலாலம்போலும் கொடிய பண்பினராயிருந்தனர். அன்பிற்கே நிலைக்களமாகிய தம் அருமைத் தந்தையுடன் போர்செய்யவும் எழுந்தனரென்ருல் அன்னவரின் தீயபண்பை என்னென்றெடுத்துரைப்பது? கொடியவர்களான மக்கள் போர்குறித்து வருதலைக் கோப்பெருஞ்சோழர் கண்டார்; சினங்கொண்டார்; தாமும் போர் செய்தற்கு அக்கொடியார்மேற் சென்ருர். அப்பொழுது அங்கிருந்து அந்நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த புல்லாற்றூர் எயிற்றியனுர் என்னும் புலவர்க்கு

ஓர் நல்லெண்ணம் உண்டாயிற்று. அஃது அவருக்கு இயற்கையுமாகும். அருஞ்சீர்த்திப் பெருஞ்சோழரைப் போர் செய்யாது தடுக்கவேண்டுமென்பதே அவரது எண்ணம். பெருங்கோவைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவாராயினர் :

'அமரின்கட் பகைவரை அடுதல்செய்த வென்றியையும், வலிய முயற்சியையும், நிலமுழுதும் நிழல்செய்யும் வெண்கொற்றக் குடையினையும் உடைய வேந்தே, நின்னுடன் போர்செய்தற்கு வந்த இருவரையும் பார்க்குமிடத்து அவர்கள் நின் பகைவேந்தர்கள் அல்லர் ; நீயும் அவர்க்குப் பகைவன் அல்லை ; தோன்றலே, நீ இவ்வுலகத்துப் பரந்தபுகழை யெய்தித் தேவருலகத்தை யடைந்தபொழுது நின்னால் ஒழிக்கப்பட்ட அரசாட்சியுரிமை அவர்க்குரியது ; அதனையும் நீயே அறிவை ; புகழை விரும்புவோனே, நின்னுடன் போர்செய்தற்கெழுந்த சூழ்ச்சியற்ற அறிவினையுடைய நின் புதல்வர் தோற்பின் நின் பெரிய செல்வத்தை அவருக்கன்றி யாவர்க்குக் கொடுப்பாய்? நீ அவருக்குத் தோற்பின் நின்னையிகழும் பகைவர் உவக்கும்படியாக இவ்வுலகத்தே பழியைநிறுத்துவாய் ; ஆதலால் நினது மறன் ஒழிவதாக ; விண்ணோர்கள் விருப்புடன் நின்னை விருந்தாக எதிர்கொள்ளுமாறு நல்வினை செய்தல்வேண்டும் ; அதற்கு விரைந்து எழுக ; நின் உள்ளம் வாழ்வதாக.'

இவ்வாறாக நல்லிசைப்புலவரால் தெருட்டப்பெற்றபின், பெருங்கோவின் உள்ளத்திற் பொங்கியெழுந்த சினம் 'இடிநீற்றுற் பையவிந்த நாகம்போல்' அடங்கிவிட்டது. எனினும் மானம் என்பது அரசர்க்கு உயிரினுஞ் சிறந்ததாதலின் அவர் பின் உயிர்வாழ ஒருப்பட்டிலர்.

"மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே"

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்பன ஆன்றோரின் முதுமொழிகளல்லவா? தம் மக்களால் தமது குலத்திற்கும், தமக்கும் பழியுண்டாதலை யுன்னி உயிர் துறக்கத் துணிந்தார் பெருஞ்சோழர். தற்கொலை செய்துகொள்வதில் பழியில்லாததொரு வழியை முற்காலத்தவர் கைக்கொண்டிருந்தனர். அதுதான் வடக்கிருத்தல் என்பது. வடக்கிருத்தல் என்றால் யாதானும் இன்றியமையாக்காரணம்பற்றி உயிர்துறக்கத் துணிந்தவர் ஆற்றிடைக்குறைபோலும் தூயதொரு தனியிடத்தையெய்தி, வடக்குநோக்கியிருந்து, உணவு முதலியன துறந்து, கடவுட் சிந்தையுடன் உயிர்விடுதலாம். பெருங்கோவும் அங்ஙனமே வடக்கிருத்தலை மேற்கொள்வாராயினர். வடக்கிருக்குங்கால் உலகத்தார்க்கு அறத்தின் மேன்மையைத் தாம் தெளிந்தவாறு அறிவுறுத்திச் செல்லவேண்டுமென்று அவர்க்கு விருப்பமுளதாயிற்று. தாம் உயிர் துறக்கும்பொழுதும் உலகத்தார்க்கு உதவிசெய்வதே உயர்ந்தோரின் நோக்கமென்பதற்கு இஃதொரு சான்றாம். தாம் அறிவுறுத்தக் கருதியதனை நாம் என்றும் போற்றுவதொரு செந்தமிழ்ச் செய்யுளாகப் பாடித்தந்தனர் நம் புவிக்கரசாகிய கவிக்கரசர். அது,

"செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனில்
தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்

தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே" (புறம்)

என்பது. இதன் பொருள்: 'அழுக்கு நிறைந்த தெளிவில்லாத உள்ளத்தினையுடையோர் அறத்தினைச் செய்வோமோ செய்யாதிருப்போமோ என்று கருதி ஐயம் நீங்காதவராகின்றனர்; யானை வேட்டைக்குச் செல்வோன் யானையையும் எளிதாகப் பெறுவன்; காடை வேட்டைக்குச் செல்வோன் அது பெறுமல் வெறுங்கையுடனும் திரும்புவன்; அதனுல், உயர்ந்த விருப்பத்தையுடைய உயர்ந்தோர்க்குத் தாம் செய்த நல்வினைப்பகுதியால் அதனை நுகர்தல் உண்டெனின், அவர் இருவினையும் செய்யாத உம்பருலகத்தின் கண் இன்பமனுபவித்தலும் கூடும்; அவ்வுலகத்து நுகர்ச்சியில்லையாயின், மாறிப்பிறக்கும் பிறப்பு இல்லையாகவும் கூடும்; மாறிப்பிறத்தலென்பதே இல்லையென்று சொல்வாருளராயின் இமயமலையின் சிகரம் ஓங்கினுற்போன்ற தமது புகழை நிலைபெறுத்தி வசையில்லாத உடம்பொடு கூடிநின்று இறத்தல் மிகவும் பெருமையுடையது; அதனுல், எவ்வாற்ருனும் நல்வினைசெய்தல் அழகிது' என்பது.

இங்ஙனம் அறிவுறுத்தருளி, அங்கே குழுமியிருந்த சான்ருேர்களைப் பார்த்து 'என் நண்பன் பிசிராந்தை இப்பொழுது வருவன்' என்று பெருஞ்சோழர் கூறினர். சான்ருேர்களோ அவர் வாரார் என்றனர். அது கேட்டதும் பெருங்கோவானவர் 'என் உயிரைப் பாதுகாக்கும் நண்பன் பாண்டி நாட்டுள்ளும் சேய்மையிலுள்ளதாகிய பிசிர் என்னும் ஊரிடத்தான் என்று சொல்லுவர்; எனினும், நாம் செல்வம் உடைய காலத்து அவன் வாராதிருப்பினும் யாம்

துன்புறுங்காலத்து வாரா திருப்பானல்லன்' என்றனர். சான்றோர்கட்கோ ஐயந்தீர்ந்தபாடில்லை. கோப்பெருஞ் சோழர் பின்னரும் கூறுகின்றார்: "நிறைந்த அறிவினை யுடையீர், 'அவன் நின்னைக் கேள்வியுற்றிருப்பதல்லது சிறிதுபொழுதும் கண்டதில்லை; பல ஆண்டுகள் தவறாது பழகிப்போந்த உரிமையுடையாராயினும் நீ கூறியவாறு வழுவுதலின்றி யொழுகுதல் அரிதேயாகும்' என்று கருதி ஐயுறுதொழிவீராக; அவன் என்றும் என்னைப் புறக்கணித் தவனல்லன்; இனிய குணங்களை யுடையன்; பிணித்த நட் பினை யுடையன்; புகழை யழிக்கும் பொய்ம்மையை விரும் பான்; தன் பெயரைப் பிறர்க்குச் சொல்லும்பொழுது 'என் பெயர் கோப்பெருஞ்சோழன்' என்று என் பெயரையே தன் பெயராகச்சொல்லும் அன்பின் உரிமை யையும் உடையன்; அதன்மேலும் இப்படி யான் துயர முறுங்காலத்து ஆண்டு நில்லான்; இப்பொழுதே வருவன்; அவனுக்கு இடமொழித்து வைப்பீராக" என்றனர்.

இங்ஙனங்கூறிக் கோப்பெருஞ்சோழர் வடக்கிருக்கவே, பிசிராந்தையாரும் அவர் கூறியாங்கு அப்பொழுது அவண் வந்து சேர்ந்தனர். பிசிராந்தையார் போன்றே பெருங் கோவுக்கு ஆருயிர் நண்பரும், உறையூரிலிருந்தவரும் ஆகிய போத்தியார் என்னும் புலவர் அதனைக்கண்டார்; அளவிடமுடியாத வியப்பினையும், அடக்கவொண்ணாத துயரத்தினையும் உடையராயினர். அப்பொழுது அவர் கூறியது,

"நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்

தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
இசைமரபாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை யீங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனால், தன்கோ லியங்காத் தேயத் துறையுஞ்
சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை யிழந்த விவ்வுலகம்
என்னா வதுகொல் அளியது தானே" (புறம்)

என்பது.

இதன் பொருள்: 'இவ்வரசன் எத்துணையும் பெரிய சிறப்புக்களுடன் கூடியும் அவற்றையெல்லாம் கைவிட்டு இவ்விடத்தே இப்படி வரத் துணிதல் நினைக்குமிடத்து வியப்பினையுடையது; வேற்று வேந்தனது நாட்டின்கண் விளக்கமமைந்த சான்றோன் புகழ் மேம்பாடாக நட்பே பற்றுக்கோடாக இன்னதோர் இன்னாக்காலத்து வழுவின்றி இவ்விடத்து வருதல் அதனினும் வியப்பையுடையது; இவ்வாறு வருவனென்று துணிந்து சொல்லிய வேந்தனது பெருமையும், அவன் சொல்லிய சொற் பழுதின்றாக வந்தவனது அறிவும் வியக்குந்தோறும் வியக்குந்தோறும் வியப்பு எல்லைகடந்துளது; ஆதலால், தன் செங்கோல் செல்லாத தேயத்துறையும் சான்றோனது நெஞ்சைத் தன்னிடத்தே உரித்தாகப்பெற்ற பழைய புகழையுடைய அத்தன்மையுள்ள பெரியோனை யிழந்த இத்தேயம் என்ன துன்பமுறுங் கொல்லோ! இதுதான் இரங்கத்தக்கது!' என்பது.

இங்ஙனம் பொத்தியார் வியந்தும் கையற்றும் கூறுமாறு சென்ற பிசிராந்தையாரும் வடக்கிருந்தனர்.* மற்றும் வடக்கிருந்தார் பலராவர். என்னே அன்பின் தகைமை! அன்பென்பது பல உடம்பிலுள்ள உயிர்களை ஒன்றாகப் பிணிக்குந் தன்மையாற்றான் அதற்கு நார் என்றும் பெயர் உண்டாயிற்றாதல்வேண்டும். இங்ஙனம் பெருங்கோவுடன் ஒருங்கே வடக்கிருந்தார் பலராகவும், அவர்க்கு உயிர் நண்பராகிய பொத்தியார் மாத்திரம் உடன் வடக்கிருந்தாரல்லர். அதற்குக் காரணம் அவர் மனைவி கருவுற்றிருந்தமையால் கோப்பெருஞ்சோழர் அவரைத் தடுத்து 'நினக்கு மகன் பிறந்தபின் வருக' என்று கூறிய மொழியை மறுக்கலாற்றாமையேயாகும். எனவே அவர் உடனுயிர் துறவாமைக்கும் நண்பன் சொல்லை மறுக்கலாற்றாத அவரது நட்புரிமையே காரணமாயிற்றென்பது தெளிவு. பிசிராந்தையாரும், பெருங்கோவும் வடக்கிருந்தமை கண்டு முறையே கண்ணகனார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் என்னும் புலவர்கள் இரங்கிப் பாடியுள்ளார்கள். கண்ணகனார் பாடியது,

"பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கல மமைக்குங் காலை

---

* "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்னும் குறளுரையில், 'கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி யொப்பின் அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கு மென்பதாம்' எனப் பரிமேலழகர் உரைத்தலும் காண்க.

ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே" (புறம்)

என்னும் அழகிய பாட்டாகும். 'பொன்னும், பவளமும், முத்தும், மணியும் நிலம், கடல், மலை என்பவற்றில் ஒன்றுக்கொன்று நெடிய சேய்மையிலிருப்பினும், அரிய விலையினையுடைய நல்ல அணிகலன்களைச் செய்யும்பொழுது அவை ஓரிடத்துத் தோன்றினாற் போல எப்பொழுதும் சான்றோர் சான்றோர் பக்கத்தினராவர்' என்பது இதன் பொருளாம்.

பொத்தியார் என்னும் புலவர் தம் நண்பன் சொல்லை மறுது சென்று உறையூரைக் கண்டபொழுதும் பின் பொருகால் அரசனது நடுகல்லைக் கண்டபொழுதும் இரங்கிப்பாடிய பாட்டுக்கள் நெஞ்சினையுருக்குந்தன்மையன. 'செங்கோலினன், திண்ணிய அன்பினன், மகளிர்க்கு மெல்லியன், வீரர்க்கு வீரன், உயர்ந்தோர்க்குப் புகலிடம்; அவனை அத்தன்மையனென்று கருதாது கூற்றம் உயிர் கொண்டுபோயிற்று; ஆதலால் வாய்மையுடைய புலவர்களே, நம் துன்புற்ற சுற்றத்தையும் சேர்த்துக்கொண்டு அக் கூற்றத்தை வைவோம் வாரீர்' என்று கூறுகின்றார். இவ்வாறு தம் ஆருயிர் நண்பனைப்பிரிந்து ஒருநாளும் பொறுத்திருக்கலாற்றாத பொத்தியாரும், தமக்கு மகன் பிறந்த பின்னரும் வாளா அமைந்திருப்பரோ? மகனும் பிறந்தான்; அவருஞ் சென்றார்; சென்று நடுகல்லைக்கண்டு அவர், 'நிழலைக்காட்டிலும் நின்னைப் பிரியாதுறையும் நின் விருப்பமுள்ள மனைவி வயிற்று மகன் பிறந்தபின் வா' எனச்சொல்லி என்னை இங்கு நின்றும் போக்கிய அன்பிலாதவனே, நின்னோடு என்னிடையுள்ள நட்பினை நீ எண்ணுதிருப்பாயல்லை; புகழை விரும்புவோனே, எனக்கு நீ குறித்

துள்ள இடம் யாது? சொல்வாயாக’ என்றனர். கோப்பெருஞ்சோழரோ கல்லாகியும் அவர்க்கு இடங்கொடுத்தனர். அவரும் ‘இன்னுயிர் விரும்புங் கிழமைத் தொன்னட்புடையோர் தம்முழைச் செலின், அவர் நடுகல் ஆகியக் கண்ணும் இடங்கொடுத் தளிப்பர்’ என்று அதனை வியந்து கூறி, வடக்கிருப்பாராயினர். இவ்வரசரைப் பாடிய புலவர்கள் பிசிராந்தையார், எயிற்றியனார், போத்தியார், பூதநாதனார் என்போர்.

## XVI

கோச் செங்கட் சோழர்.

சோழர் குலமென்னும் பாலாழியிற் றோன்றி அறனும் மறனும் ஆற்றலுங்குன்றாது தனிச்செங்கோல் நடாத்தித் தம் புகழ் நிறுவிய மன்னர்களில், சைவ நன்மக்களது உள்ளத்தை முழுமணிப் பீடமாகக்கொண்டு வீற்றிருத்தற்குரியோருள் முதன்மையுற்றிருப்போர் கோச்செங்கட்சோழர் என்பார். இப்பெரியாரது சரிதம் சைவர்கட்கு எய்ப்பினில் வைப்பாகக் கிடைத்திருக்கும் ஞான பண்டாரமாகிய பெரியபுராணமென்னும் திருத்தொண்டர் புராணத் திருமுறையகத்தே மிளிர்கின்றது. அதன் சுருக்கம் பின் வருமாறு:

‘புற வொன்றின் பொருட்டாகத் துலை யேறியும் முறை புரிந்த சோழ மன்னர்க்குத் தொன்றுதொட்டு உரிமை வாய்ந்ததாகிய சோணாட்டின் கண்ணே அலையால் மணி கொழிக்கும் அழகிய காவிரியாற்றின் கரையில் சந்திர தீர்த்தத்தின் பக்கத்தே பல தருக்களும் நிறைந்த குளிர் பூஞ்சோலை ஒன்றுளது. அப்பூங்காவின்கண் வெண்ணாவல் மரத்தின் கீழே தேவ தேவராகிய சிவபெருமான் சிவலிங்கமென்னும் திரு அருளுருத் தாங்கி எழுந்தருளியிருந்தனர். பழம் பிறப்பில் மேலாய தவத்தினைச் செய்த

தொரு வெள்ளானை அவ்வருளுருவைக் கண்டு அன்பு மேலிட்டுக் கையால் நீரினை முகந்துவந்து ஆட்டியும், பூங் கொத்துக்களைப் பறித்துச்சாத்தியும் நீலகண்டராகிய பெருமானை நித்தலும் வழிபாடு செய்தொழுகாநின்றது. அதனால் திரு ஆனைக்கா என்னும் பெயரும் அத்தலத்திற்கு உளதாகி நிலவுகின்றது. இங்ஙனமாக, ஞானமுடைய தொரு சிலந்தியானது நம்பரது செம்பொற்றிருமுடிமேல் சருகு முதலியன உதிராவண்ணம் மேல் விதானம் என்னு மாறு வாய் நூலால் வலையொன்று செறியப் புரிந்தது. அருமையாக இழைத்த அச்சிலம்பி வலையினைக்கண்டது ஆண்டவரை வழிபடச் சென்ற அவ்வானை; கண்டதும் ஈதிங்கிருப்பது அநுசிதமாமென்று அதனைச் சிதைத்தது. சிலந்தியோ முன்போல் மீண்டும் பந்தர் இழைத்தது. பிற்றைநாள் அதனையும் ஆனை யழித்தது. பார்த்தது சிலந்தி; சினம் மூண்டது; 'எம்பெருமான் திருமேனியிற் சருகு விழாமல் யான் வருந்தி யிழைத்த நூலின் பந்தரை இவ்வானை அழிப்பதோ' என வெம்பிக் கொதித்தெழுந்து யானையின் துதிக்கையுட் புகுந்து கடித்தது. கடிக்கவே யானையானது அதனைப் பொறுக்கலாற்றாது நிலத்திலே கையை மோதிக் குலைந்து வீழ்ந்தது. கையிற் புகுந்த சிலந்தியும் உயிர்துறந்தது. அருமறைப் பொருளாகும் ஐயனும் அம் மதயானைக்கும் தகுமாறு வரமளித்து, சிலந்தியானது சோழர் குலத்துதித்து உலகு புரந்தளிக்க அருள் புரிந்தனர். அக்காலத்தே சோழ குலத்தரசனும் சுபதேவன் என்பவன் தன் பெருந்தேவியாகிய கமலவதி யுடன் தில்லைத் திருப்பதியை அடைந்து திருச்சிற்றம் பலத்தே திரு நிருத்தம் புரியும் சேவடியை வணங்கித் திருப்படியின் கீழ் வழிபாடு செய்துவந்தனன். தேவி கமலவதியும் இறைவரை வழிபட்டு மகப்பேறு கருதி வரம் வேண்டினள். பெருமானும் திருவுள்ளஞ் செய்தனர்.

முன் திருப்பணி புரிந்த சிலந்தி அரசு மகிழக் கமலவதி திருவயிற்றில் அழகிய மகவாய் வந்தெய்தியது. கமலவதி கருவுற்றுப் பத்துத் திங்களும் நிரம்பி மகப் பெறும் பொழுது அடுத்த காலையில் காலத்தின் இயல்பை அறியும் முதியா ரொருவர் 'இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமேல் இக்குழந்தை மூன்றுலகமும் புரக்க வல்ல தாகும்' என இயம்பினர். அதனைக் கேட்டவளவில் அன்னை கமலவதியும் 'ஒரு நாழிகை கழித்து என் பிள்ளை பிறக்கும் படியாக என் கால்களை மேலே தூக்கிக் கட்டுங்கள்' என்று சொல்லி, அங்ஙனமே அறிஞருரைத்த நற்பொழுது வந்துற்றவளவில் காற் பிணிப்பு விடப்பெற்று, அருமணி போலும் புதல்வனைப்பெற்றெடுத்து 'என் கோச் செங் கண்ணனோ என்றாள்.' தேவி புதல்வனைப்பெற்று உயிர் துறக்கவே, செங்கோல் மன்னனாகிய சுபதேவன் ஆவி யனைய அரும் புதல்வனை வளர்த்து முடிசூட்டுவித்துத் தானும் தவநெறி சார்ந்து சிவலோக மெய்தினன்.

கோச்செங்கட் சோழரும் சிவபெருமானது திரு வருளால் பழம் பிறப்பினை யுணர்ந்து அரசாண்டு வருகின் றார் ஆகலின் சிவனார் மகிழ்ந்துறையும் திருக்கோயில் பல சமைத்தலாகிய திருத்தொண்டினைக் கடன்மையாக மேற் கொண்டனர். ஆனைக்காவிலே தாம் முன்பு அருள்பெற்ற தனை அறிந்து ஞானச்சார்வாகும் வெண்ணாவல் மரத்தி னுடன்கூட நலஞ் சிறந்து விளங்கும்படி பெருமான் எழுந் தருளியிருக்கும் திருக்கோயில் சமைத்தனர். மற்றும், அமைச்சர்களை யேவிச் சோணாட்டின் பற்பல பகுதிகளி லும் அம்மையப்பர் எழுந்தருளும் செம்மையாய திருக் கோயில்கள் பல சமைத்து அக்கோயில்தோறும் அமுது படி முதலானவற்றுக்கு அளவில்லாத செல்வங்களை ஏற் படுத்தினர்; தில்லைத் திருப்பதியை அடைந்து பொன்னம் பலத்தே திருநிருத்தம் புரியும் பெருமானைப் பேரன்புடன்

அடிவணங்கி உருகி உளங்களித்து உறையும் நாளில் வாய்மை குன்றாத தில்லைவாழ் மறையவர்க்குத் திரு மாளிகை பல சமைத்தனர். இவ்வாறாக, பூவுலகைப் பொதுவறப் புரந்தருளிய கோச்செங்கட் சோழர் சிவ பெருமானுக்குரிய திருத்தொண்டுகள் பல புரிந்து, தேவர் போற்றத் தில்லையம்பலவாணரின் திருவடி நீழலை யெய்தினர்.'

இனி, இவ்வேந்தர் பெருமானைப்பற்றிய சில ஆராய்ச் சிக் குறிப்புக்கள் இங்கே எழுதுதற்குரியன :

இவர், சேரமான் கணைக்கால் இரும்பொறை என்னும் சேரமன்னனுடன் போர்புரிந்து வாகைசூடி, அவனது கழு மலம் என்னும் ஊரைக் கைப்பற்றியதுடன், சேரமானையும் பிடித்துச் சிறைப்படுத்தினர். அப்பொழுது கணைக்கா லிரும் பொறைக்கு உயிர்த்தோழராயிருந்த பொய்கையார் என் னும் புலவர் செங்கட் சோழரது வெற்றித்திறத்தைச் சிறப்பித்துப் பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாகிய களவழி நாற்பது என்னும் நூலினை இயற்றிச் சேரமானைச் சிறை மீட்டனர். சில பிரபந்தங்களிலே இவ்வரலாறு கொண்டு கோச்செங்கட் சோழர் சுட்டப்படுகின்றார்.

"களவழிக் கவிதை பொய்கையுரை செய்ய வுதியன்
கால்வழித் தளையை வெட்டியர சிட்ட வவனும்"

என்று கலிங்கத்துப் பரணியும்,

"மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்"

என்று விக்கிரமசோழனுலாவும்,

"அணங்கு, படுத்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன்"

என்று குலோத்துங்க சோழனுலாவும், இங்ஙனமே இராச ராச சோழனுலா முதலியனவும் கூறுகின்றன.

புறநானூற்றிலுள்ள 'குழவியிறப்பினும்' என்னும் பாட்டின் கீழ்க்குறிப்பு "சேரமான் கணைக்கா லிரும்பொறை* சோழன் செங்கணானோடு போர்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சியபாட்டு" என்றுளது. தமிழ் நாவலர் சரிதையில் இப்பாட்டின் கீழ்க்குறிப்பு "சேரன் கணைக்கா லிரும்பொறை செங்கணானாற் குணவாயிற் கோட்டத்துத் தளைப்பட்டபோது பொய்கையாருக் கெழுதி விடுத்த பாட்டு" என்றிருக்கிறது. இவை ஒன்றினொன்று சிறிது முரண்படினும், சேரமான் கணைக்காலிரும்பொறை கோச் செங்கணானாற் சிறைப்பட்ட செய்தி எல்லாவற்றினும் கூறப்பெற்றுளது.

இனி, திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி, திருநறையூர்ப் பதிகத்தில்

"கவ்வைமா களிறுந்தி வெண்ணி யேற்ற
கழன்மன்னர் மணிமுடிமேற் காக மேறத்
தெய்வவாள் வலங்கொண்ட சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின் களே" என்றும்,

"பாராள ரவரிவரென் றழுந்தை யேற்ற
படைமன்ன ருடல்துணியப் பரிமா வுய்த்த
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின் களே" என்றும்

இவ்வரசரைக் குறிப்பிட்டிருத்தலால், சோழநாட்டிலுள்ள வெண்ணி, அழுந்தூர் என்னும் ஊர்களில் நிகழ்ந்த போரிலும் இவர் பகையரசரை முறியடித்தனரென்பது தெரிகின்றது. இவ்வாற்றால் சேர, பாண்டிய மன்னர்கள் இவ

ருடன் போர்புரிந்து தோற்றுக் கீழ்ப்படிந்தாராதல் வேண்டும். மேற் குறித்த பதிகத்தில் திருமங்கைமன்னன் இவரைத் 'தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த திருநறையூர் மணிமாடம்' என்பதனால் மூன்று நாட்டிற் கும் உரியராகக் கூறுவதும், சுந்தர மூர்த்திகள் திருத் தொண்டத் தொகையில் 'தென்னவனு யுலகாண்ட செங் கணார்க் கடியேன்' என்று கூறுவதும் இங்கே கருதற் பாலன.

திருமங்கை மன்னன் இவரைப் புகழ்ந்து கூறுவதி லிருந்து, இவர் அரசராதற்கேற்ப வேறு மதங்களையும் புரந்துவந்தனரென்பது பெறப்படும்; எனினும் இவர்செய்த தொண்டுகளெல்லாம் சிவபெருமானுக்கேயாகும். இவர் சிவபெருமானுக்கு ஆனைக்கா முதல் அம்பர் இறுதியாக அறுபத்துநான்கு மாடக்கோயில்கள் கட்டினரென்று சில பெரியோர் கூறுகின்றனர். திருமங்கையாழ்வாரே இவரது கோயிற் றிருப்பணியைக் குறித்து "இருக்கிலங்கு திரு மொழிவா யெண்டோ ளீசற் கெழின்மாடம் எழுபது செய் துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன்" என்று கூறியிருக்கின்றார். இதனால் எழுபது மாடக்கோயில் எடுத்தனரென அறியலாகும். மாடக்கோயில் என்பது பெருங்கோயில் என்றும் வழங்கப்பெறும். பெருங் கோயில் எல்லாம் கோச்செங்கணார் கட்டியவே எனின், 'பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங் கோயி லெழுபதினோ டெட்டும்' என்று திருநாவுக்கரசர் அடைவு திருத்தாண்டகத்திற் கூறியிருத்தலின், எழுபத் தெட்டுப் பெருங்கோயில் செங்கட் சோழர் எடுத்தன ரென்று கொள்ளவேண்டும். இவர் சிலந்தியாயிருந்து இறைவனை வழிபட்டு அரசாயின உண்மையையும், இவர்

பல திருக்கோயில்கள் எடுப்பித்த வண்மையையும் திருநெறித் தமிழ்வேதம் அருளிய சைவசமய குரவர்கள் தம் பதிகங்களில் பலவிடத்தும் பாராட்டியிருக்கின்றார்களென்றால் இவரது பெருமையை நாம் எங்ஙனம் அளவிட்டுரைக்கலாகும்?

“செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம்வெண் ணெயுளாய்
அங்கத் தயர்வா யினளா யிழையே.”

—திருஞானசம்பந்தர்.

“புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயி னூலாற்
பொதுப்பந்த ரதுவிழைத்துச் சருகான் மேய்ந்த
சித்தியினா லரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலான் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை வெள்ளா வன்பு
விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.”

—திருநாவுக்கரசர்.

“தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென வியற்றச்
சுருண்ட செஞ்சடை யாரது தன்னைச்
சோழ னாக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றியென் றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவடு துறை யாதியெம் மானே.”

—நம்பியாரூரர்.

# XVII

## பொது.

**சோ**ழநாட்டின் எல்லையும் அளவும் இவை யென்பதனை,

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்"

என்னும் தனிப்பாடல் உணர்த்தா நிற்கும். சோணாடே யன்றித் தொண்டை நாடு முதலியனவும் பழைய சோழ மன்னர்களின் ஆட்சியில் அடங்கியிருந்தன என்றாவது அவர்கள் ஆணைக்குக் கீழ்ப்பட்டிருந்தன என்றாவது **அரசியல்.** கூறுதல் பொருந்தும். † அந்நாளில், நாட்டின் (மண்டலத்தின்) பிரிவுகட்குக் கூற்றம், கோட்டம், நாடு என்னும் பெயர்கள் வழங்கின. குறிச்சி, பாடி, ஊர், குடி, பதி, பாக்கம், பட்டினம், நகர் முதலியன ஊர்கட்கு வழங்கிய பெயர்களாகும். இவற்றுள் பட்டினம், நகர் என்பன பேரூர் அல்லது அரசன் உறையும் ஊரைக்குறிக்கும். இவ்விரண்டனுள் பட்டினம் என்பது கடற்கரையிலுள்ள நகராகும். நாடு என்பது தேம் என்னும் பெயரானும் வழங்கிற்று. சங்கச் செய்யுட்களினால் அறியலாகின்ற சோழர் தலைநகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்னும் இரண்டுமாம். சிலப்பதிகார வேனிற் காதையில்,

"மாட மதுரையும் பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்"

எனச் சோணாட்டிற்கு இவ்விரண்டு தலைநகர் இளங்கோவடிகளால் ஒருங்கு குறிப்பிடப்படுதல் காண்க. இவற்

† தமிழகத்திலுள்ள நாடுகளின் பிரிவு வகைகள், யானெழுதிய கள்ளர் சரித்திரம் என்னும் புத்தகத்தில் விரிவாக ஆராய்ந்து காட்டப்பெற்றுள்ளன.

றுள் உறையூர் உறந்தை எனவும் கோழி எனவும் வழங்கப் படும். ஓர் கோழியானது யானை யொன்றைப் போரிலே தொலைத்த இடத்தில் அமைக்கப்பெற்றதாகலின் இந்நகர்க் குக் கோழியெனப் பெயருண்டாயது என்பர் ;

"முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்"

என இளங்கோவடிகள் கூறுதலுங் காண்க.

மற்றொரு தலைநகர்க்குச் சம்பாபதி, காவிரிப்பூம் பட்டி னம் என்னும் பெயர்கள் உண்டாய வரலாறு மணிமேகலை யிற் கூறப்பட்டிருத்தல் முன் சோணாட்டின் பழமை கூறிய விடத்தும், அதற்குக் காகந்தி என்னும் பெயருண்டாயது காந்தன் வரலாறுரைத்த விடத்தும் போந்தமை காண்க. புகார் என்னும் பெயர் அதற்குண்டாயது மரக்கலங்கள் புகும் துறைமுகமுடைமையாலாம். பெரிப்ளஸ் 'கமாரம்' என்றும், டாலமி 'கபேரிஸ்' என்றும் கூறியது இந்நக ரையே என்பர். இத் தலைநகரின் அமைப்பும், சிறப்பும் கரிகாலன் வரலாறுரைத்தவிடத்துக் காட்டப்பெற்றன.

சோழர் தமிழகத்து முடிகெழுவேந்தர் மூவருள் ஒரு வராகலின், இவர்,

"படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய"

என்று தொல்காப்பியம் கூறுமாறு படை முதலிய அனைத் தும் உடையராவர். இவற்றுள் முரசானது வீரமுரசு, நீதிமுரசு, ஈகைமுரசு என மூவகைப்படும். வீரமுரசினை இவர்கள் மிக மதித்து நீராட்டி மாலைசூட்டிப் பூசிக்கும் வழக்கமுடையர். சோழர் குலத்தார்க்குப் பொதுவாக வழங்கும் பெயர்கள் இவை யென்பதனை,

"சென்னி வளவன் கிள்ளி செம்பியன்
பொன்னித் துறைவன் புலிக்கொடிப் புரவலன்
நேரியன் ஆர்க்கோன் நேரிறை அபயன்
நேரி வெற்பன் கோழி வேந்தன்
சூரியன் புனலுடன் சோழன் பெயரே"

என்னும் திவாகரத்தால் அறிக. இவற்றுள் சென்னி, வளவன், கிள்ளி, செம்பியன், சோழன் என்பன குடிபற்றிய சிறப்புப் பெயராகவும், அடையடுத்து இயற்பெயராகவும் சங்கச் செய்யுட்களிற் பயின்றுள்ளன. இப்பெயர்களும், அபயன் என்பதும் ஒழிந்த ஏனைய பெயர்கள் சோழருடைய நாடு, நகர், மலை, யாறு, கொடி, மாலை, குலமுதல்வன் என்பவை பற்றியன. புலி இவர்கட்குக் கொடியாதலோடு இலச்சினையும் ஆம். ஆர் (ஆத்தி) கண்ணியும் தாரும் ஆகும். நேரிமலை சேரர்க்குரியதாகப் பதிற்றுப்பத்தில் கூறப் பட்டிருப்பது சிந்திக்கற்பாலது.

சோழமன்னர்கள் அரசியல் நடாத்துதற்கு அமைச்சர் குழு, புரோகிதர் குழு, தானைத்தலைவர் குழு, தூதுவர் குழு, ஒற்றர்குழு என்னும் ஐந்து பெரிய கூட்டங்களைத் துணையாக வைத்துக்கொண்டிருந்தனர்; இவர்களன்றி, கரணத்தியலவர், அரசனது ஆணையை நிறைவேற்றும் கரும விதிகள், பண்டாரம் வகிப்போராகிய கனகச்சுற்றம், வாயில் காவலர், நகர மாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் என்போரும் அவர்கட்கிருந்தனர். நட்பாளர், அறிவர், மடைத்தொழிலாளர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப் புலவர் என்பார் உறுதிச்சுற்றமாக விளங்கினர். இவை,

"ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்"

எனச் சிலப்பதிகாரத்தும், மணிமேகலையிலும் வருதலாலும்,

"அமைச்சர் புரோகிதர் சேனு பதியர்
தவாத்தொழிற் றாதுவர் சாரணர் என்றிவர்
பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே"
"கரணத் தியலவர் கரும விதிகள்
கனகச் சுற்றம் கடைகாப் பாளர்
நகர மாந்தர் நளிபடைத் தலைவர்
யானை வீரர் இவுளி மறவர்
இனையர் எண்பே ராயம் என்ப"

எனத் திவாகரம் முதலிய நிகண்டுகள் அவற்றை விரித்துரைத்தலானும், பிறவாற்றானும் பெறப்படும். உறையூரிலும், காவிரிப்பூம்பட்டினத்திலும் குடிகளின் வழக்குகளைக் கேட்டு நூனெறி பிழையாது தீர்ப்பளிக்கும் உயர் நீதிமன்றங்கள் (அறங்கூறவையம்) இருந்தன. இவற்றிலிருக்கும் நீதிபதிகள் தருமாசனத்தார் எனப்படுவர்.

"அறங்கெழு நல்லவை உறந்தை யன்ன"
என அகத்திலும்,

"உறந்தை அவையத்து அறம் நின்று நிலையிற்று"
எனப் புறத்திலும்,

"அரசுகோல் கோடினும் அறங்கூ றவையத்து
உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்"
எனச் சிலப்பதிகாரத்தும் வருதல் காண்க. மற்றும், அரசியல் நடாத்துதற்கு இன்றியமையாத பலதிறப்பட்ட வினைஞர்களும் இருந்தனராவர் எனக் கொள்ளுதல் வேண்டும்.

இவர்கள் யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகைப் படையும் உடையராயிருந்தனர். இவற்றை நடாத்தும் தானைத்தலைவர் சோழிய ஏனாதி என்னும் பட்டம் பெறுதற்குரியராவர். இவர்கள் வேற்று நாட்டின்மீது போருக்குச் செல்லும்பொழுது வெற்றிவாள், கொற்றக்

குடை, வீரமுரசு இவற்றை நன் முழுத்தத்திற் புறப்படச் செய்தல் வழக்கம். இங்ஙனஞ் செய்தல் வாணாட்கோள், குடைநாட்கோள், முரசுநாட்கோள் எனப்படும். இவர் வஞ்சிசூடிப் பகைமேற் செல்லும்பொழுது தம் படையாளர்க்குப் படைக்கலம் முதலியனவும், பரிசிலர்க்குப் பொருளும் கொடுப்பர். போரினை மேற்கொண்ட பின்னரிலே படைத்தலைவர்க்கும் படைகட்கும் பெருவிருந்து செய்து மகிழ்விப்பர். இதனை,

"பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை"

என்பர் தொல்காப்பியர். 'வேந்தன் போர்தலைக்கொண்ட பிற்றை ஞான்று தானே போர் குறித்த படையாளரும் தானும் உடனுண்பான் போல்வதோர் முகமன் செய்தற்குப் பிண்டித்து வைத்த உண்டியைக் கொடுத்தல் மேயினை பெருஞ் சோற்று நிலை' என்பர் நச்சினார்க்கினியர். இங்ஙனமாய போர் முறைகள் பலவும் தொல்காப்பியப் புறத்திணையியல் முதலியவற்றான் அறியப்படும். இவை போல்வன ஏனைச் சேர பாண்டிய வேந்தர்கட்கும் பொதுவாவன என்க.

இவர்கள் சேனைத் தலைவர்க்கு ஏனாதி என்னும் பட்டம் அளித்தல் போன்றே அமைச்சர், கணக்கர், வேளாளர் முதலாயினார்க்குக் காவிதி என்னும் பட்டமும், வணிகர்க்கு எட்டி என்னும் பட்டமும் அளித்து அதற்கு அடையாளமாகப் பொன்னாற் செய்யப்பட்ட பூவினை அளிப்பர். அவை எட்டிப்பூ, காவிதிப்பூ எனப்படும்.

இவ்வேந்தர்கள் பிறந்தநாள் ஒவ்வோராண்டிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெறும். அப்பொழுது இவர்கள் மங்கல வண்ணமாகிய வெள்ளணி அணிந்து, செருச் செய்தல், சிறை செய்தல், கொலை செய்தல் முதலிய செற்றச் செயல்கள் செய்யாதொழிந்து, சிறைவிடுதல், இறை தவிர்

தல், புலவர் முதலிய தக்கார்க்கு வேண்டுவன தருதல், இரவலர்க்கீதல் முதலிய அறச் செயல்கள் செய்யா நிற்பர். இது பெருமங்கலம் எனவும், வெள்ளணி எனவும் கூறப் படும். இங்ஙனமே இவர்கள் முடிபுனைந்த நாள் தொடங்கி ஒவ்வோராண்டினும் முடிசூட்டு நாளும் கொண்டாடப் பெறும். இது முடிபுனைந்து நீராடுதலின் மண்ணுமங்க லம் எனப்படும். இவற்றை முறையே,

“சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமும்”
“சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்”

எனத் தொல்காப்பியர் கூறுதல் காண்க.

## XVIII

**கைத்தொழில் வாணிகம்.**

இனி, அந்நாளிலே சோணாட்டில் கைத்தொழில்களும் வாணிகமும் எங்ஙனம் பல்கியிருந்தனவென்பது கரிகாலன் வரலாறு கூறிய வழிக் காணப்படும். அங்கே ‘அரியவும் பெரியவும்’ எனச் சுருங்கக் கூறியவற்றை இங்கே காட்டுதும். சிலப்பதிகாரம் ஊர் காண் காதை உரையில் அடியார்க்கு நல்லார் கூறிய அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் எனப்பட்ட அகிலின் தொகுதியும், கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக் கம்பி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி எனப் பட்ட துகிலின் தொகுதியும், மலையாரம், தீமுரண் பச்சை, கிழான் பச்சை, பச்சைவெட்டை, அரிசந்தனம், வேர்,

சக்கொடி எனப்பட்ட ஆரத்தோகுதியும், அம்பரேச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, கிரியாசம், தைலம் எனப்பட்ட வாசத்தோகுதியும், மலைச்சரக்கு, கலை, அடைவுசரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மார்ப்பற்று, வாராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாரோசு, சூடன், சீனச்சூடன் எனப்பட்ட கருப்பூரத்தோகுதியும் புகார் முதலிய நகரங்களில் வாணிகம் செய்யப்பட்டவாதல் ஒருதலை.

## XIX

**கல்வி.** இம்மன்னர்கள் காலத்தில் அரசியல் முதலிய யாவும் தமிழ்மொழி வாயிலாக நடைபெற்று வந்தமையாலும், பாண்டிநாட்டிலும் சோணாட்டிலும் சங்கங்கள் நிறுவித் தமிழ் ஆராயப்பெற்றமையாலும், மூவேந்தர்களும் வள்ளல்களும் வரையாத வண்மையுடன் புலவர்களை மிக மதித்துப் போற்றிவந்தமையாலும் தமிழ்க் கல்வியானது மிக உயரிய நிலையில் இருந்தது; புலவர் பல்லாயிரவர் திகழ்ந்தனர்; இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க்கும் இலக்கணமாகிய அகத்தியமும், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம், பனம்பாரம், பன்னிருபடலம், அவிநயம், காக்கைபாடினியம், சிறுகாக்கை பாடினியம், சங்கயாப்பு, நற்றத்தம், பல்காயம், மயேச்சுரம், வாய்ப்பியம், இறையனார் களவியல் முதலிய இயற்றமிழ் நூல்களும், பெருநாரை, பெருங்குருகு, இசைநுணுக்கம், பெருங்கலம், இந்திரகாளியம், பஞ்சபாரதீயம், பஞ்சமரபு முதலிய இசைத்தமிழ் நூல்களும், பரதம், குணநூல், கூத்தநூல், முறுவல், சயந்தம், செயிற்றியம், பரதசேனாபதீயம், மதிவாணனார் நாடகத்தமிழ்நூல் முதலிய நாடகத்தமிழ் நூல்களும் தழைத்து விளங்கின; எண்ணிறந்த பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை உள்

விட்டன தலைச்சங்கத்தாராலும், கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலையகவல் என இத்தொடக்கத்தன இடைச்சங்கத்தாராலும், நெடுந்தொகைநானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணைநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், பத்துப்பாட்டு, முத்தொள்ளாயிரம், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்று இத்தொடக்கத்தன கடைச்சங்கத்தாராலும் பாடப்பெற்று நிலவின; தெய்வப்புலமைத் திருவள்ளுவ தேவரால் திருக்குறள் என்னும் செந்தமிழ்த் திருமறையும், சேரமுனியாகிய இளங்கோவடிகளால் சிலப்பதிகாரமும், கூலவாணிகன் சாத்தனால் மணிமேகலையும், கபிலர் முதலிய நல்லிசைப் புலவர்களால் இன்னா நாற்பது முதலிய ஏனைய கீழ்க்கணக்கு நூல்களும் இயற்றப்பெற்று ஒளிர்ந்தன; வானநூல், எண்ணூல், மருத்துநூல் முதலிய கலைகளும் வழக்கில் இருந்தன. மற்றும், அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமைமுழவு, நாண்முழவு, காலைமுழவு என ஏழுவகையாற் பகுக்கப்படும் பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை முதலிய தோற்கருவிகளும், வங்கியம் என்னும் துளைக்கருவியும், பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்னும் நரப்புக்கருவிகளும், கஞ்சக்கருவியும் பயிலப்பெற்று வந்தன; ஆயிரம் நரம்புடைய ஆதியாழ் என்பதும் இருந்தது; குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசையானும் பிறக்கும் பண் விகற்பங்களும், பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்

றென்றாகிய ஆதியிசைகளும் தமிழ்ப் பாணர்களால் அறிந்து பாடப்பெற்று வந்தன; வேத்தியல், பொதுவியல் என்னும் இருதிறமுடைய அகக்கூத்து, புறக்கூத்துகளும், குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்னும் விநோதக்கூத்துகளும், அம்மனை, பந்து, கழங்காடல், உந்தி, சாழல், பல்லாங்குழி, அவலிடி, கொற்றி, பிச்சி, வாரிச்சி, சிந்துப்பிழுக்கை, குடப்பிழுக்கை, பாண்டிப்பிழுக்கை, பாம்பாட்டி, ஆலங்காட்டாண்டி முதலிய பல்வரிக் கூத்துகளும், பிறவும் நடிக்கப்பெற்று வந்தன.

இப்பொழுது வெளிவந்துள்ள எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய கடைச்சங்க இலக்கியங்களிலிருந்து அறியப்படும் புலவர் ஏறக்குறைய எழுநூற்றுவர் ஆவர். இவர்களில் ஒளவையார், ஆதிமந்தியார், காக்கைபாடினியார் நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், வெள்ளிவீதியார், வெண்ணிக் குயத்தியார், குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி, காவற்பெண்டு, குன்றியாள், கழார்க்கீரன் எயிற்றியார், காமக்கணிப்பசலையார், நக்கண்ணையார், நன்னாகையார், பூங்கண்ணுத்திரையார், பொன்மணியார், மாறோகத்து நப்பசலையார், போந்தைப் பசலையார், அள்ளூர் நன்முல்லையார், பாரிமகளிர் முதலாயினோர் நல்லிசைப்புலமை வாய்ந்த மெல்லியலாராவர். இவற்றிலிருந்து அக்காலத்தே கல்வியில் இருபாலாரும் எங்ஙனம் சிறப்படைந்திருந்தன ரென்பது புலப்படும்.

## XX

**சமயம்.**

தமிழ்மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே உயிர் உடல்களை வெவ்வேறாக உணர்ந்திருந்தனர் என்பது தமிழ் எழுத்துக்களுக்கு உயிர் என்றும் மெய் என்றும் பெயரிட்டிருத்தலானே பெறப்படும். எவ்வளவு பழங் காலத்திற் சென்று நோக்கினும் தமிழர்கள் உலகம், உயிர், கடவுள் என்னும் மூன்று பொருளையும் உணர்ந்திருந்தமையோடு, உலகம் ஐம்பூதங்களாலாயதென்

றும், உயிர்கள் வினைக்கட்டுடையன என்றும், கடவுள் வினைக்கட்டில்லாதவர் என்றும் அறிந்திருந்தனர் என்பது புலனாகின்றது. மிக்க பழமை வாய்ந்ததாகிய தொல் காப்பியத்தில்,

"காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்"

எனவும்,

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

எனவும்,

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன்"

எனவும் கூறப்பட்டிருத்தல் காண்க. மற்றும் அதிலே கடவுள் என்னும் பெயரும், கடவுளை வாழ்த்துதலும் கூறி யிருப்பதினின்று பரம்பொருளானது எல்லாவற்றையும் கடந்து நிற்கும் இயல்பினதென்பதும், அதனை நினைந்து வாழ்த்தி வழிபடுதலே உயிர்கள் கட்டினின்றும் நீங்கி இன்புறுதற்குரிய நெறி என்பதும் அவர்கள் அறிந்திருந் தமை போதரும். இயல்பாகவே கட்டின்மையும், முற் றுணர்வும், வரம்பிலின்பமும் உடைய அம் மெய்ப்பொரு ளையே பல்வேறு காலங்களில் பற்பல தேசத்திலுமுள்ள மாந்தர்கள் தாம்தாம் அறிந்தவாறு வெவ்வேறு பெயரா னும், வெவ்வேறு நெறியானும் வழிபட்டு வருகின்றனர்.

தமிழ் நாட்டிலே குறிஞ்சிநில மக்கட்கு முருகக்கடவு ளும், முல்லைநில மக்கட்குத் திருமாலும், மருதநில மக்கட்கு இந்திரனும், நெய்தல்நில மக்கட்கு வருணனும் தெய்வங் கள் எனத் தமிழ்நூல்கள் கூறுகின்றன. திணைப்பிரிவும், திணைமக்கட் பிரிவும் இயற்கையானவையே எனினும், திணை கட்குத் தெய்வ அடைவு ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டு களின் முன்பு ஏற்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்று

கிறது. கண்ணபிரான் ஆயர்பாடியில் வளர்ந்து ஆயர்களுடன் சேர்ந்து ஆவினம் மேய்த்தல் முதலிய விளையாடல்களைச்செய்து போந்த பின்னரே முல்லை மக்களிடத்து மாயோன் வழிபாடு சிறந்து விளங்கிற்று என்னலாம். ஆரியவேதங்களில் மிகுத்துக் கூறப்படும் இந்திரன் வழிபாடும், வருணன் வழிபாடும் அக்காலத்திற்றான் தமிழர்களாலே கைக்கொள்ளப் பட்டிருக்க வேண்டும். முருகன் வழிபாடு அங்ஙனம் இடையில் உண்டாயதென நினைக்கக் காரணமில்லை.

இனி, பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சிறப்பாகக் கூறப்படும் கடவுளர் நால்வர். நக்கீரர் பாடிய 56-ம் புறப்பாட்டிலே இடபக்கொடியும் கணிச்சிப்படையும் மணிமிடறும் உடைய சிவபெருமானும், வால்வளை மேனியும் கலப்பைப் படையும் பனைக்கொடியும் உடைய பலராமனும், நீலமணியொக்கும் மேனியும் கலுழக்கொடியும் உடைய கண்ணனும், மயிலாகிய கொடியும் மயிலூர்தியும்உடைய முருகவேளும் முறையே கூறப்பெற்றுளர். அதில்,

"ஞாலங் காக்கும் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வர்"

என இவர்கள் உலகத்தைப் புரப்போராகக் கூறியிருப்பதும் சிந்திக்கற்பாலது. கபிலர் பாடிய இன்னாநாற்பதிலும்

"முக்கட் பகவன் அடிதொழா தார்க்கின்னா
பொற்பனை வெள்ளையை உள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா ஆங்கின்னா
சத்தியான் றடொழா தார்க்கு"

என இந்நால்வரும் இம்முறையே கூறப்பெற்றனர். சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்

வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்"

எனவும், ஊர்காண் காதையில்,

"நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்"

எனவும் காவிரிப்பூம்பட்டினத்திலும், மதுரையிலும் இந் நான்கு தேவர்களின் கோயில்கள் இருந்தனவாக முறையே கூறப்பெற்றுள. இவற்றில் நால்வரின் முறை முற்கூறிய வாறன்றிச் சிறிது பிறழ்ந்துளது. எனினும், யாண்டும் சிவபெருமானே முதலில் வைத்துக் கூறப்படுகின்றனர். அன்றியும், அவர், பிறவாயாக்கைப் பெரியோன் எனவும், பகவன் எனவும், இறையோன் எனவும் தலைமை தோன்றக் கூறப்படுதலும் சிந்திக்கற்பாலது. வேறிடங்களில் இன்னும் வெளிப்படையாகவும் சிவபிரானுக்கு முதன்மை கூறப்பெற்றுளது.

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவாள் நெடியோன் தலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர்"

என மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியிலும்,

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக"

எனக் கூலவாணிகன் சாத்தனார் மணிமேகலையிலும் கூறியிருத்தல் நோக்குக. இவ்வாற்றால், தொன்றுதொட்டுத் தமிழ்மக்கள் முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபட்டு வந்த தெய்வம் சிவபெருமானே என்பது வெள்ளிடைமலைபோல் தெள்ளிதின் விளங்கும். பிற்காலத்துச் சமண வாசிரியர் முதலாயினோரும் தமிழ் வழக்கின் இவ்வுண்மை

யுணர்ந்தே தம் நூல்களில் பல கடவுளரையும் கூறுமிடத்துச் சிவபெருமானை முதற்கண் வைத்துக் கூறிப்போந்தனர். நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார் முதலிய உரையாசிரியன்மாரும் இந்நெறி பிழையாமலே உரை வரைவாராயினர். இங்ஙனமாயினும், பண்டைத் தமிழ் மக்கள் திருமாலிடத்தும் செவ்வேளிடத்தும் நிறைந்த அன்புடையராகவே விளங்கினர். இன்னோரையும் உலகங் காக்கும் கடவுளராகப் போற்றிப் புகழ்ந்தனரே யன்றி ஒரு சிறிதும் குறைவுபடக் கூறினாரல்லர். மற்றும், தொகை நூல்களின் கடவுள் வாழ்த்திலும், பரிபாடலிலும் சிவபிரானோடு வேற்றுமையில்லாத முதற் றெய்வங்களாகவே இவர்கள் பரவப்படுகின்றனர். இன்னும், சிவ வழிபாட்டினும் செவ்வேள் வழிபாடு விஞ்சியிருந்ததெனக் கூறுதலும் சாலும். பத்துப்பாட்டில் ஒருபாட்டும் (திருமுருகாற்றுப் படையும்), பரிபாடலில் முப்பத்தொரு பாட்டும் முருகப் பிரானுக்கு உரியவாயிருத்தலே இவ்வுண்மையை விளக்கும்; முருகவேள் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகள் பல சங்கச் செய்யுட்களிற் பயின்றிருத்தலும் அதற்குச் சான்றாகும். திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் முதலிய திருப்பதிகளைத் திருமுருகாற்றுப் படை கூறுகிறது. பரிபாடலும், பிற தொகைகளும் அவற்றைப் புகழ்ந்துரைக்கின்றன; சிலப்பதிகாரமும்,

> "சீர்கெழு செந்திலும் §செங்கோடும் வெண்குன்றும்
> ஏரகமும் நீங்கா இறைவன்"

என்றேத்துகின்றது.

---

§செங்கோடு என்பது திருச்செங்கோடு என்றும், வெண்குன்றம் என்பது சுவாமிமலை என்றும் கூறுவர் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர். ஏரகம் மலைநாட்டகத்தொரு திருப்பதி என்பர் நச்சினார்க்கினியர்.

இனி, பழைய தமிழ் மக்களின் சமயக் கோட்பாடு இதுவெனக் கூறவே சோழர்களின் சமயமும் இத்தன்மைத்தென்பது கூறுமலே விளங்கும். சோழமன்னர்கள் சிவபெருமானையே முதற்கடவுளாகக் கொண்டு வழிபடுவோர் என்பதும், திருமாலிடத்தும் செவ்வேளிடத்தும் பேரன்புடையார் என்பதும் கடைப்பிடிக்க. கரிகால்வளவன், கோச்செங்கண்ணார் என்னும் சோழ வேந்தர்கள் பற்பல சிவாலயத் திருப்பணிகள் செய்து போந்தமையும் அவர்கள் சமயம் சைவம் என்பதனை நிலைநிறுத்தும். சோழர்கள் இந்திரனுக்குப் பெரியதோர் திருவிழாச் செய்து போந்ததிலிருந்து, அவர்கள் நாட்டின் நலங்கருதி இந்திரனையும் அன்புடன் பூசித்து வந்தன ரென்பது பெறப்படும். அவர்கள் இந்திரனைப் பெருஞ் சிறப்புடன் கொண்டாடி வந்த காரணத்தால் அவனுடைய கற்பகத்தரு, வெள்ளையானை, வச்சிரப்படை என்பவற்றுக்கும் புகார்நகரிலே தனித்தனியாகக் கோயில்கள் ஏற்படுவன வாயின.

இனி, வடநாட்டிற் செங்கோலோச்சிய பெருவேந்தனாகிய அசோகன் தன் மக்களாகிய சங்கமித்திரை, மகேந்து என்பவர்களுடன் புத்தமத போதகர் பலரைத் தேயந்தோறும் விடுத்து அம் மதத்தைப் பரவச்செய்தமையால், கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே பௌத்தமதம் தமிழ் நாட்டிலும் இடம்பெற்று வளரத்தொடங்கிற்று. சமண மதமும் அக்காலந் தொடங்கியே பரவலுற்றது என்னலாம். சிலப்பதிகாரம் முதலியன கொண்டு நோக்கு மிடத்து, கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளிலே, தமிழ் நாட்டின் தலைநகரங்களாகிய புகார், உறந்தை, மதுரை, வஞ்சி, காஞ்சி என்னும் இடங்களில் சமண பௌத்த மதங்கள் மிக்க வலிமையுற்றிருந்தமை புலனாகின்றது. அருகன் கோட்டமும், புத்த சைத்தியமும் நகர்ப் புறங்களில் கட்டப்பட்டிருந்தன; சமண முனிவர்களும், பௌத்த முனிவர்

களும் உறையும் பள்ளிகள் ஆங்காங்கிருந்தன; சாரணர்கள் இடையறாது மதபோதனை புரிந்து வந்தார்கள்; ஆடவர்களும் பெண்டிர்களும் மிகுதியாக அம்மதங்களிற் புகுவாராயினர். அக்காலத்துத் தமிழ் வேந்தர்கள் நடுவுநிலையுடன் இத்தனைக்கும் இடந்தந்து அவர்களையும் புரந்து வந்தமை பெரிதும் பாராட்டற் குரியது. சிவன், திருமால் முதலிய தெய்வங்களை எள்ளுதலின்றியே அவர்கள் தம் மதங்களைப் போதித்து வந்தமையாற்றான் அவை விரைந்து பரவலுற்றன எனக் கருதுதல் பொருந்தும்.

இனி, அக்காலத்திலுள்ள புலவர்களாயினும் பிறராயினும் அவர்கள் தம்மின் வேறுபட்ட சமயத்தார்களின் உணர்ச்சியை மதித்து அவற்றைச் சிறிதும் இகழாது பாராட்டி வந்தனர் என்பதும், ஓர் குடும்பத்திலுள்ள பலர் தத்தம் விருப்பத்திற் கியைந்தவாறு வெவ்வேறு மதங்களைக் கைக்கொண்டும் தம்முள் வேற்றுமை சிறிதுமின்றி ஒழுகி வந்தனர் என்பதும் பழைய இலக்கியங்களினின்றும் அறியலாகின்ற உண்மைகளாம். எச்சமயத்தையும் இகழாது போற்றும் பெருந்தன்மையுடைமைக்குத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரையும் இளங்கோவடிகளையும் சிறந்த எடுத்துக் காட்டாகக் கொள்ளல் தகும்.

வள்ளுவனார்,

"நூலோர் தொகுத்தவற்று ளெல்லாம் தலை"

"பல்லாற்றால் தேரினு மஃதே துணை"

என்றிங்ஙனம் எல்லா நூலினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறிச்செல்வர்; எம் மதத்தையும் இகழார்.

இளங்கோவடிகள், தம் தமையனாகிய செங்குட்டுவன் சிவபெருமான் திருவருளாற் பிறந்தவன் என்றும், அவன் இமயஞ்செல்லப் புறப்பட்டபொழுது உலகுபொதியுருவத்

துயர்நீக்கோனாகிய சிவபிரான் சேவடியை முடிமேற் கொண்டு யாரையும் இறைஞ்சாச் சென்னியால் இறைஞ்சி வலங்கொண்டு போந்து யானையின் பிடரில் ஏறியருளி, பின்பு ஆடகமாடத்து அறிதுயிலமர்ந்த திருமாலின் சேடங் கொண்டுவந்து சிலர் நின்று துதித்தகாலையில் தான் சிவபெருமான் திருவடியை மணிமுடிமேல் வைத்திருத்தலின் அதனை வாங்கித் தோளின்மீது தரித்தனன் என்றும் கூறுமுகத்தால் செங்குட்டுவன் சிவபெருமானையே முழுமுதலாகக்கொண்டு வழிபடுவோன் என்பது பெறவைத்து, தம் கொள்கையும் அதுவாதலை 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்பது முதலியவற்றாற் குறிப்பிட்டனர். அன்னராயினும், அவர், கவுந்தியடிகள் அருக தேவனை வாழ்த்துதல் கூறுமிடத்து,

"ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகம் திறவா
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாமம் அல்லது நவிலா தென்னா
ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா என்கண்
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது"

என்றிங்ஙனமும் ;

வேட்டுவவரியில் அவர்கள் கொற்றவையைப் பரவுமிடத்து,

"அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாட் டடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை"

"ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்"

என்று இவ்வாறாகவும்;

ஆய்ச்சியர்குரவையில் அவர்கள் திருமாலைப் பரவுமிடத்து,

"மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே"

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே"

என்று இத்தன்மையாகவும்;

குன்றக்குரவையில் குறவர்கள் முருகவேளைப் பாடுமிடத்து,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே"

"அணிமுகங்க ளோராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்தியவே லன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே"

என்று இன்னணமும்; அவரவர் உணர்ச்சியுடன் கலந்து எல்லாத் தெய்வங்களையும் வாயார மனமார வழுத்து வாராயினர்.

இனி, சிவபிரான் திருக்கோயில் முதலாக முன் கூறிப் போந்த கோயில்களன்றி, மாசாத்தன், ஞாயிறு, திங்கள் என்னும் தெய்வங்கட்கும், திருக்கைலை, செவ்வேளின் கைவேல் என்பவற்றுக்கும் தனித்தனியாக இயற்றப்பெற்ற கோயில்கள் அந்நாளிலே நிலவின வென்க.

# குறிப்புரை.

---

முகவுரை: மூவர்-மூவேந்தர். பொழில்-உலகம். நூக்க-தள்ள. துறக்கம்-சுவர்க்கம். அகத்து உழிஞையான்-பகைவர் மதிலை முற்றுகையிட்ட பொழுது உள்ளிருந்து மதிலைப் பாதுகாப்போன்.

பக்கம் 1. தெக்கணம்-தென்றேயம்; விந்தியமலைக்குத்தெற்கிலுள்ள நாடு.

ப. 2. நிலைக்களன்-இடம். அலங்கு-அசையும். உளை-குதிரையின் பிடரி மயிர்; குதிரையின் தலையாட்டம் என்னும் அணி. ஐவர்-பாண்டவர். சினைஇ-கோபித்து. பொலம்-பொன். ஈரைம்பதின்மர்-துரியோதனன் முதலிய நூற்றுவர். பதம்-உணவு.

ப. 3. சேய்-முருகன் போலும் அரசன். கபாடபுரம்-இடைச்சங்கம் இருந்த நகரம். வழங்குவது-கொடுத்தற்குரிய பொருள். உள்வீழ்ந்தக்கண்ணும்-குறைந்தவிடத்தும். தலைப்பிரிதல்- நீங்குதல்.

ப. 4. கோல் நிலைதிரிந்து-அரசன் செங்கோல் கோணுதலுற்று.

ப. 5. கழுமிய-நிறைந்த. கவான்-தொடை. பதிஎழுஅறியா-பதியினின்றும் பெயர்தல் அறியாத.

ப. 6. கருவனாய்-செருக்குடையவனாய்; காரணமானவனாகி என்றுமாம். மருவனாய்-மணம்போல்வானாகி.

ப. 8. கஞ்சம்-நீர். காந்தமன்-காந்தனாகிய அரசன். செங்கண் ஆயிரத்தோன்-இந்திரன். ஆரம் பூண்டோன்-பாண்டியன்.

ப. 12. கழுவாய்-பிராயச்சித்தம். தூங்கியது-தொங்கியது. துணுக்குற்று-திடுக்கிட்டு.

ப. 13. சூழ்வுற-ஆலோசிக்க. உஞற்றுதல்-செய்தல்.

ப. 15. ஆவின் கடைமணி-பசுவின் கடைக்கண்.

ப. 16. விஞ்சையன்-வித்தியாதரன்.

ப. 17. முசு-குரங்கின் ஒருவகை. முசுக்கலை-ஆண்குரங்கு.

ப. 18. விசிட்டம்-மேன்மை.

ப. 19. வெள்ளிவிண்டு-வெள்ளிமலை. இக்குவேள்-கரும்பு வில்லையுடைய மன்மதன். ஆரிஐய-உமாதேவியார். கூவிளம்-வில்வம். குயிற்றிய-செய்த. வேலை சுலாவும்-கடல் சூழ்ந்த.

ப. 20. மேகவாகனன்-இந்திரன். அனிகம்-சேனை. சீகரம்-நீர்த்துளி. ஆரல்-கார்த்திகை. துலையாம் திங்கள்-ஐப்பசி மாதம்.

ப. 21. அருத்தி-விருப்பம். ஒன்னலர்-பகைவர்.

ப. 24. கொடுவரி-வளைந்தவரிகளையுடையது; புலி.

ப. 25. விழாக்கோள்-திருவிழாச்செய்தல்.

ப. 29. வான ஊர்தி-தெய்வ விமானம்.

ப. 30. புன்கண்-துன்பம். அலமரல்-வருத்தம். கனலி-சூரியன். கால்-காற்று. கொட்குந்-திரியும். மருள-வியக்க.

ப. 31. ஏறு-எற்றுதல். தபுதி-அழிவு. சீரை-துலாம். மருகன்-சந்ததியில் வந்தோன்.

ப. 33. குடகக்குவடு-குடகமலை. மழுவாள்நெடியோன்-பரசுராமன். கன்னி-துர்க்கை. கூஉய்-அழைத்து. உள்வரிக் கொண்டு-வேற்றுருக்கொண்டு.

ப. 34. உட்கும்-அஞ்சும். ஊங்கணோர்-முன்னோர். மேம்படீஇய-மேம்படுத்த.

ப. 35. உருமு-இடி. சுவல்-தோள்.

ப. 36. வெண்ணி-கோயில் வெண்ணி என்னும் ஊர் எனக் கருதுவர். பறந்தலை-போர்க்களம்.

ப. 37. அறிவர்-சோதிடர்.

ப. 38. கரவால்-வஞ்சனையால். செவ்வி-தருணம்.

ப. 39. கொடுவரிக்குருளை-புலிக்குட்டி. பிணி-சிறை. காழ்-வயிரம்; வலிமை. நண்ணார்-பகைவர். காப்பு-மதில். உரு-உட்கு; அச்சம்.

ப. 40. சக்கரம்-உலகம். அரிகால்-நெல் அரிந்த தாள்.

ப. 42. செவியாறல்-கன்னபரம்பரை.

ப. 43. கன்னிப்போர்-முதற்போர்; "காருத்தன் கன்னிப் போரில்" என்பது கம்பராமாயணம். மீக்கூறல்-புகழ்தல். மொய்ம்பு-வலிமை.

ப. 44. மொய்வலி-மிக்கவலி. தொய்யா-இளையாத. சூடா வாகை-வாகை என்னும் இடம்; வாகைப் பூவின் நீக்கு, தற்குச் சூடாவாகை என்றார்; இது வெளிப்படை எனப் படும். ஆடு-வெற்றி.

ப. 45. பட்டி மண்டபம்-வித்தியா மண்டபம். காமகோட்டம்-காமாட்சி யம்மை கோயில்.

ப. 48. முகரி-ஆரவாரஞ்செய்வோன். குயம்-அரிவாள். சூடு கோடாகப்பிறக்கி-நெல்லரிந்த சூட்டை மலையாக அடுக்கி. குவைஇய-திரட்டின. குப்பை-நெற்பொலி. கடுந்தெற்று மூடை-நெருங்கத்தெற்றினசேர்; மூடை-கோட்டையுமாம். சாலிநெல்-செந்நெல்.

ப. 49. பரி-செலவு. கால்-வண்டி; காற்றுமாம். கறிமூடை-மிளகுபொதி. வாரி-வருவாய். காழகம்-பர்மா. கூலம்-நெல் முதலிய தானியங்கள்.

ப. 50. மயிர்-எலிமயிர். காருகமாக்கள்-பட்டுச்சாலியர். கஞ்சகாரர்-வெண்கலக்கன்னார். கருங்கை-வலியகை. கண்ணுள் வினைஞர்-சித்திரகாரிகள். மண்ணீட்டாளர்-சிற்பாசாரிகள். நன்கலம் தருநர்-இரத்தினப் பணித்தட்டார்.

துன்னகாரர்-தையற்காரர். கிழி-சீரை. கிடை-நெட்டி. உறந்தை போக்கி-உறையூரைப்புதுவதாகச்செய்து.

ப. 51. புழை-சிறுவாயில். ஞாயில்-மதின்மேற் சூட்டு. புதை-அம்புக்கட்டு.

ப. 55. வஞ்சிக்கோன்-சேரமன்னன். மாதிரம்-திசை. துழைஇ-துழாவி.

ப. 58. அமலை-சோற்றுத்திரளை. கோயில்-அரண்மனை.

ப. 60. நொதுமலாளர்-குறளை கூறுவார். உடன்று-வெகுண்டு. வாய்-இடம்.

ப. 61. முறை-நீதி. முட்டாமல்-குறைவுபடாமல்.

“இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்”

என்னுங் குறளும், ‘முட்டாமற் செலுத்தியவாறு மகனை முறை செய்தான்கண்ணும மைகுறைததான் கண்ணும் காண்க’ என்னும பரிமேலழகர் உரையும இங்கு நோக்கற்பாலன.

ப. 62. தார்-தூசிப்படை. சிலைக்கொடி சேரர்க்கும், கயற் கொடி பாண்டியர்க்கும உரியன.

ப. 63. வியா-கெடாத. துப்புஆகியர்என-வலியாகவேண்டு மென்று. சூழ்-பொருள்.

ப. 64. கடும்பு-சுற்றம். பாணர்-புதுவருவாய். இமிர்ந் தன்ன-ஒலித்தாற்போன்ற.

ப. 65. எழிலி-மேகம். வற்புலம்-மேட்டுநிலம். ‘எறும்பு முட்டை கொண்டு திட்டை யேறினால் மழை பெய்யும்’ என்பது வழக்கு. வீற்றுவீற்று-வேறுவேறு. தெற் றென-விரைய.

ப. 67. வேட்கோவர்-குயவர்.

ப. 69. தீஞ்சேறு-இனிய செறிவு. மிடைந்தன்று-மிடைந் தது; கட்டப்பட்டது.

பா. 71. நல்லதன் நலனும் தீயதன் தீமையும்-நல்வினையினது நன்மையும் தீவினையினது தீமையும்.

பா. 73. புலன்-பாட்டு. பாடு-ஓசை.

பா. 75. மதிமருள்-சந்திரனையொக்கும்.

பா. 77. வல்சி-உணவு. புலம்ப-தனிமையுற.

பா. 80. யாங்கு ஆகியர்-எப்படி ஆயிற்று. மாண்ட-மாட்சிமைப்பட்ட. நிரம்பினர்-அறிவு நிரம்பினர். இளையர்-ஏவல் செய்வார். அதன்றலை-அதன்மேலும். ஆன்று-நற்குணங்களால் அமைந்து. அவிந்து—உயர்ந்தோரிடத்துப் பணிந்து. அடங்கிய-ஐம்புலனும் அடங்கிய. உழுவல் அன்பு-எழுமையும் தொடர்ந்துவரும் அன்பு.

பா. 81. ஆடு-அடுதல்; கொல்லுதல். கோடு கூடு-இரண்டு பங்கும் வந்து பொருந்திய. கையறுபு-செயலற்று. குறும்பறை-பெடை. அடியுறை-பாதத்தின்கீழ் வாழ்வோன்.

பா. 82. தக்கார்-நடுவுநிலையுடையார். எச்சம்-மக்கள்.

பா. 83. பைஅவிந்த-படம் ஒடுங்கிய.

பா. 84. கசடு-அழுக்கு. வேட்டம்-விருப்பம். தொய்யா-இருவினையும் செய்துவருந்தாத.

பா. 87. போற்றி-பாதுகாத்து. கந்து-பற்றுக்கோடு.

பா. 88. தொடைபுணர்ந்து-கோவைபொருந்தி.

பா. 90. பண்டாரம்-பொக்கிஷம். சந்திர தீர்த்தம்-ஸ்ரீரங்கத்திலுள்ள சந்திரபுட்கரணி.

பா. 93. உதியன், வில்லவன், பொறையன் என்பன சேரர்க்குரிய பெயர்கள். அணங்கு படுத்து-துன்புறுத்தி.

பா. 94. பற்றுக்கோட்பட்டு-சிறைப்பிடிக்கப்பட்டு. கவ்வை-முழக்கம்.

பா. 96. அருண்டு-பயந்து.

பா. 98. வாரணம்-யானை, கோழி.

ப. 101. முகமன்-உபசாரம்.

ப. 102. மண்ணுதல்-கழுவுதல்.

ப. 106. பால்-ஊழ். முனைவன்-முதல்வன். கட்டு-பந்தம். மணிமிடறு-நீலகண்டம். முன்பு-வலிமை.

ப. 108. உவணச்சேவல்-கலுழன். நியமம், நகரம், கோட்டம் என்பன கோயிலைக்குறிக்கும் பெயர்கள். மழுவாள் நெடியோன்-சிவபெருமான்.

ப. 112. ஆடகமாடம்-திருவனந்தபுரம் என்பர். சேடம்-பிரசாதம். ஒரு மூன்று அவித்தோன்-காம வெகுளி மயக்கங்களைக் கெடுத்தவன். ஐவரை-பஞ்சேந்திரியங்களை; செறலின்கண் வந்த திணைமயக்கம். கைவரை-கையகத்தே. பொருள்இல்-பயனற்ற. இளங்கிளை-தங்கை. பாய்கலை-மான். ஆய்கலை-நூல்.

ப. 113. மறைமேல் மறையாகி-நான்மறைக்கும் மறைப்பொருளாய். சோஅரண்-சோவாகிய அரண்; வாணாசுரனது கோட்டை. பௌவம்-கடல். சூர்மாதடிந்த-சூரபன்மனாகிய மாமரத்தினைத்துணித்த. பிணிமுகம்-முருகப்பெருமான் ஏறும் யானை; மயிலும் ஆகும். வெள்வேல்-வெள்ளொளி பொருந்திய வேல்.

52172a